Registered as a Newspaper in Srilanka

வெள்ளிக் கிழமைகளில் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்

MUSLIM KURAL

# முஸ்லிம் குரல்

මුස්ලිම් කුරල්    صوت المسلم

சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்கு

தருகை - 20 ரூபா | 12 டிசம்பர் 2003 வெள்ளிக்கிழமை | 18 ஷவ்வால், 1424 | சுவடு - 27




## சந்திரிகா-ஜேவிபி கூட்டு இறுதிக் கட்டத்தில்!

இறுதியாக நடைபெற்ற சந்திரிகா, ஜே.வி.பிக்கிடையிலான பேச்சுவார்த்தையின் போது ஜே.வி.பி. பெருமளவில் இறங்கி வந்து சந்திரிகாவுடன் சமரசம் செய்யத் தயாராகி இருப்பதை வெளிப்படுத்தியுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் சமர்ப்பித்த இரு முக்கிய திருத்தங்களை ஜே.வி.பி. ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப் படவுள்ள திகதி அறிவிக்கப்படுமெனவும் ஜே.வி.பி. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அஷ்ரஃப் காங்கிரஸ் ஆட்டம் காண்கிறது!



## முகைதீன் அப்துல் காதர் மு.காவில் இணைந்தார்!

கொழும்பு அரசியல் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. அரசியல் சதுரங்கக் காய் நகர்த்தல்கள் வேகமாக நிகழத் தொடங்கிவிட்டன. இந்த அரசியல் விளையாட்டிற்கு ஈடுகொடுக்கும் முகமாக முஸ்லிம் அரசியலும் தனது ஆடுகளத்தை தயார்படுத்தி வருகிறது. இச் சதுரங்க அரசியல் காய்நகர்த்தலில் முதல் காயாக, கல்குடாப் பிரதிநிதி முகைதீன் அப்துல் காதர் தனது இடத்தை மாற்றிக் கொண்டு விட்டார்! இன்னும் பலர் இந்த சதுரங்க அரசியல் ஆட்டத்தில் தங்கள் இடங்களை மாற்றிக் கொள்ளவுள்ளனர். இதற்கான பேச்சுகள் தொடர்ந்து வருகின்றன. புதிய தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளும் சூழல் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், கட்சி அரசியலில் இப்படியான முடிவுகள் முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

கடந்த காலத்தில் மு.கா தலைவரின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்து, பிரிந்து சென்று அஷ்ரஃப் காங்கிரசை உருவாக்கியதில் முகைதீன் அப்துல் காதர் பிரதான பங்கு வகித்தார். மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த இவர், அரசியல் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டமுடியாத நிலையிலுமிருந்தார். இப்போது மு.கா. தலைமையை ஏற்றுக் கொண்டு தனது தாய்க்கட்சிக்கே சென்று விட்டார்! அஷ்ரஃப் காங்கிரசிலிருந்து மு.கா. தலைமையுடன் மீளச் சென்று இணைந்து விட்ட மூன்றாவது எம்.பி இவர், தொடரும் இந்நிலையால் அஷ்ரஃப் காங்கிரஸ் ஆட்டம் கண்டுவருகிறது.

நமது அரசியல் அரங்கில் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் போராட்டத்தை தனிமனிதர்களின் நலன்களை காப்பாற்ற பாவிக்க முற்படும் செயற்பாடுகள் தொடர்கின்றன. தங்களின் தனிப்பட்ட முடிவுகளை மக்களின் முடிவுகளாகக் காட்டுவதும், பிரிந்து போனால் அதுதான் சரி எனவும், இணைந்தால் இதுவும் சரிதான் எனவும் மக்களை மந்தைக் கூட்டங்களாக வழிநடாத்துவதும், அபிப்பிராயங்களை உருவாக்குவதும் நமது அரசியல் அரங்கில் விசித்திரமான ஒரு செய்தி இல்லைதான். தொடரும் இந்த மோசமான சந்தர்ப்பவாதங்கள், முஸ்லிம் சமூகத்தின் இன்றைய நெருக்கடியான அரசியல் சூழலுக்கு எந்தவிதத்திலும் ஆரோக்கியமானதல்ல. இச்சந்தர்ப்பவாதப் போக்குகளை துடைத்தழிக்க வேண்டிய பொறுப்பு மக்களாகிய நமது கைகளில்தான் தங்கியுள்ளது. இந்த உண்மையை மக்களாகிய நாம் கடந்த காலம் தந்த கசப்பான அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளவில்லையா?

முஸ்லிம் மக்களின் நலனில் உறுதியாக நின்று முடிவெடுக்கக்கூடிய மக்கள் சக்திகளால்தான் நமது அரசியல் தலைமைகளை செம்மையாக வழிநடாத்த முடியும். இல்லையேல் எல்லோருக்கும் சொல்வதற்கும், அவர்கள் செய்ததற்கும், எதிர்காலத்தில் செய்ய இருப்பதற்கும் அவரவர்களிடம் பல்வேறு நியாயங்கள் இருக்கும். கடந்தகாலம் தொடர்பாக நமது மக்களின் நியாயமான கேள்விகளுக்கு நமது அரசியல் தலைமைகள் யாரும் இதுவரை பதிலளிக்கவில்லை. இந்த நிலையில் இவர்கள் பிரிவதும் சேருவதுமான நாடகங்கள் நடக்கின்றன. யாருக்குத்தேவை இந்த ஆடு புலி ஆட்டம்?

## அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க நாட்டை விட்டு தப்பியோட்டம்! கொழும்பு அரசியலில் பரபரப்பு



விவசாய, சமூர்த்தி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தனது மனைவி, இரண்டு பிள்ளைகள் மற்றும் ஒரு நண்பருடன் கடந்த 30ம் திகதி கட்டுநாயக்காவிலிருந்து லண்டன் நோக்கிப் புறுப்பட்ட UL 545 என்ற விமானத்தில் நாட்டைவிட்டு திடீரென தப்பியோடி உள்ளார். இவரின் இச்செய்கை கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சந்திரிகா, ரணில் இடையில் ஒரு இணக்கப்பாடு வரும் வரைக்கும் எஸ்.பி. திசாநாயக்கா நாடு திரும்புவதற்கான வாய்ப்பு மிகக் குறைந்தளவிலேயே உள்ளதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி பாதுகாப்பு, மற்றும் உள்துறை அமைச்சை கையில் எடுத்தவுடன் நாட்டை விட்டு வெளியேற எஸ்.பி. எடுத்த முயற்சியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தடுத்து நிறுத்தியதாகவும் ஆனால் நிலைமை தொடர்ந்து மோசமாவதை அடுத்து பிரதமருக்குக் கூடத் தெரியாமல் எஸ்.பி. நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார்!

## இந்த வரவு செலவுத் திட்டத்தில் எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை! -சம்பள உயர்வும் போதுமானதாக இல்லை!- தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் எதிர்பார்த்த அளவிற்கு நாட்டு மக்களுக்கு நிவாரணங்களைக் கொண்டு வரவில்லை. மாறாக அதிகமான சுமைகளை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் சுமத்தியுள்ளன என இலங்கை வர்த்தக, தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த மூத்த தொழிற்சங்கவாதி பாலதம்பு தெரிவித்துள்ளார். சகல நிலைமைகளையும் பற்றி யோசித்ததன் பின்பே நாம் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி விமர்சிக்க வேண்டும். ஏழைகள் நடுத்தர மக்களால் வாழமுடியாத அளவிற்குப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அதற்கு காரணம் இந்த வரவு செலவுத் திட்டம் மட்டுமல்ல. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தினால் அதற்குக் கூட குறைந்தளவிலான நிவாரணமும் கிடைக்கவில்லை என்பதே எமது கருத்தாகும். தொழிலாளர், அரச ஊழியர்களுக்குப் போதிய சம்பளம் வழங்கப்படவில்லை. ஏழைகள் நடுத்தர மக்கள் வாழவே முடியாதுள்ளது. இவற்றுக்கு நீதி வேண்டிப் போராடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம்களைப் புறக்கணித்த எந்தத்தீர்வையும் இந்தியா ஏற்கப்போவதில்லை!

### -ஹரீஸ் எம்.பி -



கடந்த வாரம் டில்லிக்குச் சென்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் யஸ்வத் சின்ஹா இலங்கை முஸ்லிம்களை புலிகள் தொடர்ந்தும் புறக்கணித்துவரும் நிலைப்பாட்டை வன்மையாகக் கண்டித்ததாக ஹரீஸ் எம்.பி எமது செய்தியாளருக்குத் தெரிவித்தார். வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்படும் எந்தத்தீர்வும் முஸ்லிம்களின் பாதுகாப்பை அரசியல் ரீதியாக உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதில் இந்தியா அக்கறையுடன் இருப்பதாகவும், இதனையே சர்வதேச சமூகத்திற்கும் வலியுறுத்தி வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்குச் சென்ற குழுவினரில் எம்.பிக்களை மட்டும் சந்திப்பதற்கே இந்திய வெளிவிவகாரத்துறை இணங்கியது. தூதுக்குழுவில் சென்ற ஏனையோர் இச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

## வான் தாக்குதலில் ஆப்கானில் ஒன்பது சிறுவர்கள் பலி!

கடந்த புதன்கிழமை அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானிலுள்ள காஸ்னி நகரில் மேற்கொண்ட விமானத் தாக்குதலின்போது ஒன்பது சிறுவர்கள் பலியாகி உள்ளனர். தலிபான் தலைவரொருவர் இத்தாக்குதல் நடவடிக்கையின்போது கொல்லப்பட்டதாக அமெரிக்க செய்தி நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

ஆனால் அங்கு கொல்லப்பட்டவர்கள் சிறுவர்கள் என நிரூபிக்கப்பட்டதும் ஆப்கானிலுள்ள அமெரிக்கப் படைத்தரப்பு பேச்சாளரான லியன் கில்பர்ட் இத் தாக்குதல் நடவடிக்கை புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் இத்தாக்குதலில் சிறுவர்கள் உயிரிழந்ததற்கு தனது கவலையைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.




**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக் குரல்! சுதந்திரத்திற்கான குரல்!!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூதூர் முஸ்லிம்கள் மீதான முற்றுகையைத் தகர்க்க A15 நெடுஞ்சாலை திறக்கப்படல் வேண்டும் !

முஸ்லிம் தலைமைகள் பதவிமெத்தைகளில் தூங்கிக் கொண்டிருக்க. முஸ்லிம்களின் தோளில் ஏறிய ஐ.தே.மு. அரசு கபடத்தனமாக புலிகளோடு மாத்திரம் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தத்தில் மூடிமறைக்கப்பட்ட முஸ்லிம்களின் பல்வேறு நலன்களில் ஒன்றுதான் A15 மூதூர் - கிண்ணியா நெடுஞ்சாலையாகும். A-9 பாதை போன்றுதான் A-15 நெடுஞ்சாலையும் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டது. ஆயினும் A-9 பாதை (தமிழ் மக்களுக்கு பயன்பட வேண்டியிருந்ததனால்) ஒப்பந்தத்தில் இடம்பெறச் செய்யப்பட்டு நாட்கள் குறிப்பிடப்பட்டு திறக்கப்பட்டும் விட்டது. ஆனால் A-15 பாதையானது (முஸ்லிம்கள் பயனடைந்து விடுவர் என்பதால்) ஒப்பந்தத்தின் அருட்பார்வை கிட்டாததால் இன்றளவும் மூடியே கிடக்கிறது. அதேவேளை A-4 என்று அழைக்கப்படும் செங்கலடி - பதுளை பாதையானது ஒப்பந்தத்தில் குறிப்பிடப் படாததாயினும் திறக்கப்பட்டு பாவனையில் உள்ளது. இற்றைக்கு தோப்பூர். மூதூர். கிண்ணியா போன்ற முஸ்லிம் பிரதேசத்திலுள்ள 15 அல்லது 20 வயதுடைய ஒரு நபருக்கு மூடிக்கிடக்கும் A-15 நெடுஞ்சாலை பற்றி எதுவுமே தெரியாது. அந்தளவுக்கு மக்கள் அரங்கத்தில் இருந்து இப்பாதை திட்டமிட்ட அடிப்படையில் மறக்கடிக்கப்பட்டு வருகிறது.

நிலத்தை அபகரிக்கும் நோக்கோடு மீள்குடியேற்றம் செய்யப்படாததனால் இருண்டும். சிதைந்தும். சூறையாடப்பட்டும். பற்றைகள் படர்ந்தும் காணப்படும் முஸ்லிம்களின் பூர்வீக வாழிடங்களை. வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் பரவலாகக்



காணலாம். மேற்படி A-15 நெடுஞ்சாலையின் இருபுறமும் காணப்படும் நாவலடி. உப்பாறு. கங்கை. கண்டஏக்கர்காடு போன்ற பல முஸ்லீம்களின் பூர்வீகக் கிராமங்கள் அனைத்தும் இன்றளவும் மீள் குடியேற்றம் செய்யப்படாமல் இருண்டே கிடக்கின்றன. அங்கிருந்து புலிகளால் விரட்டப்பட்ட முஸ்லிம்கள் அகதிகளாகி மூதூர் மற்றும் கிண்ணியா பிரதேசங்களில் நண்பர்கள். உறவினர்களின் வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இதுபற்றி யார் கதைப்பது.....?

-முகம்மதலி ஜின்னாஹ். ஜே.பி.
மூதூர்



## குப்பைகளால் நிரம்பி வழியும் காத்தான்குடி வீதிகள்

காத்தான்குடி மெத்தைப் பள்ளி வீதியை மூடி மறைத்திருக்கும் குப்பைகளையே படத்தில் காண்கின்றீர்கள்.

காத்தான்குடியில் தினமும் 20தொன்களுக்கும் மேற்பட்ட குப்பைகள் சேர்கின்றன. நோன்புப் பெருநாள் முடிந்த நிலையில் பருவ மழையும் ஆரம்பித்துள்ள சூழலில் நகரின் ஒவ்வொரு தெருவும் குப்பை கூழங்களால் நிரம்பி வழிகின்றன. ஏற்கெனவே சுற்றாடல் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அகற்றப்படாமலிருக்கும் குப்பைகளால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து காணப்படுகின்றது. காத்தான்குடி நகர சபை இந்தக் கழிவுகளை எப்போது அகற்றும்?

படமும் தகவலும்: P.M. அலி அக்பர்


## கல்குடா இஸ்லாமிய இளைஞர் கலாசார கழகம்

### தஜ்வீத் பயிற்சிக் கலாசாலைக்கு புதிய மாணவ. மாணவிகளைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்.

எமது பிரதேசத்தில் சிறுவர். சிறுமிகள் அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஓதக்கற்றுக்கொள்ளவும் அன்றாட வாழ்க்கையின் மார்க்கச்சட்டங்களைத் தெரிந்து கொள்ளவும் தனியானதொரு தஜ்வீத் பயிற்சிக்கலாசாலை இல்லாதது நீண்ட காலத்தேவையாக இருந்து வந்தது. அது தற்போது ஒரு வருட காலமாக இஸ்லாமிய கலாசார நிலையத்தால் ஆரம்பிக்கப்பட்டு எமது பிரதேச சிறுவர்களின் தஜ்வீத் மற்றும் மார்க்கக்கல்வியை மிகச்சிறப்பாக பூர்த்தி செய்து வருகிறது.

அதேபோன்று இவ்வருடமும் புதிய மாணவ. மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதால் குர்ஆனை சரளமாக ஓதத்தெரிந்த மாணவ. மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறிப்பு - 1. இவ்வகுப்பு 4.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை நடைபெறும்.
2. விண்ணப்ப முடிவுத் திகதி 20.12.2003
3. நேர்முகப்பரீட்சைத் திகதி 25.12.2003
4. இவ்விண்ணப்பத்தை 20 ரூபா செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.

பெற்றுக்கொள்ளும் இடம்:-
தஜ்வீத் பயிற்சிக்கலாசாலை (பெண்கள் மத்ரஸாவுக்கு அருகாமையில்)
எம்.பீ.சீ.எஸ் வீதி. செம்மண்ணோடை
வாழைச்சேனை.

தொலைபேசி : 077-6015883

Advt.


நாட்டில் முப்பதாயிரம் பட்டதாரிகள் தொழிலின்றி இருப்பதாக மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சின் அறிக்கையொன்று தெரிவிக்கிறது. மேலும் பட்டதாரிகள் என்போர் இந்நாட்டின் பொக்கிசங்கள் என்றும். அவர்களை நாடு பயன்படுத்த வேண்டுமானால், பொருளாதாரத்தைச் சீர்படுத்தல் அவசியம் எனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முப்பதாயிரம் பட்டதாரிகள் தொழிலின்றி வாடுகின்றனர்

கல்வி என்பது இன்று ஒரு விற்பனைப் பொருளாக மாறிவிட்டது. உரிய திட்டமிடல் இன்றிப் பலர் ஒரு தொழிலை மேற்கொள்வதற்காகவே கல்வி கற்கின்றனர். இந்நிலை மாற்றப்படாதவரை - இந்நிலை தொடர்வதைத் தடுக்கவியலாது! நாட்டின் தொழில் நிலை இதோ -

* இதுவரை 20 ஆயிரம் பட்டதாரிகள் அங்காடி வியாபாரம் செய்கிறார்கள்.
* 12 ஆயிரம் பேர் சுவீப் டிக்கெட் விற்கிறார்கள்.
* 1 இலட்சம் பேர் ஆட்டோ ஓட்டுகின்றனர்.
* 80 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தொழில் இல்லாமையால் விரக்தியுற்று போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். இதுதான் இன்றைய நமது நாட்டின் நிலை. சீர்செய்வார்தான் யாருமில்லை.

## அமைச்சர் அஸ்வர் மீது வீண்பழி சுமத்தவில்லை!

எனது செய்திக்கு புத்தளம் தில்லையடியைச் சேர்ந்த எஸ்.எம். சலீம்கான் அஸ்வர் எம்.பி சார்பில் பதிலளித்திருந்தார். அதற்கான பதிலை இன்னும் மூன்று வாரங்களில் கணக்காய்வாளர் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்!




வீட்டில் இருந்து கொண்டு ஊழல் செய்பவர்களுக்கு வக்காலத்து வாங்குவது என்நோக்கமில்லை. இந்த உண்மையை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கில்தான் நுரைச்சோலை தபால் நிலையத்திற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகையை மதிப்பீடு செய்யும்படி கோரி உள்ளோம். பிரதமரின் தனிப்பட்ட செயலாளர் சுதத் சந்திரசேகர கணக்காய்வாளர் நாயகத்திற்கு இதுபற்றி எழுத்துமூலம் அறிவித்துள்ளார்!

இவ்வகையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அபிவிருத்திக்காக உலகவங்கியிடமோ. உலக நாடுகளிடமோ உதவி கேட்டுத்தான் அபிவிருத்தி நடக்கிறது. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒதுக்கப்படும் பணம் நல்ல முறையில் செலவு செய்யப்பட்டுள்ளதா அல்லது 50வீதம் செலவும் 50வீதம் சுருட்டலும் நடைபெறுகின்றதா என்பதை ஒவ்வொரு வாக்காளனும் கண்காணிப்பதற்கு உரிமை உண்டு.

நாம்கொடுத்த வாக்குப் பிச்சையால்தான் இவர்கள் அமைச்சர். எம்.பி. இவர்களுக்கு சம்பளம். வாகனம் இன்னும் என்னன்னவோ. அபிவிருத்தியிலும் ஊழல் செய்ய அனுமதிக்கக் கூடாது! இது நமது கடமையும். கண்காணிப்பும் ஆகும்.

எம்.சி. இப்னுமசூத். ஐ.தே.கட்சி அமைப்பாளர். புத்தளம் நகரசபை 6ம் வட்டாரம்.



## தீய சக்திகளினால் முடக்கமுடியாது!

'முஸ்லிம்களுக்கோர் தேசிய பத்திரிகை அவசியம்' என்ற கோசம் முஸ்லிம்களிடமிருந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது. அக்கோசத்தில் இணைந்து கொண்ட நானும் அந்த வெற்றிடத்தை நிரப்ப எப்போது? எங்கு? ஒரு பத்திரிகை உதயமாகுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

தூய எண்ணத்துடன் இயக்க பேதமோ. கொள்கை பேதமோ இன்றி நடு நிலையுடன் முஸ்லிம்களின் எழுச்சிக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் குரல் கொடுக்குமாயின் இந்த முஸ்லிம் குரலின் குரல் ஓயப்போவதில்லை. எந்தத் தீய சக்தியாலும் இதன் குரல் வளையை நசுக்கவும் முடியாது.

'முஸ்லிம் குரல்" அதன் சேவையைத் தொடரட்டும்! முஸ்லிம்களின் உயிர்நாடியாகத் திகழட்டும்!! நாளாந்தம் வெளிவரக்கூடிய தேசிய பத்திரிகையாக இது மிளிரட்டும். எல்லாவற்றுக்கும் அல்லாஹ் ஒருவனே போதுமானவன்.

யு.எல். முஸம்மில். ஹேனகெதர

## தொடர்க பணி...

முஸ்லிம் மக்களின் மிக நீண்ட கால குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் உதயமாகியுள்ள 'முஸ்லிம் குரல்" பத்திரிகையை படித்து வரும் ஆயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். நல்ல பல தகவல்களைத் தருவதில் தனக்கென இடம்பிடித்து நமது சமூகத்தின் குறைகளை உலகிற்கு எடுத்துச் சொல்லும் நமது குரலான 'முஸ்லிம் குரல்" தொடர்ந்தும் வெளிவர வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

எம்.பி. முஸ்தகீன்
166. விளையாட்டு மைதான வீதி.பாலமுனை.

## எனது கருத்து...

கடந்த 28.11.2003 முஸ்லிம் குரலில புலிகளின் யோசனைகள் பற்றி முஸ்லிம்களின் அபிப்பிராயம் என்ன? என்ற கேள்விக்கு என் அபிப்பிராயத்தை தெரிவிக்க விரும்புகின்றேன்.

சமாதானத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் புலிகள் தமக்கு பூரண அதிகாரம் கோரியுள்ள துறைகளில் எமக்கு செய்த அநீதிகள் யாவரும் அறிந்ததே! அது மட்டுமன்றி சமாதானம் என்ற சொல்லை வெளிப்பூச்சாக பூசிக் கொண்டு பொலிஸ் அதிகாரிகளை 'புற்றுக்குள் அடங்கிய ஈசல்களாகச்" செய்து தமது விருப்பப்படி மோட்டார் வாகனங்களையும். அறுவடை நெல். பணம் போன்றவற்றையும் அபகரித்தது மட்டுமன்றி. பொதுச்சந்தைகளில் கூட பட்டப்பகல் நேரங்களில் நாள்முழுவதும் வியர்வை சிந்தி உழைக்கும் பணங்களையும் கொள்ளையிட்டுக் கொண்டிருக்கும் இவர்களுக்கு பூரண அதிகாரத்தைக் கொண்ட இடைக்கால சுயநிர்வாக முறையை வழங்குவதானது 'ஓடும் குதிரைக்கு கடிவாளத்தை அறுத்துவிட்டது" போன்றே ஆகும்.

என். பாத்திமா அஸ்வி. ஓட்டமாவடி

## முஸ்லிம்களின் குரல் ஓங்கி ஒலிக்கிறது!

இம் முக்கிய கால கட்டத்தில் முஸ்லிம்களின் தனித்துவத்தை பேசும் நமக்கான பத்திரிகை ஒன்று வாரா வாரம் வருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு இனமும் தனக்குரிய பத்திரிகையை வைத்துக் கொண்டு தம் உரிமைகளை பேசுகின்றன. இத்தருணம் முஸ்லிம் குரலின் வருகை சிறப்பானதாகும். கடந்த இரு தசாப்தவடுக்களின் பின் முஸ்லிம் குரலின் வருகையால் எம் குரல் ஓங்கி ஒலிக்கிறது. ஒவ்வொரு முஸ்லிமும் இதனை பலப்படுத்துவதன் மூலம் நம் குரல் என்றும் ஒலிக்கும். இன்ஷா அல்லாஹ்.

எம். ஐ. றிஸ்வான்
பவளுட்ஸ் சமூகப் பணி
சாய்ந்தமருது -11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிச்சயமாக நம்புங்கள் - இந்த நாடு விரைவில் ஒரு பொதுத்தேர்தலை எதிர்கொள்வதைத் தவிர வேறு ஒரு மார்க்கமும் இல்லை என்பதை.
இன்றைய கொழும்பு அரசியலின் யதார்த்தமாகவும் இதுவே உள்ளது.

ஆகவே இலங்கை முஸ்லிம்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தங்களது பிரதிநிதித்துவத்தைக் காப்பது முக்கியமாகிறது. இதில் தென்னிலங்கையைப் பொறுத்தவரை சிங்களக் கட்சிகளில் உள்ள முஸ்லிம் பிரதிநிதிகளின் தெரிவிற்கு பலத்த சவால்கள் எதுவும் இதுவரை இல்லை. ஆனால் கிழக்கு வடக்கின் முஸ்லிம் பிரதிநிதித்துவங்களுக்கு பலத்த சவால் தோன்றியுள்ளது.

தனித்துவமான முஸ்லிம் பிரதிநிதிகளாகட்டும். ஐக்கிய தேசியக்கட்சியைக் சேர்ந்த முஸ்லிம் பிரதிநிதிகளாகட்டும் எல்லோருக்குமான நிலை இதுதான். உங்களில் யாராவது ஒருவருக்கு எதிர்வரும் பொதுத்தேர்தலில் இப்போது பாராளு மன்றத்தில் உள்ள கிழக்கு வடக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் நிச்சயமாகத் தெரிவாவார் என உறுதியுரையளிக்க முடியுமா? அப்படி உங்களால் உறுதியளிக்க முடியவே முடியாது. அந்த உறுதியுரை மு.கா. தலைவர் அஷ்ரஃப் அவர்களின் மறைவுடன் முடிந்த கதையாகிற்று.

கடந்த தேர்தல்களில் தாராளமாக கிழக்கு வடக்கில் பெற்று வந்த முஸ்லிம் பிரதிநிதித்துவம் எதிர்வரும் தேர்தலில் பலத்த சவாலை எதிர் கொள்வதற்கான நிலைமை பின்வரும் பிரதான காரணங்களால் நமது அரசியலில் ஏற்படுத்தப்பட்டுள்ளன என நாம் அடையாளம் காணலாம்.


01. மு.கா. பல்வேறு அணிகளாகப் பிரிந்து போனமை.

02. தமிழர் தரப்பு கணிசமாக ஐக்கியப்பட்டு ஒரு அரசியல் தலைமையின் கீழ் நிற்பது.

03. ஐக்கிய தேசியக் கட்சி மீதான முஸ்லிம் மக்களின் நம்பிக்கை இழப்பு

04. ஜே.வி.பியும் - பொது முன்னணியும் ஒண்றிணைந்து போட்டியிடும் அரசியல் நிலை (அம்பாரை. திருமலை. வன்னி)

05. நமது அரசியல் தலைமைகளின் திட்டமிட்ட நலன்களுக்காக ஏற்படுத் தப்பட்டுள்ள ஊர்/பிரதேச வாதங்கள்.



இவ் ஐந்து முக்கிய காரணங்களினாலும் நமது அரசியல் பிரதிநிதித்துவம் பெருமளவு வீழ்ச்சியுறும் நிலையை எதிர் நோக்கிக் கொண்டு செல்கிறது என்பதே உண்மையாகும். நமது சமூக அரங்கில் அகத்தினுள்ளும். நமக்கு வெளியே உள்ள புறநிலைமைகளாலும் நாம் மோசமான அரசியல் பிரதிநிதித்துவ நெருக்கடிக்கு எதிர்காலத்தில் தள்ளப்படவுள்ளோம்.

இந்த யதார்த்த நிலைமையை நாம் புரிந்து கொண்டால்தான் கிழக்கு வடக்கின் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் காப்பதற்கான தீவிர அரசியல் பணியில் ஈடுபட முடியும் என்பதை இப்போதைக்கு சொல்ல விரும்புகிறோம்.

இன்றைய அரசியல் யதார்த்தத்தின் படி நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒரு கூட்டு முன்னணியை அமைக்காது குழுக் குழுக்களாக பிரிந்து நின்று தேர்தலை எதிர் கொண்டால் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகள் இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்திகளாக ஜே.வி.பியும். விடுதலைப் புலிகளுமாய் விளங்குவதை உறுதிப்படுத்தும்.

புலிகள். ஜே.வி.பி பலம் பெற்று தீர்மானிக்கும் அரசில் முஸ்லிம்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை எண்ணிப்பார்ப்பதே அச்சத்தைத் தருகின்றது. புலிகளால் முன்வைக்கப்பட்ட தன்னாட்சித் தீர்வுத் திட்டத்திலேயே முஸ்லிம் சமூகத்தை வனக்குறவர்களை விட மோசமான ஒரு இனக்கும்பலாக சித்தரித்துள்ள புலிகள். அரசமைக்க ஆதரவு அளிக்கும் பட்சத்தில் நமது நிலையென்ன என்பதை முஸ்லிம் மக்கள் கவலையுடனேயே நோக்கத் தொடங்கியுள்ளனர்.

## முஸ்லிம் தலைமைகளின் தற்போதைய நிலை என்ன?

மு.கா. ஹக்கீம்பிரிவு. அதாஉல்லா பிரிவு. பேரியல் அணி என பிரிந்து நிற்கின்றன. கிழக்கில் ஐக்கிய தேசியக் கட்சி மீது ஏற்பட்டுவரும் முஸ்லிம் மக்களின் அதிருப்தி நிலைமை திருமலை முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன். தேசிய மட்டத்தில் கூட்டுச் சேர்ந்து வருமானால் அதற்கு பலத்த சவால் காத்துக்கொண்டிருக்கிறது. நுஆவோ ஹிஸ்புல்லாவின் காத்தான்குடி வாக்குப் பலத்தில் தங்கி நிற்கிறது. அஷ்ரஃப் காங்கிரஸோ அதாஊல்லாவின் அக்கறைப்பற்று வாக்குப் பலத்தை எதிர்பார்த்து நிற்கிறது. ஊருக்கு எம்.பி. வேண்டுமென்ற சிந்தனை நமது பல்வேறு முஸ்லிம் கிராமங்களை இன்னும் ஆக்கிரமித்து நிற்கிறது. இந்த மோசமான விளைவு மிகத் தெளிவாக நமக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை. விகிதாசார பிரதிநிதுவத்தின் அடிப்படையிலும் முஸ்லிம் வாக்குகள் பல்வேறு அணிகளுக்கு சிதறும் அபாயத்தினாலும் இல்லாது ஒழிக்க காத்திருக்கின்றன. இதுதான் இன்றைய கிழக்கு வடக்கு முஸ்லிம் தலைமைகளின். அரசியல் சூழலின் விளைவாக உள்ளது.

மாறாக கிழக்கு வடக்கின் தமிழ் வாக்குகள். புலிகள் களத்தில் நிற்கும் இத்தேர்தலில் அவர்கள் அணிக்கே பெருமளவில் விழ உள்ளது. அத்துடன் மலையகம். தென்னிலங்கையிலுள்ள கட்சிகளை இணைத்து. "தமிழ்க்கூட்டமைப்பாக" (TNA) புலிகள்

# முஸ்லிம்களின் அரசியல் பலம் தடமழிந்து போய் விடுமா?

இத்தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகி வருகின்றனர். இம் முயற்சி வெற்றியளிக்குமாக இருந்தால் நாம் எதிர்பார்ப்பதைவிட மோசமான விளைவுகள் ஏற்படலாம்.

தமிழர் அரசியல் தலைமைகளின் ஒற்றுமையை இங்கு குறித்துக்காட்டுவதன் நோக்கம் - அந்த ஒற்றுமையை வெறுப்பது அல்ல. முஸ்லிம்களின் பிரிவினையையும் அதன் வீழ்ச்சிக்கான அறிவித்தலையும் சுட்டிக்காட்டத்தான். அத்துடன் கிழக்கு வடக்கிலுள்ள தமிழ்த்தேசமும் முஸ்லிம் தேசமும் ஏற்கனவே உள்ள மாவட்ட தேர்தல் எல்லை வகுப்பினால் ஒரே தேர்தல் அலகுக்குள் போட்டியை எதிர்கொள்ளவும் வேண்டி உள்ளனர் என்பதனாலும்தான்.

## முஸ்லிம் அரசியல் தலைமைகள் என்ன செய்யவேண்டும்.

கிழக்கு வடக்கு முஸ்லிம்களின் அடிப்படை அரசியல் நிலைப்பாடுகளை முன் நிலைப்படுத்தி மக்களின் ஆணையை பெற்றுக் கொள்வதற்காக முஸ்லிம் அரசியல் தலைமைகள் கூட்டிணைந்து இத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். இதைத் தவிர வேறு எந்த வழியும் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு முஸ்லிம் தேச மக்களின் தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யவும். உடனடி அரசியல் சமூக. பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வினைத் தரக்கூடியதுமான ஒரு பொதுவான அரசியல் கொள்கையின் கீழ் ஒன்றிணைவதே ஒரே வழி.


இப் பொதுவான வேலைத்திட்டத்தில் செயற்பட்டு. நமது அரசியல். மற்றும் சமூக இருப்பினை தேசிய அளவிலும். சர்வதேசிய அளவிலும் நிலை நாட்ட அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து கூட்டமைப்பை ஏற்படுத்துவதே இன்றைய தேவையான நடவடிக்கையாகும். இக் கூட்டமைப்பு ஏற்படாமல் போய் முஸ்லிம் சமூகம் நிர்க்கதியாகுமாக இருந்தால் அதற்கான பொறுப்பை இன்றைய பாராளுமன்ற அரசியல் தலைமைகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஏ.யு.எல்.எம். ஹாரிஸ்

# விடுதலைப்புலிகள் கொண்டுவரும் தந்திரோபாயமான அணுகுமுறைக்கு முரணாக இருக்கிறது முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கை!

பேராசியர் ஜெயதேவ உயன்கொட.

இலங்கையின் அரசியல் தொடர்ச்சியான மாற்றங்களுக்கும் தொடர் பேச்சு வார்த்தைகளுக்கும் உட்படுகின்ற ஓர் இயங்கு நிலையில் தற்போது காணப்படுகிறது. ஐக்கிய தேசிய முன்னணியும். விடுதலைப்புலிகளும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்த காலகட்டத்தில் இருந்து முஸ்லிம்கள். கட்சிகள் முகம் கொடுத்துவருகின்ற அரசியல் ஆபத்துக்கள் எண்ணற்றவை. முஸ்லிம்களின் நலன்களைத் தாரை வார்த்து சிங்கள மற்றும் தமிழ் அரசியல் உயர் குழாம்கள் சமாதான உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளக்கூடும் என்று முஸ்லிம்கள் உணருகின்றனர். எனவேதான். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனியான முஸ்லிம் பிரதிநிதித் துவத்தைப் பெறவேண்டுமென அவர்கள் வற்புறுத்திய வண்ணமிருக்கிறார்கள். முத்தரப்புப் பேச்சுவார்த்தைளின் ஊடாக. இறுதியில்



அரசியல் தீர்வொன்றை வகுக்க முடியும் என்ற நம்பிக்கையிலேயே இந்த தனியான பிரதிநிதித்துவத்தில் முஸ்லிம்கள் குறியாக நிற்கிறார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனியான பிரதிநிதித்துவத்துக்கான முஸ்லிம்களின் கோரிக்கையும். அதற்கான தொடர்ச்சியான அழுத்தமும். பேச்சுவார்த்தைகள் தொடர்பில் விடுதலைப் புலிகள் கொண்டிருக்கும் தந்திரோபாய அணுகுமுறைக்கு முரணானதாக இருக்கிறது. ஆரம்ப பேச்சுகளும். இணக்கப்பாடும் தென்னிலங்கை அரசியல் சமுதாயத்துக்கும் (Southerm Polity) தங்களுக்கும் இடையிலானதே என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளின் அணுகுமுறை அமைந்திருக்கிறது. தென்னிலங்கை அரசியல் சமுதாயத்துடன் முதலில் பேச்சுவார்த்தையை நடத்தி இணக்கப்பாடொன்றுக்கு வந்து. பின்னர் பிராந்திய முஸ்லிம் தலைவர்களுடன் தனியான பேச்சுகளை நடத்துவதென்பதே விடுதலைப்புலிகளின் அணுகுமுறையாகும்.

உண்மையிலேயே. பிரதான பேச்சுவார்த்தைகளுக்கான இந்த இரு அணுகுமுறைகளும் அரசு அதிகாரம் மற்றும் அதிகாரப் பகிர்வு மீதான வேறுபட்ட நோக்குகளை (Divergent Perspectives) அடியாதாரமாகக் கொண்டவை. மோதல் மற்றும் சமாதான செயன்முறைகளின் விளைவாக தோன்றக்கூடிய அரச அதிகாரக் கட்டமைப்பின் குறிப்பிட்ட சேர்க்கைகளை இவை நாடி நிற்கின்றன. முஸ்லிம் அரசியல் சமுதாயம் (Muslim Polity) அதன் அரசியல் தனிமைத்துவத்தின் கூறுபாடு காரணமாக. இலங்கையில் உள்நாட்டுப்போரின் பின்னரான செய்முறைகளில் (Post-Civil war Process) வெற்றிகரமாகச் செல்வாக்கைச் செலுத்துவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது என்கிறார் கொழும்பு பல்கலைக்கழக அரசியல் துறைப் பேராசியர் ஜெயதேவ உயன்கொட.

## மணிராசன் குளம் உடைப்பு முயற்சி!

கடந்த சனிக்கிழமை இரவு மணிராசன் குளத்தின் அணையை உடைத்து கிண்ணியாப் பிரதேச முஸ்லிம்களுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்த எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளது. இக்குளத்தின் அணையை உடைப்பதன் ஊடாக கிண்ணியா முஸ்லிம்களின் போக்குவரத்தைத் தடை செய்வதும், பெருமளவு விவசாய நிலங்களை யும். குடியிருப்புப் பிரதேசங்க ளையும் தண்ணீரில் மூழ்கடிப் பதுமே இவ்வணை உடைப்புக்குப் பிரதான நோக்கமாகும்.


இவ்வணை உடைப்பு முயற்சியை இராணுவம் முறியடித்துள்ளதாகக் கிண்ணியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மஃரூப் எம்.பி. தாக்குதலில் ஈடுபட்டார்!

கிண்ணியா முஸ்லிம்களைக் காப்பாற்ற முடியாத பெரும் அவமானத்தில் உள்ள மஃரூப் எம்.பி., ஆட்கள் சிரித்தாலும், காரி உமிழ்ந்தாலும் அது தன்னைப் பார்த்துத் தான் செய்கிறார்கள் என்ற மனோ நிலையில் இருப்பதை அவரின் செய்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

கடந்த ஞாயிரன்று கிண்ணியா வாசிக சாலைக்கு முன்பிருந்த மைதானத்தில் நின்ற றமீஸ் என்ற இளைஞனைத் தனது வாகனத்திலிருந்து இறங்கிவந்து தன்னை அவமானப்படுத்தும் செய்கையில் ஈடுபட்டதாகக் கூறி தாக்கியுள்ளார். இச்சம்பவத்தால் கிண்ணியா பொதுமக்கள் அதிக அதிருப்தி அடைந்துள்ளனர். பின்னர் மஃரூப் எம்.பி குறிப்பிட்டவரிடம் தனது செய்கைக்கு மன்னிப்பைக் கோரியும் உள்ளார். பாவம் நமது மக்கள். புலிகளும் அடிக்கிறார்கள், நமது தலைவர்களும் உதைக்கிறார்கள்.

## சிங்கள ஹெல உறுமயவுக்கு முஸ்லிம்கள் மீது ஏற்பட்ட திடீர் அக்கறை!



தென்னிலங்கையில் முஸ்லிம்கள் மீது மிக மோசமான காழ்ப்புணர்வுகளைப் பரப்பிவரும் சிங்கள ஹெல உறுமயவுக்கு இப்போது திருமலை மாவட்டத்திலுள்ள முஸ்லிம்கள் மீது தீராத அக்கறை பிறந்துள்ளது.

மாவனல்லை தொடக்கம் மாளிகாவத்தை வரை அண்மைக் காலத்தில் முஸ்லிம்கள் மீது நடாத்தப்பட்ட அனைத்துத் தாக்குதல் சம்பவங்களின் பின்னணியில் இருந்த இவர்கள் - இப்போது புலிகளால் திருமலையில் முஸ்லிம்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படும் போது தமது அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அங்கு விஜயம் செய்து. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியும் செய்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டிமாருக்கும் தாத்தாமாருக்கும் ஆபத்து

பேரன்மாரையும் பேத்திமாரையும் வளர்த்தெடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள பாட்டிமாருக்கும். தாத்தாமாருக்கும் இருதய நோய்



ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகமென்று ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. அமெரிக்க தாதிமார் 54.000 பேரின் பங்களிப்புடன் நாடு பூராகவுமுள்ள முதிய ஆண்கள் - பெண்கள் ஆகியோருக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது ஒரு நாளைக்கு 9 மணித்தியாலங்கள் தங்களின் பேரன்மார் - பேத்திமாருடன் உரையாடிக் கொண்டிருக்கும் பாட்டிமாருக்கும். தாத்தாமாருக்கும் இருதய நோய் ஏற்படும் அபாயம் 55ச தவீதம ானது என்று தெரிய வந்து ள்ளது.

முதிய பராயத்தில் இருதய நோய்கள் ஏற்பட பிரதான காரணம் களைப்பாகும். தமது பேரன்மார் - பேத்திமாருடன் பொழுதைக் போக்கும் பாட்டிமாரும். தாத்தாமாரும் மிகவும் களைத்து விடுகின்றனர். ஆகவே. அவர்களின் இருதய செயற்பாடுகள் பலவீனமடைகின்றன. என்பது மேற்படி ஆய்வாளர்களின் கருத்தாகும். 9 மணித்தியாலங்களுக்கு மேல் தமது பேரன் - பேத்திமாருடன் செலவழிக்கும் இத்தகைய முதியோரின் நிலை மிகவும் மோசமடையும் என்று மேலும் கூறப்படுகிறது.

**எம் நாட்டு பெண்களுள் 10 பேரில் 06 பேர் எலும்புருக்கி நோயால் பீடிக்கப்படுகின்றனர்.**


எம் நாட்டுப் பெண்களுள் 42 சதவீதமானோர் எலும்புருக்கி (ஒஸ்ரியோஹெறோஸிஸ்) நோயால் பீடிக்கப்படுவதாக தெரிய வந்துள்ளது என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இதன் படி எம் நாட்டில் பெண்கள் 10 பேரில் 06 பேர் இந்நோயால் பீடிக்கப்படுகின்றனர் என்று தெரிய வருகிறது.

சிறு பராயத்திலும். இளம் பருவத்திலும் போதியளவு கல்சியம் நிறைந்த உணவுப் பதார்த்தங்களை உட்கொள்ளாததன் காரணமாகவே பிற்காலத்தில் இந்நோயால் பீடிக்கப்படுகின்றனர் என்பது மருத்துவர்களின் அபிப்பிராயமாகும்.

எலும்புருக்கி நோய் ஆண்களையும் தாக்கக்கூடியதே. ஆனாலும். 50 வயதுக்கு மேற்பட்ட 60 சதவீதமான பெண்கள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறப்படுகின்றது.

கடுமையான இடுப்பு வலி. கூண் விழுதல். எலும்பு உடைதல் ஆகியன இந்நோயின் அறிகுறிகளாகும். எலும்புருக்கி நோயைக் குணப்படுத்துவது மிகவும் சிரமமான காரியம் என்பதால் வருமுன் காப்பதே சிறந்த செயலாகும் என்று மருத்துவ கலாநிதி லலித் விஜேரத்ண மேலும் தெரிவித்தார்.

*-மருத்துவ கலாநிதி லலித் விஜேரத்ண-*



ஒரு காலத்தில் அழகான நங்கையொருத்தியால் தலையில் தங்கத் தாம்பாலத்தைச் சுமந்து கொண்டு இலங்கையின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை தனித்தே செல்ல முடிந்தது. ஆனால். அது இன்றைய கால கட்டத்தில் வெறுங்கனவே.

### இன்றைய நங்கையர் திரைப்படங்களுக்கு அடிமையாகியுள்ளனர்

இன்றைய கால கட்டத்தில் வாழும் பெண்களின் நிலையோ படு மோசம். அவர்கள் தங்களை தாங்களே தாழ்த்திக் கொண்டு விட்டனர். இன்றைய யுவதிகள் ஹிந்தி திரைப்படங்களுக்கு அடிமையாகி உள்ளனர். அவர்கள் ரசித்துப் பார்ப்பதோ குடும்பத்தை சீரழிக் கும் காட்சிகளையும். நிகழ்ச்சிகளையுமே. ஆகவே பெண் கள் சமூகம் தாழ்ந்து போயுள்ளது. இதற்குக் காரணம் இலத்திர னியல் ஊட க ங்களே.



விமர்சன அறிவு மிகவும் குறைந்து போயுள்ளது. அறிவார்ந்த நூல்களை வாசிக் காமையே இதற்குக் காரணமாகும். இந்நிலை சீர டைய வேண்டுமானால் நல்ல நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும்:

இன்று தாய்மாருடன் சேர்ந்து பிள்ளைகளும் தொலைக்காட்சிக்கு முன்னால் அமர்கி ன்றனர். இது நல்லதல்ல. தாயும் மகளும் சேர்ந்தே வழிகெடுகின்றனர். மேலும் சில பிள்ளைகள் தாய்மாரின் கட்டாயத்தின் பேரில் வகுப்புக்களுக்கு செல்கின்றனர். அங் கே அவர்கள் கெட்டுப் போகின்றனர். தாய்மார்கள் தவறுகளைப் போதித்தாலும் பிள்ளைகள் அவற்றை கருத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதே எனது வேண்டுகோளாகும்.

**இல்லறத்தில் நுழையும் நம்மவர்கள் எல்லோரும் அது பற்றிய எல்லா வகையான அறிவுகளுடனும் இருப்பதில்லை. இதனால் சிற்சில இடறல்கள் தலைகாட்டவே செய்யும். அவ்வாறானவற்றைக் களைந்து நல்லறமாக மாற் றுவதற்கும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து இணைபிரியாத் தம்பதிகளா கத் திகழவதற்கும் ஆலோசனைகளை பன்னூல் ஆசிரியர் 'கையேடு கலைஞர்' டாக்டர் அப்துல் பாரி 'புதுமணத் தம்பதிகள் கையேடு' என்ற தலைப்பிலான நூலில் முன்வைத்துள்ளார். அவற்றிலிருந்து சில பகுதிகள் இங்கு இடம்பெறுகின்றன. நமது மக்களும் இவ்வாறான இடறல்களை சந்திக்கும் போது அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கு இத்தொடர் வழிகாட்டும் என்று நம்புகின்றோம்.**

## தவறை ஒப்புக் கொள்ளுங்கள் 06

தவறு செய்வது மனித இயற்கை. குடும்பங்களிலும் தவறு நடக்கத்தான் செய்யும் ஆனால். தவறை மறைக்காதீர்கள். தவறைத் தவறு என்று ஒப்புக்கொள்ளுங்கள். அப்படி ஒப்புக்கொண்டால். பொய் சொல்ல வேண்டியிருக்காது.

இரண்டு பேர் கருத்து வேறுபாடு காரணமாக சண்டை போட்டுக்கொண்டால். யாராவது ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். கணவன் - மனைவி. மாமியார் - மருமகள் இவர்களில் ஒருவர் விட்டுக் கொடுத்தால். பிரச்சினை தன்னால் தீர்ந்து போய்விடும். தணிந்து போகிறவர்கள் தாழ்ந்து போய்விடமாட்டார்கள். பணிந்து போகிறவர்கள் உயர்த்தப்படுவார்கள்.

சில நேரங்களில் குடும்பங்களில் நடக்கும் சண்டையைப் பார்த்தால். வேடிக்கையாக இருக்கும். மாமி மருமகளிடம் தாய் வீட்டிலிருந்து ஏதாவது கொண்டு வரச் சொல்லியிருப்பார்கள். தாய் வீட்டில் கொடுக்க வசதியிருக்காது. இதை சாக்காக வைத்து. பேரப் பிள்ளைகளை சம்பந்தி கண்ணில் கூடக் காட்ட மாட்டார்கள். இதற்கும் ஒரு வழி இருக்கிறது. கணவனே மாமியாரிடம் கொடுத்துத் தன் அம்மாவிடம் தரச் சொல்லிப் பிரச்சினையைத் தீர்க்கலாமே!

### கண்டும் காணாமல் இருங்கள்

கணவனோ. மாமியாரோ கடுமையாக ஏதாவது சொன்னால். பெண்கள் இந்தக் காதில் வாங்கி. அடுத்த காதில் விட்டுவிட வேண்டும்.காதில் போட்டுக் கொள்ளவும் கூடாதுளூ க்ஷஎன்ன சொன்னீர்கள்.../ என்று வரிந்து கட்டவும் கூடாது. கண்டும் காணாமலும் இருக்கப் பழகி விட்டால். குடும்ப வண்டி தங்கு தடையில்லாமல் ஓடும்.

என் மனைவி வீட்டில் ஒரே செல்லப் பெண். கல்யாணமான புதிதில் என் மனைவியை நான் ஏசுவேன். அப்போது எதிர்த்துப் பேச மாட்டாள்ளூ கண்ணைக் கசக்கிக் கொண்டே போய்விடுவாள். இப்போது என் மனைவி ஏதாவது கூறினால். நான் காதில் விழாதது போலப் போய்க் கொண்டே இருக்கிறேன்.

**முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்**

தொடர்புக்கு
விளம்பர முகாமையாளர்
முஸ்லிம் குரல்
**181/1 Maligakanda Road**
**(White Park)**
**Colombo 10 .**
Phone : 0114 734507
Fax: 0114 734508

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற் காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்க லாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங் கவும், தொடரவும் தயாரா கவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

## சிறப்பான சமூக அமைப்பில் பெண்களின் பங்கு என்ன

அஸ்ஸலாமு அலைக்கும்
ஸலாம் கேட்டு வெளியே வந்தேன். வாசலில் பாத்திமா அட. பாத்திமாவா? வாங்க. வாங்க வஅலைக்கும் முஸலாம்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஊட்டுக்கு வந்திரு க்கீங்க. எப்படி சௌக்கியமா? வீட்ட எல்லாரும் எப்படி இருக்கிறாங்க.

ம்ம்... எல்லாரும் சௌக்கியம் அல்லாட உதவியால

ஆமா! போன வீக் உங்க வீட்டுக்கு வந்திருந்தேன். ஆனா நீங்க இல்ல. எங்கே யோ இஸ்லாமியப் பெண்கள் எழுச்சி மாநாட்டுக்குப் போன தாக கேள்விப்பட்டேன்.



ஓமோம் பாத்திமா மருத முனை மஸ்ஜிதுல் அக்பர் ஜூம்ஆ மொஸ்க் கிலதான் நடந்தது.

இப்படியொரு மாநாடு வரவே ற்கத்தக்கது தானே பாத்திமா.

'ஓமோம்"

இன்று நமது முஸ்லிம் பெண்கள் வெஸ்ற்றன் கல்ச்சருக்கேற்ப மாறி வாரா ங்க. அநேகமான நேரங் களில் தொலைக்காட்சித் தொடர்களோட இணைஞ்சிருக்காங்க. தொழுகை நேரங்களையும் மறந்து. ஏனைய மார்க்கக் கடமைகளையும் மறந்து விடுறாங்க. தங்கட பிள்ளைகளுக்கும். கணவன் மார்களுக்கும் பணிவிடை செய்யிறதையும் சுமையாக நெனக்கிறாங்க.

இப்படியான கால கட்டத்தில் இது போன்ற எழுச்சி மாநாடுகள் அவசியமானதுதான் என்று எனக்குத் தோணுது... நீங்க என்ன சொல்றீங்க பாத்திமா?

'கட்டாயம் அவசியம்தான்"

மரணத்த மறந்து ஏதேதோ விடயங்கள்ல ஈடுபடுறதும். அதிகமாக மூடநம்பிக்கை கொள்வதும் மகா மடத்தனம் என்பதையும். மாநாட்டுக்கு வந்திருந்த பெண்கள் உணர்ந்திருப்பாங்க.

பாருங்க பாத்திமா. ஆரம்ப காலத்தில் மிகவும் கேவ லமாக நடத்தப்பட்ட பெண்களுக்கு முஹம்ம து நபி (ஸல்) அவங்க ஒரு விடுதலையப் பெற்றுக் கொடுத்தாங்க. ஆணுக்குள்ள கடமைகள். பொறுப் புக்கள். உரிமைகள்போன்று பெண்ணுக்கும் உரிமை கள். கடமைகள். பொறுப்புகள் இஸ்லாத்தில் நிறைய நிறைய இருக்கிறது.

சும்மா சக்தியோடு இணைஞ்சிருக்கிறதில்ல ஒன்றுமே ஆகப் போறதில்லதானே!
ஒரு குடும்பத்துப் பெண் தண்ட கணவனுக்கும். பிள்ளையளுக்கும் பொறுப்புள்ளவளாக இருக்கிறாள்;
மறுமையில் அவளுடைய இந்தப் பொறுப்புகள் பற்றி அல்லாஹ் விசாரிப்பான் என்று இஸ்லாம் சொல்லுறத நம்மட முஸ்லிம் பெண்கள் உணர்ந்திட்டா சரிதான் என்ன பாத்திமா..

'உண்மைதான் ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் உணர வேண்டிய விஷயமிது"

'அதுமட்டுமில்ல பாத்திமா. 'சுவர்க்கம் தாயின் பாதத்தின் கீழ்" என்று இஸ்லாம் சும்மா சொல்லல.
ஒரு தாயானவள் தன்னுடைய பிள்ளையை நல்லவனாக மார்க்க அறிவுள்ளவனாக. சிறந்த பண்பாளனாக. நல்ல இஸ்லாமிய அறிவுரைகளைப் போதிக்கின்றவளாக மொத்தத்தில் சுவர்க்கத்திற்குரியவனாக ஆக்குகின்ற பொறுப்பு ஒரு தாயிடம்தான் இருக்கிறது என்பதைத்தான் சொல்கிறது உணர்த்துகிறது.

ஆனால் இன்றைய தாய்மார்களிடத்தில் நல்ல பண்புகள் என்பது மிகமிகக் குறைவு. வயதுக்கு வந்த தங்கள் பெண் பிள்ளைகளின் ஆடை. அவ்றத் விடயத்தில் கவனம் செலுத் துவதில்லை. அவளுடைய நடவடிக் கைகளில் செயற் பாடுகளில் கவனம் செலுத்துவதி ல்லை. ஒரு பெண் பிள்ளை எப்படி இஸ்லாத்தில் வளர்க் கப்பட வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல். அவளின் எதிர்கால வாழ்க்கைக்குரிய விடயங் களில் அக்கறை கொள்ளாமல் சில தாய்மார்கள் இருந்து விடுகிறார்கள்.

இன்று சீதனப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் பெண்கள்தான். பெண்கள் சிலர் வழி கெட்டுப் போவதற்கும் பெண்கள்தான் காரணம். ஒரு ஆண் வழி கெட்டுப் போவ தற்கும் பெண்கள்தான் காரணம்.

ஒவ்வொரு இஸ்லாமியத் தாயும் முற்று முழுதாக ஆயிஷா (ரழி) யாகவோ. பாத்திமா (ரழி) யாகவோ இருக்க வேணாம். ஆகக் குறைந்தது அவர்களை அடியொற் றியவர்களாகவாவது இருக்கக் கூடாதா? என்ன?

அப்போதுதான் ஒவ்வொரு இஸ்லாமியத் தாயும் தன்ட பிள்ளையை நல்லவனாகவோ அல்லது நல்லவளாகவோ வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாத வரையில சமூகத்தில் நல்ல இஸ்லாமியப் பிரஜைகளை உருவாக்கிறது ரொம்பக்கஷ்டமில்லையா பாத்திமா?
கஷ்டம்தான் எனக்கும் அந்த மாநாட்டுக்கு வந்திருக்கலாமேன்று தோனுது. இன்ஷா அல்லாஹ் இப்படியான மாநாடுகள் இனிமேல் நடந்தா எனக்கும் சொல்லியனுப்புங்க.
இன்ஷா அல்லா கட்டாயம்

-மருதமுனை ஹரீஷா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அலசல்!

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் லண்டனில் வைத்து ஆற்றிய மாவீரர் உரையில் சமகால அரசியல் சூழல் பற்றியும், அரசுக்கும் புலிகளுக்குமிடையில் கடந்த காலத்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பற்றியும், சந்திரிக்கா – ரணில் பற்றியும் தெரிவித்த கருத்துக் களை நமது வாசகர்களின் பார்வைக் குத் தருகிறோம்!



## நடைபெற்ற பேச்சுக்கள் பற்றி...

சும்மா "கோட். சூட்." போட்டுக்கொண்டு. நாடு நாடாக அலைந்து ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடந்தன. ஒன்றுமே நடைபெறவில்லை. தலைவர் பாலா அண்ணே 'இந்தப் பேச்சை இடைநிறுத்துவோம்' என்று சொன்னார். நாங்கள் பேச்சை இடைநிறுத்தினோம்.

எங்களுக்கு நன்றாகத் தெரியும். அம்மாவும் ஐயாவும் இழுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிரந்தரமான தீர்வைத் தரக்கூடிய அரசுடன் 'நாங்கள் பேசவில்லை. அம்மாவிடம்தான் நிறைவேற்று அதிகாரம் உண்டு. அத்துடன் ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பு ஒரு நிரந்தரமான தீர்விற்கான வழிமுறையைக் காட்டாது. இந்த அரசியலமைப்பின் அடிப்படையில் தமிழனின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது! பிறகு ஏன் நிரந்தரத் தீர்வைப் பற்றிப் பேசுவான்? என்றார் தலைவர்.



தற்காலிகமாக அதுவும் 5 வருடத்திற்கான ஒரு உருப்படியான தீர்வைக் கொடுப்போம் என்றார் தலைவர்.

ரணில் இதை ஒரு கவர்ச்சிப் பொருளாகக் காட்டுகிறார். "இஞ்ச பாருங்கோ! கடந்த 20 வருடங்களாகச் 'சண்டை பிடித்த நாங்கள், இப்ப கையைக் கோர்த்துக் கொண்டு நிற்கிறோம். நீங்கள் வந்து எங்களுக்கு உதவியைச் செய்யுங்கோ" - என்று சொல்லி எமது பேச்சை ஒரு கவர்ச்சிப் பொருளாக மாற்றி. உலக நாடுகளை எங்களைச் சூழக் கொண்டு வரப்பண்ணி. உலக நாடுகள் மூலம் எங்களுக்கு வரையறைகளைப் போட்டு. எங்களைப் பணிய வைத்து. அழுத்தம் போட்டு. இந்தப் பிரச்சினையைக் கையாள்வதுதான் அவருடைய தந்திரோபாயம். இது புதுவகையான Containment Strategy.

ரணிலுக்கு வேணும் வெளிநாடுகளிலுருந்து கடன். எல்லா நாடுகளும் சேர்ந்து 450 கோடி அமெரிக்க டொலர் கடன் தருகிறோம் என்று ஜப்பானில் அறிவித்தார்கள். இதைவைத்து தென்னிலங்கையைக் கட்டி வளர்க்கலாம். ஆனால். தமிழரின் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. தமிழரின் பிரச்சினையை ஓரங்கட்டிவிட்டு. சர்வதேச ரீதியாக இப்படியான பெரிய நாடுகளை அரவணைத்து. அவர்கள் மூலம் விடுதலைப் புலிகள் மீது அழுத்தப்போகும் ஒரு முஸ்தீபு. இதைத்தான் தலைவர் தனது உரையில் கண்டிக்கிறார்.

தலைவரின் உரையில், சந்திரிக்காவையும் ரணிலையும் சேர்த்துக் கண்டிக்கிறார். நாங்கள் பக்கச்சார்பு எடுக்கவில்லை.



## சந்திரிக்கா பற்றி...

இந்தமுறை எனது பேச்சில் சந்திரிக்கா அம்மையாரைக் கிண்டல். கேலி பண்ணி- பகிடி ஒன்றும் விடமாட்டேன். ஏனென்றால் அடுத்த மாதம் தலைவரைச் சந்திப்பதற்காக நான் வன்னிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அம்மாவைப் பகைத்துவிட்டுப் போனால் அங்கே வழியில் நாலாவது மாடியில் கொண்டுபோய் வைத்து எனது நாரியை முறித்துப் போடுவார்கள்.

## ரணில் பற்றி...

ரணிலுடன் பேசிக் கொண்டிருக்கும்போது எங்களுக்குத் தெரியும் ரணிலிடம் பெரிய அதிகாரம் ஒன்றுமில்லை என்று. என்றாலும் பாதுகாப்பு. உள்துறை ஆகிய இரு அமைச்சுக்களும் அவரிடம் இருந்ததினால். அவருடன் நாம் பேச முற்பட்டோம். மற்றது "புலிகளுடன் பேசுவேன், புலிகளுக்கு ஒரு இடைக்கால சபையை அமைத்துக் கொடுப்பேன்" என்று தேர்தலில் சிங்கள மக்களிடம் ஆணை பெற்று ஆட்சிக்கு வந்தவர் ரணில். அதனால் அவருடன் பேசினோம். இப்போது அவரிடமிருந்த அதிகாரம் பறிக்கப்பட்டுவிட்டது. இப்போது அவருடன் பேசுவது அர்த்தமற்றதாகிவிட்டது.



இப்போது மூன்று அமைச்சுக்களைப் பறிகொடுத்துவிட்டு வெறுங்கையுடன் நிற்கிறார் ரணில் ஐயா! இன்னும் என்னென்னவற்றைப் பறிகொடுக்கப் போகிறாரோ தெரியாது. ரணில் வந்து லேசான ஆள் அல்லர். சமாதானம், சாமாதனம் என்று சொன்னாலும். புலிகளுக்கு எதிராக ஒரு சர்வதேச பாதுகாப்பு வலயம் ஒன்றை (International Safety Net ) உருவாக்குவதுதான் அவரின் நோக்கம்.

எங்கட ரணில் ஐயா அடிக்கடி சென்னைக்குச் சென்று அங்குள்ள அம்மாவை இரகசியமாகச் சந்தித்துவிட்டு வருகிறார். இரண்டு பேருக்கு மத்தியிலும் என்ன நடக்குது என்று எனக்குத் தெரியாது. ஐயா கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நசிபட்டு செத்துப் போவார்!

## கருணா சொன்னது...



"பாலா அண்ணை. சிங்களத் தரப்பில் இராணுவத் தரப்பில் - ஜெனரல் பொன்சேகா என்று ஒருத்தர் இருக்கிறார். அவர் சரியான கடும்போக்காளர். அவர் ஒன்றையும் விட்டுத் தருகிற மாதிரி இல்லை. இதில் பேசிப் பிரயோசனமும் இல்லை. நாங்களும் ஐந்து - ஆறுதரம் அவர்களுடன் கூடிக் கதைத்து விட்டோம். ஆனால். சிங்களத் தரப்பில் (இராணுவத் தரப்பில்) ஒன்றும் விட்டுத் தருவதாகத் தெரியவில்லை. இது தேவையில்லாத வேலை"

## தமிழ்ச்செல்வன் கூறியது...

"பாலா அண்ணை. நாங்கள் சும்மா கூடிக்கூடிக் கதைக்கிறோமே தவிர - இவர்கள் பிரச்சினையை இழுத்தடித்துக் கொண்டு போகிறார்களே தவிர - இவர்களால் ஒரு பிரயோசனமும் இல்லை. ஓர் உருப்படியான முடிவும் எடுக்கிறார்கள் இல்லை. எடுத்த முடிவுகளையும் நிறைவேற்றுகிறார்கள் இல்லை.



## ஆனந்த சங்கரி பற்றி...



இப்போது. சங்கரி போன்ற சாரைப் பாம்புகள் கூட எமக்கு சவால்விடத் தொடங்கியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு நாங்கள் பதுமையாக - மென்மையாக - இருக்கிறோம். சங்கரி ஐயாவுக்கு நாங்கள் ஒன்றைச் சொல்ல விரும்புகிறோம்.


"ஐயா. நீங்கள் பயப்படத் தேவையில்லை. ஏனென்றால் முந்தியகாலம் மாதிரி நாங்கள் உங்களைத் தேடி வரமாட்டோம். நீங்கள் இப்ப கொழும்பில சண்டித்தனம் காட்டி. ஆட்களை வைத்து அடிப்பிக்கிறியளாம் என்று கேள்வி"

## கதிர்காமர்



உங்களுக்கு நன்றாகத் தெரியும் கதிர்காமர் செயலாளர் நாயகம் என்ற பதவிக்குப் போட்டியிட்டார். 'லேட்டாக' வந்த செய்தியைப் பார்த்தால். அவருக்கு அதுகிடைக்கவில்லை. போலிருக்குது.. அது நல்லதொரு விஷயம். ஆனால். என்னைப் பொறுத்தளவில் அவருக்கு ஏதோ ஒரு பதவியோ. பொறுப்போ கொடுத்து கொழும்பு அரசியலிலிருந்து ஆளைக் கலைக்க வேண்டும். ஏனெனில். இவர் அம்மாவுக்கு அருகிலிருந்து சகுனி வேலை பார்க்கிறார். எல்லாப் பிரச்சினையும் இவரால்தான்.

## கிண்ணியாவில் கருத்தரித்த கப்றுக்குழிகள்



சக்கையாகிக் கிழிந்து தொங்கிய
வானத்தின் செந்நிற மழை
ஊர் மண்ணில் விழுந்த போது
ஊழிக்காற்று தெருவெல்லாம்
உலா வரத் தொடங்கிற்று.

ஒவ்வொரு சுப்ஹிலும்
ஒரு மையத்துச் செய்தியை
எவரேனுமோர் ஆள்
சுமந்து வரவேண்டியதாக உள்ளது.

கபன் துணி கிழித்தே
கைகளுக்கு வெறுத்தது.

ஒருதொடரான நிகழ்வுகளில்
தொண்டைக் குழியறுந்து
அருகருகே அடக்கப்பட்ட
ஜனாசாக்களை நினைந்தழுதலில் கண்ணீர்
நிறுத்தப்படவேயில்லை.

தட்டிக் கேட்க ஆளில்லாத
அனாதைகளாகி விட்டோம் நாம்.

காக்காக்களையும்
வாப்பாக்களையும்
காவு கொடுத்துவிட்டு
நாக்கறுக்கப்பட்ட குயில்களாய்
நாம் அழுகிறோமே
எவரேனும் செவிகளையெம்
துயர் கேட்க காற்றில் எடுத்து
வைத்தார்களா?

வழமைபோலவே
மூன்றாம்தரப்பு எம் பாதையில்
வந்துவிட்டுப் போயினர்
ஆனாலும்,
முகம் பூராவும் கறுப்புத்துணியால்
மூடப்பட்டேயிருந்தது.

அடுத்த நாளும் விடிந்தது
கப்றுக்குழி வெட்டுவதற்காக
அழுதவாறே எம்மிளைஞர்கள்
சென்று கொண்டிருந்தனர்.

கிண்ணியா சபருள்ளா
(2003.12.02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூனிஸ் ஹிஜாப் விவகாரம்

## -நிகழ்வாய்வு


-அஷ்ஷெய்க் முஹைதீன் ஹஸன் அல்பலாஹி-

1929ஆம் ஆண்டு "தூனிஸ்" சுதந்திரம் அடைவதற்கு முன்னர் தூனிஸில் ஹிஜாப் அணிவதைத் தடை செய்வது பற்றி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கு ஒன்றில் "ஹிஜாப் அணிவது எமது தனித்துவம். அதை யாரும் தடுக்க முடியாது. அதற்கு நாங்கள் விடமாட்டோம்" என்று ஓர் இளம் வாலிபர் ஆதரவு கொடுத்துப் பேசிக் கொண்டிருந்தார்.

இந்த வாலிபரது பேச்சு அச்சபையையே அம்ளிதுமளியாக்கிவிட்டது. அன்று முதல் உருவாகிய இந்த ஹிஜாப் விவகாரம் தூனிஸிய பத்திரிகைகளில் பல பக்கங்களைத் தாண்டி எழுதப்பட்டது. அந்த வாலிபர் கூட "ஹிஜாப் அணிவது பெண்களின் உரிமையில் உள்ளது" என்ற தொனியில் பல தொடர் கட்டுரைகளை எழுதினார். அவர்தான் பிரபல இஸ்லாமியப் போராளி 'அல் ஹபீப் போர்கீபா' ஆவார். அந்தச் சந்தர்ப்பத்தில் தூனிஸில் இருந்த எவருமே சுதந்திரத்துக்குப் பின்னால் ஹிஜாப் விடயத்தில் அரசு பாசிஸவாதப் போக்கையே கையாளும் என்பதை உணரவில்லை. சுதந்திரம் கிடைத்தவுடனேயே. தூனிஸிய அரசாங்கம் "தூனிஸியப் பெண்கள் அணியும், முக மறைப்பை (முகமூடி) நீக்கும்படி கட்டளையிட்டதுடன், 1981ஆம் ஆண்டின் 108 வது சட்டமாகப் பிரகடனப்படுத்தியது. மேலும், அது ஒரு வர்க்க ஆடை என்று அதைத் தடுத்ததுடன். பெண்களின் ஆடையின் தன்மையை வரையறுத்தும் கொடுத்தது.

இந்த வரலாற்று நிகழ்வு முதல், தூனிஸிய ஹிஜாப் விவகாரம் அந்நாட்டின் ஆட்சியாளர்களுக்கு முன்னால் "சந்தேகக் கூண்டில்" மாட்டிக் கொண்டது மட்டுமல்லாது, ஏனைய களவு, கொலை, போதைப் பொருள் பாவனை போன்ற குற்றச் செயல்கள் போல பாதைகளில் தடுக்கப்படுவதாகவும், விரட்டப்படுவதாகவும் மாறிவிட்டது. ஹிஜாப் அணியும் சகல மட்டப் பெண்களும் கைது செய்யப்படுகின்றனர். அலுவலகங்கள், கல்விக் கூடங்கள் மட்டுமன்றி வைத்தியசாலைகளுக்குச் சிகிச்சை பெறக்கூட முடியாமல் தடுக்கப்படுகின்றனர்.

வேதனைக்குரிய விடயம் யாதெனில், கடந்த ரமழானில் ஹிஜாப் அணிந்ததற்காக எமது ஈமானிய சகோதரிகள் தேசிய பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்டதுடன், இந்த விடயத்தில் தூனிஸிய ஊடகங்கள் கூட நயவஞ்சகத்தனமாக "முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்தாற்போல" செயற்பட்டுள்ளன.




ஹிஜாப் அணிவதற்கெதிராக மேற்கொள்ளப்படும் இந்த யுத்தம் "மிகப் பலமாக இஸ்லாத்தின்பால் முன்னேறிக் கொண்டிருக்கும் தூனிஸிய மக்களின் இஸ்லாமியத் தனித்துவம் (Personality), அடையாளம் (Identity) ஆகியவற்றுக்கு எதிரான பல படித்தரங்களையும், மட்டங்களையும் தாண்டி நிற்கிறது. இது காலனித்துவப் பண்பாட்டினதும், சியோனிஸப் பழிவாங்கலினதும் புரோகிதச் செயலாகக் காணப்படுகின்றது. இப்போர் இது வரைக்கும் - இஸ்லாத்தைப் பின்பற்றும் ஒரே காரணத்துக்காக - பல அப்பாவி மனிதர்களைச் சிறை வேதனையால் அநியாயமாகப் படுகொலை செய்திருக்கிறது. மேலும் அஸ்ஸைத்தூனா (Azzaithoana) இஸ்லாமியப் பல்கலைக்கழகம் 'மதச் சார்பின்மையின்' கேந்திரஸ்தலமாக (வற்புறுத்தலாக) மாற்றப்பட்டுள்ளது. தூனிஸிய முஸ்லிம்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இந்த பாசிஸப் படுபாதகச் செயல்கள் பற்றி எந்தவொரு தனிநபரோ அல்லது மனித உரிமைகளுக்கான அமைப்புக்களோ (குறிப்பாக அமெரிக்க ஐரோப்பிய நாடுகள்) நாவசைக்கவில்லை.

ஏனென்றால் இங்கு பிரதான நோக்கம் 'இஸ்லாம்'தான். ஐரோப்பியர்களின் கருத்தின்படி இஸ்லாம் என்பது "தெற்கில் உருவாகியிருக்கும் அபாயம்" என்றும், வாஷிங்டனின் கருத்தில் "சகல இடங்களையும் வியாபித்துக் கொண்டிருக்கும் அபாயம்" என்றும் கொள்ளப்படுகிறது.

ஆனால் தூனிஸிய மக்கள் மற்றவர்களைப் போலவே மிக மௌனப் பாணியில் உள்ளனர். இஸ்லாத்தின் மடியின் பக்கம் மிக வேகமாகவும், பலமாகவும் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

# புதியதொரு எம்.பி!



இவரும் எம்.பி யாக
வேண்டும்
இவருக்கும்
பங்களா,
சொகுசுக் கார்
கொடுக்கப்பட்டு,
அதில்
சுகங்கள் பல அனுபவித்து,
ஐந்து நட்சத்திர
ஹோட்டல்கள்,
பீச், (பார்) கள் என
உலா வரவேண்டும்.

எம் மக்களுக்கு
இழப்புக்கள்
ஏற்படும் போது
அது
மாற்றாரின்
பிரச்சினை
என்றிருக்க வேண்டும்.


நாளை
வடக்கு - கிழக்கு
இணைக்கப்பட்டு,
நாமெல்லோரும்
விரட்டியடிக்கப்படும் தருணம்
இவர் மட்டும்
கொழும்பில்
உல்லாசமாய் வாழ வேண்டும்.

**காவத்தமுனை ஜாபீர் எச்எம்.**

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

18 குறுநாவல்

அத்தியாயம் -8



மாவட்டமே ஆடிப் போய்விட்டது. பள்ளிமுனைக் கிராமமே சாப்பிடவும் தோன்றாமல் பரபரப்பில் பரிதவித்தது. முத்துமுகம்மதே தனி ஒரு உப செய்தியாயிருந்தான்.

'தக்கொலப்பட பாஞ்சயாம். தலவருதப்பின ஒருதப்பு!"
'புலி தலவர கனநாளா குறிவெச்சிருக்கான். காட்டவ்லியா அப்பா!"
'மத்தப் பாட்டிர வேலயோ ண்டு வீவிஸில் செல்றான்"
'கிரினிட்டு எறிஞ்சயாம். எறிஞ்சவன் சயனட்டு சப்பினயாம்"
'வேம் முத்தும்மது எங்கடா அங்க போய்ப்பட்டான்"
'தலவர்ர நெஞ்சிக்கி வந்த குண்ட நம்முட முத்தும்மது பாஞ்சி புடிச்சயாம்"
'முத்தும்மதுண்டால்... கொறுக்காட...?"
'பொத்துரா வாய! அவன் எளஞர் அணி தலவரு"
முத்தும்மதுட ம்மாக் கெழவிட்ட ஆரோ போய் முத்தும்மதுக்கு சீரியஸ்ண்டு சென்னயாம். மனிசி உழுந்துட்டா... 'ஆஸ்வத்திக்கி ஏத்திரிக்கி"
'நெய்னாரு கடையப் பூட்டிட்டு போயிருக்கான் கொழும்புக்கு!"

ஊர் வம்புகளுக்கு உச்சவரம்பு இருப்பதில்லை. எனினும் வதந்திகளுக்குள் உறையும் உணர்வலைகளின் பிரதிபலிப்புகள் உற்பத்தி அங்குதான் உள்ளது. அந்த வாரம் முழுக்க ஊடகங்களும் தம்பாட்டுக்கு விதவிதமான 'ஹேஸ்யங்களை' கேள்விக்குறி (?) உபயங்களுடனும் நம்பப்படுகிறது. கூறப்படுகிறது என்ற செயற்பாட்டு வினைகளுடனும் மிகவும் அலட்டலாகவும் 'அலேர்ட்' டாகவும் இயங்கின. பத்திரிகைகள் பக்கங்களை சூடேற்றி பரபரப்பாய் விற்பனையாயின.

*தினகரன்* -
இஷாக் மீதான கொலை முயற்சி! ஜனாதிபதி நேரில் சென்று பார்வை. பிரதமர் அதிர்ச்சி! கவலை!!

*நவமணி* -
இலங்கையில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பில்லை என்பதற்கு இதைவிட என்ன அத்தாட்சி தேவை? இஷாக் எம்.பி பாராளுமன்றத்தில் ஆவேசம்!

*தினமுரசு* -
காத்திருந்த கரும்புலி! குறியாருக்கு?

*திவயின* -
மேலும் பல அரசியல்வாதிகளை கொல்லும் புலிகளின் திட்டம் அம்பலம். ங்கது செய்யப்பட்ட புலிப் பயங்கரவாதி தகவல்.

*வீரகேசரி* -
இஷாக் கொலை முயற்சி!
அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் பாதுகாப்பில்லை!!

*அல்ஹஇதா* -
நாளை தென்கிழக்கு எங்கும் பூரண ஹர்த்தால்.
முஸ்லிம்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும்!

*தினமணி* -
முத்துமுகம்மது தேறி வருகிறார்! கொல்லப்பட்டோருக்கு நிவாரணம்.

'........ படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தலைவரின் பிரத்தியேகச் செயலாளர் ஜனாப் முத்து முகம்மது ஆபத்தான கட்டத்தை தாண்டி தேறி வருகிறார்! என வைத்திய்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. சத்திர சிகிச்சையின் பின் முத்துமுகம்மதுவின் இடது கையிலுள்ள நடு மூன்று விரல்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் அவை அகற்றப்பட்டுள்ளன. முத்துமுகம்மதை தலைவர் தினமும் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறி வருகிறார். உயர்பீட உறுப்பினர்களும் பார்வையிட்டு வருகின்றனர்.... இன்று அவர் மருதானை பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில்...."

இத்தனை தலைப்புச் செய்திக்குவியல்களுக்கும் மத்தியில் - படுகாயமடைந்த முத்துமுகம்மது தலைவரின் பிரத்தியேகச் செயலாளர் அல்லர்!" மூத்த துணைவரின் மறுப்பறிக்கையும், 'எமது இயக்கத்திற்கும் இச்சம்பவத்திற்கும் தொடர்பில்லை. புலிகள் நிராகரிப்பு" என்ற செய்தியும் இரண்டாம் பக்கத்தில் தள்ளப்பட்டு கிடந்தன.

ஞாயிறு வெளியான 'களம்' வாராந்தரியில் - 'விரல்களை மட்டுமல்ல தலைவருக்காக உயிரையும் இழக்கத் தயார்!" முத்துமுகம்மதின் பரபரப்பான பேட்டி உள்ளே.... வெளியே, முத்துமுகம்மதின் கலர் புகைப்படம்.

ஒரு வாரத்துக்கு முதல் யாரென்றே தெரியாத முத்துமுகம்மது மாவட்டம் முழுக்க தெரிந்தவனாகவும் பள்ளிமுனையின் இளைஞர்களின் ஆதர்ஷ கதாநாயகனாக ஆவதற்கும் இது போதாதா.. அடுத்த வாரமே முத்துமுகம்மது ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்கப்பட்டு தலைவர் வீடு வந்து விட்டான்.

தாடிமாஸ்டரின் உபயத்தில், நெய்னாருடன் தாய்க் கிழவி ஒரு தடவை கொழும்பு வந்து இவனது ஊனக் கையைப் பிடித்து ஒரு பாட்டம் அழுது அரற்றி ஒப்பாரித்து. தலைவரின் மனைவி கொடுத்த பத்தாயிரம் ரூபாவுடன் ஊர் போய்ச் சேர்ந்தாள். இரண்டு வாரங்கள் ஆஸ்பத்திரியிலும், இங்கும் கூடவே இருந்து கவனித்து வந்த நெய்னாரும் ஊர்போய்விட்டான். வேறு எவரும் பள்ளிமுனையிலிருந்து வரவில்லை.

ஊனக் கையான போதும் முத்துமுகம்மது முன்னரை விடவும் தலைவருக்கு விசுவாசமான காவல் நாயாகவே மாறியிருந்தான். தலைவரிடமிருந்து எத்தனையோ விஷயங்களை அவதானித்து... கிரகித்து... பழகிக் கொண்டான்.

கொன்னைச் சிங்களம் கூட இலேசாக விளங்கியது. கொஞ்சமாய் பேசவும் முடிந்தது. தலைநகரின் வீதிகளும், சந்து பொந்துகளும் கூட பரிச்சியமாகின. கட்சி அலுவலகம்... பாராளுமன்றம்...... வங்கி... பொலிஸ் நிலையம்... தொலைபேசி... தொலைபேசி மடல்...

(மீண்டும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களை ஓரங்கட்டுவதே புலிகளின் திட்டம்!

சமாதானப் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டத்தில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக அனுமதிக்கப்படுவார்களா எனக் கேட்கப்பட்ட போது விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ் செல்வன் அளித்த பதில்:

"யுத்தம், யுத்தநிறுத்தம் என்பன இருதரப்பினரிடையில்தான் நடந்தது. எனவே பேச்சுவார்த்தை முடிவுகளும் இரு தரப்பினர்க்கிடையில் தான் நடைபெற வேண்டும். முஸ்லிம்களை ஒரு தரப்பினராக சேர்ப்பதற்கு இது பொருத்தமான சந்தர்ப்பமன்று."

இப்போது எழும் முக்கியமான கேள்வி சமாதானப் பேச்சுவார்த்தையில் இரண்டாம் கட்டம் தொடக்கம் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர் எனப் புலிகளும், முஸ்லிம் காங்கிரஸும் 2002ம் ஆண்டு செப்டம்பர் மாதம் லண்டனில் இருந்து ஏன் ஓர் கூட்டறிக்கையினை விட்டனர் என்பதாகும்.

இதே போன்ற ஓர் உறுதிமொழி இவ்வாண்டு ஜனவரி மாதம் தாய்லாந்தில் நடைபெற்ற 4ம் கட்டப் பேச்சுவார்த்தையின் போதும் அளிக்கப்பட்டது. ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தனது முன்மொழிவுகளை, ஆலோசனைகளை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் வெளியிடுமென அறிவித்திருக்கும் இவ்வேளையில் தமிழ் செல்வன் இவ்வாறு கூறியுள்ளார். நிதியுதவி வழங்குபவர்கள் இதுபற்றி என்ன சொல்லவிருக்கிறார்கள்? அமெரிக்காதான் இதற்காக முதலில் பதில் அளிக்க வேண்டும்.

இலங்கையில் முன்னை நாள் அமெரிக்கத் தூதுவராக இருந்த அஷ்லி வில்ஸ் 2002ம் ஆண்டு மார்ச் மாதம் விடுத்த ஓர் அறிக்கையில், 'கிழக்கு முஸ்லிம்கள் மீது புலிகள் மேற்கொள்ளும்' ஆட்கடத்தல்கள், தாக்குதல்கள், வற்புறுத்தல், பணம் பெறுதல் போன்றன உட்பட எல்லாத் துன்புறுத்தல்களையும் கண்டித்திருந்தார்.

இந்த உதவிக்குப் பகரமாகவே ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ் அண்மையில் பிரதமருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்தது. இலங்கை முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளதால் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டது எனக் காரணம் தெரிவிக்கப்பட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்கேற்க வேண்டும் என மூன்று வாரங்களுக்கு முன்னர்தான் பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. முஸ்லிம்களுக்கு இந்த நிலையினைப் பெற்றுக் கொடுக்க தான் முயற்சிப்பதாக அப்போது இந்தியாவில் இருந்த பிரதமர் ரணில் செய்தி அனுப்பியிருந்தார்.

கடந்த செவ்வாயன்று முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழுவினை லண்டனில் சந்தித்த நோர்வே தூதுவர் எரிக் செல்ஹேய் மூலம் இதே உறுதிமொழியினை அளித்திருந்தார். நிலைமை இவ்வாறு இருக்கையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாய்ச் சேர்ப்பதில் புலிகள் ஏன் விடாப்பிடியாக மறுக்கிறார்கள் என்பதனை அறிவது மிக இலகு.



ஏ.எம். முஹம்மத் மதனி

இறைமை, நிலபுல ஆதிக்கம் என்பன பற்றி அரசாங்கத் தரப்பினர் புலிகளுடன் வாதிட முடியும். எனினும், புலிகளின் நிபந்தனைகளை நேருக்கு நேர் நின்று பேசக் கூடிய ஆற்றல் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமே உண்டு. புலிகளின் கோரிக்கை மிக அதிகமானவை என மிதவாதத் தமிழர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதனால்தான் ஜே.வீ.பி போன்ற கட்சிகள் கூட முஸ்லிம் காங்கிரஸின் கருத்துக்கள் வெளியிடப்படும் வரை காத்திருக்கின்றது. புலிகளின் ஆலோசனைகளை ஸ்ரீ.ல.மு காங்கிரஸ் முற்று முழுதாக நிராகரித்துள்ளமையினால் ஜே.வி.பி. மகிழ்ச்சியடைந்துள்ளது.

தமிழ் செல்வன் பின்வருமாறு கூறியுள்ளார்: 'பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம்களின் அபிலாசைகளை ஏற்றுக்கொள்ள இது பொருத்தமான சந்தர்ப்பம் அல்ல" எனவே இங்கு எழும் முக்கியமான கேள்வி இப்போது இல்லையென்றால் எப்போது? என்பதாகும்.

டெய்லிமிரர் நேர்முக சந்திப்புக்கு ஒரு மணிநேரத்துக்கு முன் தமிழ்செல்வன் பத்திரிகை மாநாடொன்றில் பின்வருமாறு கூறியிருந்தார்:

'இடைக்கால சுயாட்சி அதிகார சபையில் தமது பங்கு பற்றி கலந்தாலோசிக்க முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கப்படும்."

ஆனால் தமிழ்செல்வன், வார்த்தைகளுடன் விளையாடி உள்ளார் என்பது தெளிவு. எனவே புலிகள் டோக்கியோவிலும் அதன் பின்னரும் இவ்வாறு அளித்த உறுதிமொழிகளைச் செயற்பட வைப்பது அரசாங்கத்தினதும், சர்வதேச சமூகத்தினதும் கடமையாகும்.

சாரம் - ஆங்கில ஊடகங்கள்

சம்பிக லியனாராச்சி
நன்றி - டெய்லி மிரர்

கிழக்கின் 67 வீதமான சனத்தொகையில் 37 வீதம் முஸ்லிம், 30 வீதம் சிங்களவர்கள் என்ற படியால், பெறுமதிமிக்க எவரும் இதனை உணரத் தவற முடியாது.

கிழக்கில் மூன்றில் ஒரு பங்கினர் மட்டுமே தமிழர்கள் என்ற உண்மை ஒரு புறமிருக்க புலிகள் முழுக் கிழக்கு மாகாணமும் தமது ஆதிக்கத்தின் கீழ் வரவேண்டுமெனக் கோருகின்றனர் உத்தேச இவ்வமைப்பின் கீழ் பிற இனங்களின் அபிலாசைகள் நிறைவேறமாட்டா எனப் புலிகளே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

'புலிகளை ஏன் முஸ்லிம்கள் நம்ப மறுக்கிறார்கள்' என்பதற்கான நல்ல உதாரணம் இன்னமும் புத்தளத்தில் 13 ஆண்டுகளாக அகதி முகாம்களில் அல்லலுறும் வடமாகாண முஸ்லிம்களின் பரிதாப நிலையாகும். அவர்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்ப வேண்டுமெனவே விரும்புகின்றனர்.

கடந்த வாரம் கூட இக்கோரிக்கையினை முன் வைத்து அவர்கள் அதிகாரிகளிடம் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர். இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கக் குழுவில் முதல்வர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸின் நடவடிக்கையினைப் பின்வரும் உதாரணம் தெளிவாக்குகிறது.

'தனது வீட்டை ஒருவர் ரூபா35,000 க்கு வாங்க முயலும்போது வீட்டுரிமையாளர் ரூபா 50,000 க்கு விற்க தயாராகிறார் என்பது போன்றதாகும். இறுதியாக எனது வீட்டுக்கு ரூபா 50,000 கிடைக்காது. நானும் 35,000 ரூபாவுக்கு விற்கமாட்டேன். பேச்சுவார்த்தையினை பின்னே முடிவு செய்வோம்.'

எனவே பேரம் பேசுவதே முக்கிய அடிப்படையாகும். எனவே முஸ்லிம்களின் தனித்தரப்பின்றி அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குப்போனால் அரசாங்கம் தனது பேரம் பேசும் நல்ல வாய்ப்பை இழந்துவிடும்.

## பிரித்தானிய விசா அனுமதி வழங்கல்

பிரித்தானிய தூதரகம் இலங்கையர்களுக்கு இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் 'வேலை செய்யும் விடுமுறையாளர் விஸா' முறையினை அறிமுகஞ் செய்துள்ளது.

இது பற்றிப் பிரித்தானிய தூதரகத்தின் அரசியல், தகவல் துறைக்கான இரண்டாம் செயலாளர் மார்க்ரட் டொங்க் கூறுகிறார்:- "இத்திட்டம் பொது நலவாய நாடுகளின் 17 - 30 வயதுக் கிடைப்பட்ட பிரஜைக்கானது"

இப்போது இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதுவராலயம் நாளொன்றுக்கு 90 'வேலை செய்யும் விடுமுறையாளர் விஸா விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த போதிலும், துரதிஷ்ட வசமாக 81 வீதமானவை நிராகரிக்கப்படுகின்றன. பிரதான காரணம் இவ்விஸா அனுமதிப் பத்திரம் தொடர்பில் பொதுவான தெளிவின்மையாகும்.

இவ்வனுமதிப்பத்திரமானது தமது விடுமுறைக்காலத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து இருக்க விரும்பும் பிரஜைகளுக்கானதாகும். இக்காலத்தில் அவர்கள் தொழில் புரிய அனுமதிக்கப்படுவர்.

இவ்வனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் அவர்களது இணையத் தளத்தினூடாக www.ukvisas.gov.uk மூலம் பெறப்படலாம்.

### தொலைபேசி மூல ஏற்பாடுகள்

இவ்விஸா தொடர்பாகப் பிரித்தானியத் தூதரகத்துடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம். ஆயினும், அடுத்த ஆண்டு பெப்ரவரிவரை ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளன.



டொங்க் மேலும் கூறினார்: 'இத்திட்டம் பல ஆண்டுகளாகச் செயலில் உள்ளது. இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் எல்லாப் பொதுநலவாய நாடுகளின் பிரஜைகளையும் உள்ளடக்கும் விதத்தில் இப்போது விரிவாக்கப்பட்டுள்ளது. இலங்கையர்களுக்கெனப் பங்கீடு (கோட்டா) களோ, இறுதிநாளோ கிடையாது' "விண்ணப்பதாரர்கள், அடுத்த சில மாதங்களுக்குள் ஐக்கிய ராஜ்ஜியத்துக்குச் செல்லத் திட்டமிடவில்லையெனில், இப்போது விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

இவ்விஸா அனுமதிப்பத்திரத்துக்கான சில தகைமைகளாவன:- விண்ணப்பதாரர்கள் பொது நலவாய நாடுகளின் பிரஜைகளாக இருக்க வேண்டியதுடன் குறிப்பிட்ட வயதுக்குட்பட்டவர்களாக இருத்தலும் வேண்டும். தாம் அங்கு தங்கியிருக்கும் காலத்தில் செலவுகளுக்குத் தேவையான பணவசதி, இலங்கைக்குத் திரும்பிவருவதற்கான செலவு, தமது விடுமுறை இறுதியில் ஐக்கிய ராஜ்ஜியத்தை விட்டுத் திரும்பிவர எண்ணும் போது பயணத்துக்குத் தேவையான நிதிவசதிகள் என்பன இருத்தல் வேண்டுமாம்.

இவ்விஸா அனுமதிப் பத்திரத்தின் கீழ் விண்ணப்பதாரர்கள் ஐக்கிய இராஜியத்தில் நுழைந்த நாள் தொடக்கம் இரண்டு ஆண்டுகள் வரை மாத்திரம் தங்கலாம். இரண்டாண்டு காலஇப்பிரிவின் ஏதும் காலம் ஐக்கிய ராஜ்ஜியத்துக்கு வெளியில் கழிக்கப்பட்டிருப்பின் அக்காலமும் சேர்த்தே இரண்டாண்டு காலம் கணிக்கப் படும் என்பது பிரித்தானியத் தூதரக அறிவிப்பு.

## மக்கள் பணம் விரயமாகும் வழிகள்

மாகாண சபைத் தேர்தல் செலவுகள் - கீழ் வருமாறு:-

1988 முதலாவது மாகாண சபைத் தேர்தல் செலவுகள் ரூ. 98,537,335

1993 இரண்டாவது மாகாண சபைத் தேர்தல் செலவுகள் 279,538,000 ரூபாய்

1998 மூன்றாவது மாகாண சபைத் தேர்தல் செலவுகள் ரூ 433,600,000

மொத்தம் - 811,675,333

உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்

1988 - 6000 ரூபாய்
1993 - 11500 ரூபாய்
1998 - 18050 ரூபாய்

உறுப்பினர் தொகை - 380

உறுப்பினர்களின் மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவில் ரூபாய் 6,859,000

ஆளுநரின் சம்பளம் ரூ. 31,000
அமைச்சின் சம்பளம் ரூ. 30,950

இவர்களின் எரிபொருள் மற்றும் தொலைபேசிச் செலவுகள் கணக்கிலடங்காதவை.

மாகாண சபை உறுப்பினர்களின் சம்பளமும் கொடுப்பனவுகளும் கீழ் வருமாறு.

| | |
|---|---|
| சம்பளம் ரூபாய் | 11050. |
| எரிபொருள் ரூபாய் | 3750 |
| சாரதி ரூபாய் | 1750 |
| விருந்தோம்பல் ரூபாய் | 500 |
| நடமாடும் தொலைபேசி | 1000 |

மொத்தம் - 18050

## 80 மாகாணப் பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்த ஆலோசனை

மாகாண சபையின் கீழ் செயல்படுகின்ற 80 பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்துவதற்கான ஆலோசனை கல்வி அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்துவதற்கு வேண்டிய ஆய்வுகள் நடைபெறுவதாக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்தும் தகுதிகாண் ஆய்வுகள் தற்போது மேற்கொண்டு வருவதாகவும், தகுதியுள்ள பாடசாலைகள் அனைத்தும் தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்தப்படும் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

அதே நேரம் தரமுயர்த்தப்பட்டுள்ள தேசியப் பாடசாலைகள் அத்தகுதியை இழந்திருப்பின் அவற்றின் தரம் குறைக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியா சம்பவத்தை வைத்து ஊடகங்களாடும் நாடகங்கள்!

-கிண்ணிமைந்தன் -

இன அடக்குமுறையின் பயங்கரக்கோரமுகம் இப்போது தன் சொரூபத்தைக் கிண்ணியா மண்ணின் மீது காட்டத்தொடங்கியிருக்கின்றவேளை மூன்றாம் தரப்பினர் அல்லது அடையாளம் தெரியாத நபர்கள் என்ற போலி முலாம் பூசிக்கொண்டு புலிகள் நடாத்துகின்ற முஸ்லிம் மனித வேட்டையைத் தமிழ், ஆங்கில ஊடகங்கள் திரித்தும், உண்மையை மறைத்தும் தருகின்ற செய்திகள் தொடர்ந்து வளரும் ஊடகப் பயங்கரவாதத்தின் உச்சபட்ச விருத்திக்கு வித்திட்டிருக்கின்றன. நடந்தேறிய நிகழ்வுகளை அச்சு வாகனமேற்றும் தமிழ் பத்திரிகைகளும், காற்றலை வரிசைக்குச் செய்தியை தமிழ் வானொலிகளும் முற்றுமுழுதான முஸ்லிம் விரோதப் போக்கைக் கடைப்பிடித்து வருவதானது ஏற்கனவே உருவாகியிருக்கும் அதிர்ச்சியை இன்னும் அதிகரிப்பதாகவே உள்ளது.

கடந்த 23-11-2003ம் திகதியன்று இரவு காடையர்களால் வீசப்பட்ட கைக்குண்டில் சிக்குண்டு ஒரு முஸ்லிம் சகோதரர் ஸ்தலத்திலேயே வபாத்தானார். குறித்த சம்பவத்தை சக்தி எப்.எம். தருகையில் 'சட்ட விரோதமாகக் கசிப்புக் காய்ச்சும் இடத்தில் கைக்குண்டு வீசப்பட்டு குறித்த முஸ்லிம் நபர் இறந்தார்' எனச் செய்தி தந்திருந்தது. இந்தச் செய்தியினூடாகக் குறித்த சம்பவமானது முற்றுமுழுதாகக் கள்ளத்தனமாகக் கசிப்புக் காய்ச்சும் இடத்தில் இடம்பெற்றதாகவும், கசிப்பருந்தியோருக்கு மத்தியில் பிணக்கேற்பட்டு கைக்குண்டு வீசப்பட்டதாகவும், செய்தியை மிக அழகான முறையில் திரித்து கேட்போர் மத்தியில் வித்தியாசமானதோர் கோணத்தை வழங்கியிருந்தது.

உண்மையில் குறித்த சம்பவத்தில் மரணமான சகோதரர் ஒரு குடிகாரரல்ல. மேலும் சம்பவம் நடைபெற்ற தினம் அவர் நோன்பு நோற்றிருந்தார். அவர் இஃப்தார் செய்த சில நிமிடங்களின் பின்னரே அவர் மீது புலி உறுப்பினரால் கைக்குண்டு வீசப்பட்டு அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இப்படு கொலைக்குப் புலிகளே காரணம் என்ற சந்தேகமற்ற ஊர்ஜிதம் குறித்த சம்பவம் நடைபெற்ற அதே இரவின் நள்ளிரவு 2.00 மணியளவில் தம்புள்ளையிலிருந்து மரக்கறி ஏற்றிவந்த லொறி மீது கிண்ணியா கச்சக்கொடுத்தீவுக்கும் முனைச் சேனைக்குமிடையில் வந்துகொண்டிருக்கையில் அதன் மீது புலிகளினால் கைக்குண்டு வீசப்பட்டதால் அதில் பயணம் செய்த ஐவரும் பாதிக்கப்பட்டனர். ஐவரில் ஒருவர் ஸ்தலத்திலேயே ஷஹீதானார். ஏனைய காயமடைந்த நால்வருள் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஷஹீதானார். எனவே மேற்குறித்த இரண்டு சம்பவங்களுக்குமிடையில் ஒரு இடையறுக்கப்படாத இணைப்பு உள்ளதை நாம் அவதானிக்கலாம்.

எமது முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பலரின் தன்மையென்னவென்றால், தம்மைச் சக்தியின் சக்தி என்றும், சக்தியின் ஈரல், இதயம், சக்தியின் குருதி, சக்தியின் சிறுநீர் என்றும் விளித்து தொலைபேசிகளில் பெருமையாக சுயஅறிமுகம் செய்வதைக் காணும்போது குருதி நாளம் வெடித்து குற்றுயிராகின்றது இதயம். குறிப்பாக எமது சமூகத்தைச் சேர்ந்த முஸ்லிம் பெண்கள் சக்தி எப்.எம். மற்றும் சக்தி ரீ.வி.யில் தொலைபேசி வழியாக வெறுமனே பாட்டறிவிக்கும் அறிவிப்பாளர்களுடன் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவதும், மேற்குறிப்பிட்ட பெயர்களால் தம்மைச் சுட்டி தாழ்ந்து போவதும் மனதை ரணமாக்குகின்றது. இன்னும் கொஞ்சம் விட்டால் நமது சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தம்மை சக்தியின் மலம் என்று கூடச் சொல்லி சந்தோஷப்படலாம்.

> உண்மையில் குறித்த சம்பவத்தில் மரணமான சகோதரர் ஒரு குடிகாரரல்ல. மேலும் சம்பவம் நடைபெற்ற தினம் அவர் நோன்பு நோற்றிருந்தார். அவர் இஃப்தார் செய்த சில நிமிடங்களின் பின்னரே அவர் மீது புலி உறுப்பினரால் கைக்குண்டு வீசப்பட்டு அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

சகோதரர்களே! சற்று சிந்தித்துப் பாருங்கள். எம்மைக் குறிவைத்து விஷக்கத்தி எறியும் இவ்வாறான ஊடகங்களில் ஏன் எம்மை ஏலம் போட்டுக்கொண்டிருக்கிறோம். ஒருவகையில் பார்த்தால் துயர் சுமக்கும் கிழக்கு முஸ்லிம்களின் வேதனையைக் கொச்சைப் படுத்தும் இவ்வாறான அலைவரிசைகளில் நீங்கள் அடிமைப்பட்டுக் கிடப்பது அந்த மக்களுக்குச் செய்யும் அதளபாதாளத்துரோகம். சக்தி எப்.எம். மட்டுமல்ல, சூரியன் எப். எம். கூட இவ்வாறு பல தடவைகளில் முஸ்லிம் விரோதப் போக்கைக் கடைப்பிடித்திருப்பதும், கடைப்பிடித்துவருவதும் சாதாரண நிகழ்வாகிவிட்டது.

இது தவிரவும், கடந்த 28.11.2003ம் திகதியன்று கிண்ணியா நடுஊற்றுப் பிரதேசத்தில் மூன்று முஸ்லிம் அப்பாவி விவசாயிகள் மிகக் கொடூரமான முறையில் புலிகளினால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். தமது பயிர்களைப் பாதுகாக்கக் காவலுக்குச் சென்ற நாகூர் முஹம்மது பழீல் (56), அச்சி முஹம்மது அப்துல் ஹஸன் (65), அப்துல் முத்தலிபு சுபைர் (57) ஆகிய மூவரினதும் தலைகளைக் கோடாரி கொண்டு வெட்டிப் பிளந்து உடல் பூராவும் வெட்டிச் சிதைத்து அவர்களின் மூளை வெளியே வருமளவு தலையைப் பிளந்து மிகவும் மிலேச்சத்தனமாக மனிதாபிமானமற்ற முறையில் படுகொலை செய்திருந்தனர்.

இந்தக் காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளைக் கடந்த 30-11-2003 அன்றைய சண்டே ஒப்சேவர் பத்திரிகை தனது முன்பக்கத்தில் உண்மைக்கு முற்றிலும் முரணான வகையில் துளிகூட உண்மையின்றி செய்தியை வெளியிட்டிருந்தது. குறிப்பிட்ட செய்தியின்படி 'குறிப்பிட்ட இம்மூவரின் படுகொலைகளும் காணிப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டதாகும்' என்று. குறித்த இச்செய்தியை சண்டே ஒப்சேவருக்கு திருகோணமலை மாவட்ட எஸ்.எஸ்.பி. உபாலி ஹேவகே




தெரிவித்ததாகக் காட்டி திருமலை மாவட்ட நிருபர் பி. கிருஷ்ணஸ்வாமியே இதனை எழுதியிருந்தார்.

மேற்குறித்த செய்தியில் எவ்விதமான உண்மையுமில்லை என்பதனை கிண்ணியா முஸ்லிம்கள் அனைவரும் அறிவர். குறித்த சம்பவத்தில் கொல்லப்பட்ட மூன்று முஸ்லிம் விவசாயிகளும் எந்தத் தமிழ் விவசாயியுடனும் இதுவரை பகைப்படவுமில்லை; வேறெதுவும் பிணக்கில் ஈடுபடவுமில்லை. மேலும் குறித்த செய்தியில் தமிழ்க் கிராமங்களில் முஸ்லிம் விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதாகக் கூறப்பட்டுள்ளது. அது அப்பட்டமான பொய்யாகும். ஏனெனில் குறித்த சம்பவம் இடம்பெற்ற நடுஊற்றுப் பிரதேசம் முழுக்க முழுக்க முஸ்லிம்களுக்குச் சொந்தமான பிரதேசம் என்பதோடு பன்னெடுங்காலமாக முஸ்லிம்கள் நடு ஊற்றில் பயிர் செய்தும் வருகின்றனர். தவிரவும் வேறெந்த தமிழ்க்கிராமங்களிலும் முஸ்லிம்கள் இதுவரை பயிர் செய்யவில்லை என்பதோடு தமக்குச் சொந்தமான காணியிலேயே பயிர் செய்தும் வருகின்றனர்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, இந்தப்படுகொலைகளுக்குக் காரணகர்த்தாக்கள் மூன்றாம் நபர்கள் என்ற போர்வைக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் புலிகளே என்பது ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றது. இது இவ்வாறிருக்க நடந்த படுகொலைகளுக்கான காரணத்தைப் புதிதாய் உருவாக்கி நிகழ்வை வேறுகோணத்தில் ஒப்சேவர் பத்திரிகை வெளியிட்டிருந்தது.

# பெண்பால் அகதிகள்

லூயி புனுயெலின் சர்ரியலிச படங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட வகையில் எடுக்கப்பட்டது 'சேம்பர் மெய்ட்' இது வழக்கமான பிரெஞ்ச் பாணியில் அமைந்த நேரடியாக கதை சொல்லும் படம். தனிமனித வக்கிரங்களை மிகைப்படுத்தாமல் கையாளுவதுதான் இப்படத்தின் மிகமுக்கிய உத்தியாகும். சமூகத்தில் இயல்பான, பொறுப்புள்ள மனிதர்களாக வாழ்பவர்களின் பாலியல் வக்கிரத்தை, குரூரத்தை மையமாக வைத்து உருவாக்கப் பட்ட கதை. இதில் வரும் ஆண்கள் அத்துமீறி பெண் உடலை பயன்படுத்த முனைகிறார்கள். அரசுப்படைச் சிப்பாயாய் இருந்து பின்பு நாசிகளுக் கெதிரான புரட்சிப் படையில் இயங்குபவன் 10 வயது சிறுமியை பாலியல் வன்முறையினால் கொல்கிறான். நாசிகள் வெளியேற்றப்பட்ட பிறகு அவன் எந்தவித குற்றவுணர்வுமற்று பிரெஞ்ச் தேசியவாதியாக பெருமையுடன் விழாவைக் கொண்டாடுவதுடன் படம் முடிகிறது. மனித மனத்தின் ஒரு தளத்தில் பாசிசம் இருந்து கொண்டேயிருப்பதும் பேரளவில் இனப்படுகொலையாகவும், நுண்ணளவில் பிறவுடல் மற்றும் மனதின் மீதான வன்முறையாகவும் அது செயல்பட்டுக் கொண்டிருக்கும் தன்மையும் இப்படத்தில் பேசப்படுகிறது. தேசியவாதம், தியாகம் என்பதற்குள் பதுங்கிக்கொள்ள வன்முறை எப்போதும் தயாராக இருக்கிறது என்பதும் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. தினவாழ்வில் அன்றாடம் நிகழும் சிறு சிறு ஒடுக்குதல் மற்றும் வன்முறையின் கூட்டுவடிவமாகத்தான் பேரளவிலான பாசிசம் உருவாகிறது. பாசிசத்தை மறுக்க நினைக்கும் ஒவ்வொருவரும் இந்த நுண்ணளவிலான பதிலிலும் மிகக் கவனமாக இருக்க வேண்டியிருக்கிறது. அறிவு, அழகியல், கோட்பாடு போன்றவை அனைத்தும் இதற்கான எதிர்க்கருவியாகப் பயன்படாதபோது விடுதலை என்பது பற்றிப் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை.



நான் 11ம் வகுப்பு படிக்கும்போது ஒரு மார்கழி மாத காலையில் பெண்கள், பிள்ளைகள் தெருமுழுக்க கலகலப்பாக கோலம் போட்டுக்கொண்டிருந்தோம். அப்போது ஒரே இரைச்சலும் சத்தமுமாக இருந்ததால் எல்லோரும் தெருமுனைக்கு வந்தோம். நடுத்தர வயதுடைய ஒரு பெண்ணை கைகளைப் பின்புறமாகக் கட்டி நிர்வாணமாக அடித்துத் துரத்தியபடி பெருங்கூட்டம் வந்தது. சோர்ந்து கீழே சாயும்போதெல்லாம் தடியால் அடித்துச் சுருளவைத்தனர். ஊர்ப்பெரிய மனிதர்களுடன் எட்டுத் தெருக்களைத் தாண்டி எங்கள் தெருவை அடைந்திருந்தனர். காலையில் நான்கு மணிக்கு ஒரு கூரைவீட்டில் திருடப் புகுந்தாள் எனவும் மார்கழிமாதம் என்பதால், அதிகாலையில் கோலம்போட வந்த சின்னப்பெண் பார்த்து சத்தம் போட அக்குடும்பம் இக்கொள்ளைக்காரியிடமிருந்து தப்பித்தது என்றும் கூறினர்.

அப்போதிலிருந்தே அடித்து உதைத்தாலும் அவள் பேசவேயில்லை என்றும், எனவே அவளைப் போலீஸ் ஸ்டேஷன் இழுத்துச் செல்வதாகவும் சொன்னார்கள். அம்மாவைப்பிடித்து உலுக்கினேன். அந்தப் பெண்ணைக் காப்பாற்றும்படி 'ஊர்ப் பெரிய மனிதர்களின் பொல்லாப்பு நமக்கு எதுக்கு சும்மா இரு" என்றாள். என் அத்தை அபூர்வம். கூட்டத்தைத் திட்டியபடி ஒரு புடவை எடுத்துவந்து, அந்தப் பெண்ணுக்குச் சுற்றி அவளைக் கட்டிக்கொண்டு அமர்ந்துவிட்டாள். அத்தை சொன்னாள்: 'அவள் திருடி என்றால் போலீஸைப் போய் கூட்டிவாருங்கள். அவளுடன் நான் இங்கேயே இருக்கிறேன். நீங்கள் யார் அவளை நிர்வாணமாக்கி அடிப்பதற்கு?" அந்தக் காலையில் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர் கொண்ட கும்பலோடு, அவளைத் துன்புறுத்தியும், ரசித்தும் வேடிக்கை பார்த்திருந்த அனைவருமே கலைந்து சென்றனர். யாருமே போலீஸை அழைத்து வரவில்லை. அவள் அழுதபடியே இருந்தாள். நல்ல அழகியாக இருந்திருக்க வேண்டும். வெளுத்த மாநிறத்தில், மொட்டை அடித்து முளைத்த சுருள் கேசத்துடன், வடிவான முகத்துடன், வற்றிய தேகத்துடன் இருந்தாள் சில வார்த்தைகள் பேசினாள். பெயர் கூட சொல்லத் தெரியவில்லை. அவள் புத்திபேதலித்து தன் குழந்தையைத் தேடிக் கொண்டிருப்பதாகத் தெரியவந்தது. சில நாட்கள் என் அத்தை வீட்டிலேயே இருந்தாள். திடீரென்று காணாமல் போய்விட்டாள்.

நான் பார்த்த மனநிலை பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவரும் ஊரையும் கடைத்தெருவையும் சுற்றிக்கொண்டிருப்பதும் கொஞ்ச நாட்களில் கர்ப்பிணியாக வயிறு பெருத்துத் திரிவதும் பிறகு காணாமல் போவதும் சகஜமாக இன்றுவரை இருந்துவருகிறது. ஆண் வீரர்கள் தன் தாய், சகோதரி, மனைவி மேல் கட்டவிழ்த்துவிடும் வன்முறைக்கலாச்சாரம், மூன்றுவயதுச் சிறுமியிலிருந்து கிழவி, பைத்தியங்களைக்கூட விட்டு வைப்பதில்லை. ஆண்களால் உருவாக்கப்பட்ட சமூக விதிகளும், அரசியலும் வன்முறையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. பால், சாதி, மதம், இனம், அரசு, தேசியம் என்ற அளவில் ஒன்றின் மீது ஒன்று இது மோதிச் செல்லும் சமயம் வாய்க்கும்போது பெரும் கொடூரமாக நிகழ்த்தப்படுகிறது. தனக்குப் பங்கு இல்லை என யாரும் சொல்லிக்கொள்ள முடியாதபடி பெரும் வலை பின்னப்பட்டுள்ளது. மதம், ஆன்மீகம், மனித மதிப்பீடுகள், ஒழுக்க விதிகள், லட்சியங்கள், கோட்பாடுகள் போன்றவை ஒவ்வொருவருக்குள்ளும் புதைந்து கிடக்கும் இந்த பாசிசத்தை இல்லாமல் செய்வதற்கும், வேறுவகையான மனித மன அமைப்பை உருவாக்குவதற்கும் தமக்குள் என்னென்ன வழிமுறைகளை வைத்திருக்கின்றன என நான் எப்போதும் யோசித்துப் பார்ப்பதுண்டு. சில சமயம் இவைதான் பாசிசம் மற்றும் வன்முறைகளுக்கு அடிப்படையாக உள்ளதோ என்று குழப்பமடைவதுண்டு. அதே சமயம் அப்படி முழுமையாகச் சொல்லிவிட முடியாது என்று எண்ணுவதுமுண்டு. இதே மனிதர்களுக்குள்ளிருந்துதான் மாபெரும் அன்பை பற்றிய ஏக்கம் சுரந்து கொண்டிருப்பதும் அதிசயமாகவே தோன்றுகிறது.

மாலதி மைத்திரி

நன்றி - தீராநதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போது நமக்குப் புரியும்...?

எமது நாட்டில் எமது மக்கள் மீதான அடக்குமுறைச் சேற்றுக்கும், துப்பாக்கி ரவைகளுக்கும் எதிராக புரட்சி வடிவிலோ போராட்ட வடிவிலோ ஏன் இன்னும் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை? உண்பதற்கும் உறங்குவதற்கும் மட்டும்தான் நமது சக்தி பயன்படுத்தப்பட வேண்டுமா? நமது எதிரி நிற்கும் பக்கம் எச்சில் துப்பவும் நமது கோழைத்தனம் இடம் கொடுக்கத் தயாரில்லை. இஸ்லாம் கோழைகளைப் பிறவுமில்லை அவர்களை வரவேற்கவுமில்லை. வீரமும், தீரமும் நிறைந்த உறுதிமிக்க தெளிவான சமூகத்தைத்தான் இஸ்லாம் எதிர்பார்க்கிறது. இன்று நாம் வீழ்ந்து தாழ்ந்து போய் விட்டோம். ஏன் இந்நிலை? இஸ்லாமிய வரலாறு எம்மைக் கோழைத்தனத்துடன்தான் வாழச் சொல்கிறதா? அன்றைய சஹாபாக்கள் இரண்டாகக் கிழிக்கப்பட்டும், சுடுமணலில் படுக்க வைத்துப் பாறாங்கல் ஏற்றப் பட்டும், துண்டு துண்டாக அரியப்பட்டும்தான் இஸ்லாத்தை வளர்த்தார்கள்.



நாம் இன்று சில சில்லறைக் காசிகளுக்கு ஆசைப்பட்டு மோகங்கொண்டு இஸ்லாத்தைச் சந்தைப்படுத்தி சந்திக்கு இழுத்திருக்கின்றோம். இந்நாட்டில் சிறுபான்மையினராக வாழும் இஸ்லாமியர்களாகிய நமக்கென்றொரு வரலாற்றுப் பாரம்பரியம் இருக்கின்றது. நாமும் இந்நாட்டின் சொந்தக்காரர்கள்தான். நமக்கும் இந்நாட்டில் உரிமையுண்டு. யாருக்கும் நாம் அஞ்சி பயந்து ஒடுங்கி நடுங்கி வாழ வேண்டிய அவசியமில்லை. எமது மக்களின் வாழ்வை யார் யாரோ சூறையாடப் போகிறார்களே இதை எம்மால் எப்படி ஜீரணிக்க முடியும்?

பல ஆண்டுகளாக தழைத்தோங்கி ஆழமாக வேர் பாய்ச்சி நிற்கின்ற எமது மக்கள் மீதான அடக்குமுறைவாதிகளின் ஒடுக்குமுறை, அடிமைத்தனை போன்றவற்றை வேரறுத்து ஒரு உறுதியான பலமிக்க, சகல உரிமைகளுடனும் வாழும் சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டியிருக்கின்றது. காலனித்துவ வாதிகள் நமது மக்கள் மீது அடர்ந்தேறுவதை சும்மா இருந்து பார்த்துக் கொண்டிருப்பதற்கு நாம் என்ன ஜீவனற்றுப் போன வெறும் ஜடங்களா? இஸ்லாம் அதிசயமானதோர் சக்தி என்பதை நடைமுறையில் இன்று மக்கள் நிரூபித்து வருகிறார்கள். அன்பின் நண்பர்களே! உலக நாடுகள் நவீனப்படுத்தி வைத்திருக்கும் யுத்தக் கருவிகள் எம்மை ஒன்றும் செய்திட இயலாது. நமது நெஞ்சில் ஈமான் எனும் வீரம் பாய்ச்சப் பட்டிருக்கின்றது. துப்பாக்கிக் குண்டுகள் எமது உடலைத் துளைக்கலாம். எமது ஈமானைத் துளைத்திட இயலாது. தாடி அறுக்கப்படுவதற்கும் நமது தலைகளில் இருந்து தொப்பிகள் களையப்படுவதற்கும் இனிமேலும் நாம் அனுமதிக்கக் கூடாது. அந்நியர்கள் நம்மை அசைவுகளற்றவர்களாக அடக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு குனிந்து போகவும் பணிந்து போகவும் பழக்கப்பட்டிருக்கிறோம். ஏன் இந்நிலை? நமக்குள் இருப்பது வீரமில்லையா? தீரமில்லையா? திரண்டு வாருங்களேன்.

நண்பர்களே! இன்று நாம் உலகச் செய்திகளையும், உலக நிகழ்ச்சிகளையும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியிருக்கின்றது. எங்கே என்ன நடைபெறக் கூடும்? என்பவற்றை விவேகத்துடன் ஆராய வேண்டியிருக்கின்றது. இஸ்லாமியர்கள் என்பவர்கள் வலைப்பின்னலில் கணினி போன்றவர்கள். ஒவ்வொரு நாட்டுக்குள்ளும், ஒவ்வொரு தனி நபருக்குள்ளும் தொடர்புகள் இருக்க வேண்டும்.

உலகம் இன்று மாறிக் கொண்டு வருகின்றது. நாளை அந்நியர்களுக்கும், முஸ்லிம்களுக்குமான முழுதளவிலான ஒரு யுத்தம் வெடிக்கலாம். அப்போது நாம் கோழைகளாக எதுவும் அறியாதவர்களாக இருந்து விடக்கூடாது. நாம் எப்போதும், எதற்கும் தயாராக இருந்து கொள்ள வேண்டும். உலக விவகாரங்களை அணுகுகின்ற முறையில் பல மகத்தான மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கின்றது. நாம் உண்ணும் உணவில், அணியும் ஆடையில், நடக்கும் பாதையில், பார்க்கும் காட்சியில், சுவாசிக்கும் காற்றில் அந்நியர்கள் அசிங்கங்களை கலந்து விட்டிருக்கிறார்கள். இவைகளை நாம் புரியாதவர்களாக இருந்து விடக் கூடாது.

இன்று மேலைத்தேயத்தின் கலாச்சாரம் எமது இளைய தலைமுறையின் ஆற்றல்களை இரும்புக் கூட்டுக்குள் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றது. இந்த இரும்புக் கூட்டை உடைத்தெறிவதில் நாம் காட்ட வேண்டிய பேராண்மை மகத்தானதாக இருக்கும். முஸ்லிம்களின் பிரச்சினைகள் எங்கே ஆரம்பிக்கின்றன என்று பார்த்தால் ஓர் உண்மை வெளிச்சத்துக்கு வரும். அனைத்தையும் படைத்த இறைவனுக்கெதிராக நடத்தும் அர்த்தமற்ற, பயனற்ற செயற்பாடுகளிலும் போக்குகளிலுமிருந்தே ஆரம்பிக்கின்றன. இஸ்லாத்தின் கடமைகளையும் பொறுப்புக்களையும் கண்காட்சியில், வைத்துத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இஸ்லாம் கூறும் வழிமுறைகளில் வாழத் தவறி விட்டோம்.

இஸ்லாமிய பெயர் தாங்கிகளாக மட்டுமே வாழ்கிறோமே தவிர உண்மையான இஸ்லாமியர்களாக வாழ மறந்து விட்டோம். இஸ்லாத்தை இஸ்லாமாகப் பின்பற்றும் போது நம்மை எதுவும், எவனும் ஒன்றும் செய்திட இயலாது. ஏனெனில் அப்போது அல்லாஹ் நம் பக்கம் இருப்பான்.

அன்பின் நண்பர்களே! அவமானத்துக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். மாற்றான் உங்களை அடித்து விரட்டி அனைத்தையும் சுருட்டிக் கொண்டு உங்களை நடுத்தெருவில் துரத்தி விடப் போகிறான். இது பாரிய அவமானமில்லையா? இதற்கெதிராக நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? இனிமேல் என்ன செய்யப்போகிறீர்கள்? உங்களது அடிமனத்தின் ஆழத்தில் இவ்வினாக்களைத் தொடுத்துப் பாருங்கள். உங்களுக்கு ஓர் உண்மை புரிய வரும். அதுதான் போராட்டம் என்ற உண்மை. புரட்சி என்ற உண்மை.

நமது நாட்டில் இன்றைய பிரச்சினையில் கண்காணிப்பாளர்களோ அனுசரணையாளர்களோ நமக்குண்டான எந்தப் பிரச்சினைகளையும் தீர்த்து விடவில்லை. மாறாக எல்லாப் பிரச்சினைகளையும் இன்னும் சிக்கலாக்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் நமது நாட்டுக்கு வருவதும் போவதும் அவர்களது பொழுது போக்கிற்காகவும் உல்லாசத்திற்காகவுமே தவிர, நமது நாட்டின் பிரச்சினையில் அக்கறை கொண்டல்ல. இவர்கள் எல்லோரும் சேர்ந்துதான் பாரியதொரு நாடகத்தைத் திட்டமிட்டு நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் நமது முஸ்லிம் அரசியல் தலைவர்களும் பல பாத்திரங்களை ஏற்று நடித்து வருகிறார்கள். நாம் அவற்றைப் பார்த்து வாய்பொத்தி மௌனமாக ரசித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆர். அலிகான் -
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

பெரிய நீலாவணை ஜம்இயத்துல் உலமா சபையின் அனுசரணையுடன் அக்பர் கிராம மக்தபத்துல் இஸ்லாமிய்யா மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த 'இஸ்லாமியப் பெண்கள் எழுச்சி மாநாடு" மஸ்ஜிதுல் அக்பர் ஜும்ஆ பள்ளிவாயலில் நடைபெற்ற போது (2003.11.22) கலந்து கொண்ட இஸ்லாமியப் பெண்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

(படம், தகவல் - மருதமுனை ஹர்ஷா)





## உங்கள் பார்வைக்கு...

### ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதை!

கிண்ணியாவில், மூதூரில் நடைபெற்ற சம்பவங்களில் முப்படைகளின் தலைவி என்ற வகையில் ஜனாதிபதி முஸ்லிம்களை பாதுகாக்கத் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டை "முஸ்லிம்களின் காவலன் பசீர் சேகுதாவூத்" இப்போது முன்வைத்து வருகிறார். இதுபற்றிய ஆச்சரியம் நமது சமூக மட்டங்களில் இப்போது பரவலாகக் கதைக்கப்படுகிறது. இதன் மூலம் பசீர் சேகு தாவூத் சொல்ல வருவது என்ன என்பது பற்றிய அக்கறை நமக்கு இல்லை.

ஆனால், ரணில் விக்ரமசிங்கவின் பொறுப்பில் பாதுகாப்பு அமைச்சு இருக்கும்போது பல சம்பவங்கள் தொடர்ச்சியாக நடந்தன. வாழைச்சேனையில் இரண்டு முஸ்லிம்களின் சடலங்களைக்கூட, பொலிஸ், நீதிபதி, உறவினர்கள் முன்பாக புலிகள் நெருப்பில் போட்டு எரித்தனர். அப்போது ஏன் இந்த பசீர் சேகுதாவூத், ரணில் முஸ்லிம்களை பாதுகாக்கத் தவறிவிட்டார் என குற்றம் சாட்டவில்லை. மிலிந்த மொரகொடவிற்கு தரகு வேலை செய்வதை பசீர் ஐ.தே.க + மு.கா. கட்சி மட்டத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இனியும் கிழக்கு முஸ்லிம்களை ஐக்கிய தேசியக் கட்சிக்கு பசீரால் கூட்டிக் கொடுக்க முடியாது! பசீர்தான் இப்படியென்றால் கிண்ணியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்களுக்கும் என்ன புத்தியா பேதலித்துப்போய்விட்டது என வாழைச்சேனை அன்பர் ஒருவர் எழுதியுள்ளார்.

### பாவம் மக்கள்!

கிண்ணியாவில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது அந்த மக்களை பார்வையிட மு.கா. தலைவர் சென்னையிலிருந்து உடனடியாக ஹாரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோரை கொழும்புக்கு அனுப்பி வைத்தாராம். அவர்கள் வந்து கிண்ணியாவுக்கு போவதற்கு திருமலை மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளையும் அழைத்த போது அவர்கள் அப்படிப் போகத் தேவையில்லை என்றார்களாம்!

### காதில் விழுந்த செய்தி

கல்குடா பிரதேசத்திலிருந்து ஒருவரை மு.கா. சார்பில் தேர்தலில் நிறுத்துவதற்கு ஒரு குழு மு.கா. தலைவரைச் சந்தித்ததாம். அச்சந்திப்பில் 'கல்குடா பிரதேசத்திற்குள் வந்து பசீர் சேகு தாவூத் தேர்தல் வேலை செய்யக்கூடாது' என்ற தொனி அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டதாம். அதற்கு தலைவர் உடன்படவில்லையாம். அதனால் சென்றவர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளதாம் வந்த குழுவினருக்கு. அத்துடன் முகைதீன் அப்துல் காதரை மீளவும் மு.காங்கிரஸிற்குள் கொண்டு வாருங்கள் என்று தலைவரால் சொல்லப்பட்டதாம். வந்தவர்களில் ஒரு சிலர் அப்துல் காதரிடம் சென்று மு. காங்கிரஸில் மீளச்சென்று இணைந்து கொள்ளுங்கள் என வேண்டினராம். அதற்கு அப்துல் காதர், பள்ளி சம்மேளனத்தால் ஊர் சார்பாக ஒரு கடிதம் தாருங்கள் என்றாராம். போனவர்களில் ஒருவர் சொன்னாராம், நீங்கள் எங்களிடம் கேட்டா மு. காங்கிரசில் இருந்து பிரிந்து அதாஉல்லா அணிக்குப் போனீர்கள் என்று!

### ஹிஸ்புல்லாவுக்கு தரைமார்க்கமாக செல்ல முடியாதாம்!

கடந்த மாதம் காத்தான்குடியிலிருந்து கொழும்புக்கு தரைமார்க்கமாக வந்தபோது புலிகளால் ஏவப்பட்ட தமிழ்ச் சகதிகள் ஹிஸ்புல்லாவின் வாகனத்தை வழிமறித்து தாக்கினர். இது நமக்குத் தெரிந்த செய்தி. ஹிஸ்புல்லா தெய்வாதீனமாக அவ்வாகனத்தில் அப்போது இருக்கவில்லை. இருந்திருந்தால் இதுவும் முஸ்லிம்களுக்குள் நடைபெறும் கட்சி அரசியல் போட்டியால் நடந்தது என புலிகள் தரப்பு அறிக்கை விட்டிருக்கும். இப்போது ஹிஸ்புல்லா மின்னேரியாவுக்கு வாகனத்தில் வந்து அங்கிருந்து ஹெலியில்தானாம் மட்டக்களப்புக்குப் பயணம். இதுதான் நமக்கான சமாதானக் காலம் என்கிறார் காத்தான்குடி அன்பர் ஒருவர்.

### பௌஸி, மஹிந்த ரணிலுக்குத்தான் ஆதரவு?

சந்திரிகா-ஜே.வி.பி. கூட்டு நடந்தால் பௌஸி, மஹிந்த ஆகியோர் ரணிலுக்குத்தான் ஆதரவு அளிப்போம் என ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்களிடம் உறுதியாகத் தெரிவித்துள்ளனராம். பௌஸியின் அன்றைய தேசிய அரசாங்க யோசனையை அங்கீகரிக்காத அம்மையார் இப்போது வசமாக பௌஸியிடம் மாட்டிக் கொண்டுள்ளாராம்! எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தவும் ஜே.வி.பியுடனான கூட்டு சரியென்றால், நாங்கள் ரணிலுடன் கூட்டுச் சேர்வதும் சரி என்கிறாராம்! அம்மையார் அம்போவாகிப் போயும்விடலாம்!

### மூன்று எம்.பி க்களின் கதை

மூன்று பேரும் முக்கியமான இளம் எம்.பிக்கள். அடிக்கடி முஸ்லிம்களுக்காக சும்மாவேனும் அது இது என வீராவேசமாகப் பேசுவார்கள். இப்போது அவர்களுக்கு தலைவர் தேர்தல் டிக்கட் கொடுக்கமாட்டார் என்கிற செய்தி பரவலாக அடிபடத் தொடங்கிவிட்டதாம். அவர்களுக்கு பதிலீடாக ஒவ்வொரு இடத்திலும் பலர் தயார்படுத்தப்பட்டுவிட்டனராம். உள்ளுக்குள் பல சதிகள், முரண்பாடுகள் ஆரம்பித்து விட்டனவாம். எனக்கு டிக்கட் இல்லாவிட்டால் தலைவர் ஊருக்கு வருவாரா என மூவரும் நெருங்கியவர்களிடம் கேட்கத் தொடங்கிவிட்டனராம்!

### ஹுப்ரத் எம்.பி. அஸ்ர.ஃப் காங்கிரஸில் அக்கறை காட்டுவதில்லை!

மு.கா. வின் முக்கிய பொறுப்பான பொதுச் செயலாளர் பதவியில் இருந்து, ஹக்கீமுக்கு எதிரான குற்றச் சாட்டுகளை முன் எடுத்து, அஷ்ரஃப் காங்கிரஸின் பொதுச் செயலாளராக இருப்பவர் ஹுப்ரத். இப்போது அவர் அதன் செயற்பாடுகளில் அதிருப்தி கண்டு அஷ்ரஃப் காங்கிரஸில் இருந்து ஒதுங்கி இருக்கிறாராம்! பலர் இதுபற்றி பேசியும் அவர் கேட்கும் கேள்விகளுக்கு சமரசம் செய்யப் போபவர்களால் ஒரு பதிலும் சொல்ல முடியாதுள்ளதாம்!

### அதாஉல்லா தனித்துப் போனார்?

அதாஉல்லாவுடன் ஐந்து எம்பிக்கள் பிரிந்து போனார்கள். இப்போது அதாஉல்லா மட்டும் தனித்து நிற்பதாகக் கேள்வி. நூர்தீன் மசூர், ஹுப்ரத் அப்துல் காதர் ஆகியோர் போயே விட்டார்களாம்! "இன்னா அன்னா" என்று இருக்கிறாராம்.. அஸீஸ் எம்.பி . தனது பென்சன் காலம் (5 வருடம்) முடியும்வரை தேசியப் பட்டியல் எம்.பி. யார் தருவார்களோ அவர்களுடன் நிற்பேன் என்கிறாராம்! அதாஉல்லாவால் அஸீஸ் எம்.பி. யின் தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவது முடியாது என்பது யாவருக்கும் தெரிந்ததே!

### யார் பொலிஸ்மா அதிபர்?

காக்கி உடையணியும் உயர் பதவியை எதிர்பார்த்திருக்கும் மூவர், பிரபல தையல்காரரிடம் சென்று அப்பெருந்தினத்துக்காகச் சீருடை தைக்க ஓடர் செய்துள்ளனராம். உண்மையில் ஒருவருக்குத்தான் அந்த அரியவாய்ப்பு கிட்டும். ஆகக் கூடிய சிரேஷ்ட அதிகாரி 'சந்திரா'தான் எனப் பொலிஸ் ஆணைக்குழு கூறியுள்ளது. எஞ்சியவர்களின் கண்ணீரைத் துடைக்க அதிக கைக்குட்டைகள் தேவைப்படுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதல் தவிர்ப்பு உடன்படிக்கைக்குப் பின்னர் கல்குடாத் தொகுதி முஸ்லிம்களின் நிலை

## 01. கடத்தப்பட்ட - காயப்படுத்தப்பட்ட - கொல்லப்பட்ட சம்பவங்கள

01. 04.01.2003 ஆட்டோ சாரதி ஹுசைன் என்பவரை, கல்குடாவுக்கு ஆட்டோவுடன் கூலிக்குப்பேசி, பயணப்பட்டுக் கொண்டிருந்த போது, கல்மடு என்னும் இடத்தில் வைத்து, பேசிச் சென்றவர்களே வெட்டிக் கொன்றனர்.

02. 12.06.2003 வாழைச்சேனை முஸ்லிம் பஸாரில் 'கிறனைட்" வீசி 07 நபர்களை காயப்படுத்தினர். மீண்டும் 15.06.2003ல் அதே இடத்தில் 'கிறனைட்" எறிந்து 04 நபர்களை காயப்படுத்தினர்.

03. 09.06.2003 ஆத்துச்சேனை என்னும் வயற்பிரதேசத்தில் வைத்து, ஐதுருஸ் முஹம்மது கஸ்ஸாலி என்பவரை கடத்திக் கொண்டு போய்க் கொலை செய்துள்ளனர்.

04. 27.07.2003 வாகனேரி குளத்திற்கு, வழமையாக மீன்பிடிக்கச் சென்ற பின்வரும் நபர்கள் கடத்திக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹயாத்து முஹம்மது உசன்
நெய்னா முகம்மது அபூசாலி
அபூபக்கர் ஹயாத்து முகம்மது.

05. 23.08.2003 அப்துல் அஸீஸ் முகம்மது இக்பால் என்னும் கோழி வியாபாரி உறுகாமத்திற்குச் செல்லும் வழியில் பணத்துடன் கடத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

06. 13.09.2003ல் மீன் வியாபாரி முகம்மது புகாரி உசனார் மீன் வாங்கச் சென்ற சமயம், கோரகல்லிமடுவில் வைத்து, அவரிடமிருந்த ரூபா 3000 யை கொள்ளையிட்ட பின்னர் மரத்தில் 12 மணித்தியாலங்கள் கட்டப்பட்டு கடுமையாக அடித்துத்துன்புறுத்தப்பட்டுள்ளார்.

## 02. பறிக்கப்பட்ட வண்டில்களும், மாடுகளும்

01. 13.06.2003ல் பின்வருவோருடைய இரட்டைமாட்டு வண்டில்களும், மாடுகளும் ஜெயந்தியாய எல்லைக்கிராமத்தில் வைத்து பறித்துச் செல்லப்பட்டது. இவை தலா ரூபா. 45.000 பெறுமதியானவை.

மு. இஸ்மாயில், அ. சுபைர், இ. புகாரி .ச. லெ. மஃறூப்

02. 16.06.2003 வாகனேரிக் காட்டில் வைத்து பின்வருவோரின் இரட்டைமாட்டு வண்டில்கள் மாடுகளுடன் கடத்தப்பட்டுள்ளன. இவைகளில் காய்ந்த விறகுகளே ஏற்றப்பட்டிருந்தன. இவற்றின் பெறுமதி தலா ரூபா. 50.000 ஆகும்.

மு. கா. மஃறூப், மு. ஹ. இறம்ளாா

03. 21. 07. 2003 ஜெயந்தியாய காட்டிற்கு விறகு வெட்டச் சென்ற பின்வருவோர்களுடைய இரட்டைமாட்டு வண்டில்களும், மாடுகளும் பறித்துச் செல்லப்பட்டுள்ளன. இவைகள் ஒவ்வொன்றின் சராசரிப் பெறுமதி ரூபா. 45.000 ஆகும்.

மு. உதுமாலெப்பை, அ. சின்னவர், எம்.எச் றம்ழார்
ஐ. சரீப், எம். முஸ்தபா

இவர்களின் வண்டில் மாடுகள் அப்பகுதி எல்.ரி.ரி. யினரான தாமரை, வின்சன், மூர்த்தி, சிவா, போன்ற இனங் காணப்பட்டவர்களின் குழுவாலேயே பறிக்கப்பட்டிருந்தன.

04. 27.07.2003 மீயான்குளம் என்னுமிடத்தில் வைத்து எல்.ரி.ரி.ஈ.என இனங்காணப்பட்டவர்களால் பின்வருவோரின் இரட்டை மாட்டுவண்டில்கள் விறகுகளுடன் பறித்துச் செல்லப்பட்டன. இவை ஒவ்வொன்றும் தலா ரூபா 55.000 பெறுமதியானவை.

யூ. லெ. ஹயாத்து முகம்மது . சீ. மு. முஸ்தபா

05. 08.09.2003 மு.இ. காதர் என்பவரின் 54.000 ரூபா பெறுமதியான இரட்டை மாட்டுவண்டில்கள் பறிக்கப்பட்டுள்ளன.

## 03. பின்வருவோருடைய கால்நடைகள் (பசு இன, எருமை இன) கொள்ளை இடப்பட்டுள்ளன.

01. 15.06. 2003 அ. ஜமால்தீன் என்பவரின், 02 எருமை மாடுகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இதனை முன்பு இந்துவாகவிருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாக போலியாக நடித்து வந்த, இனங்காணப்பட்ட நபராலேயே கொள்ளை இடப்பட்டுள்ளன. இவர் பல முஸ்லிம் இளைஞர்களை ஏற்கனவே கொலை செய்தவர்.

02. 07.08.2003. எஸ்.ஏ. குத்தூஸ் என்பவரின் வளர்ப்பாடுகள் 33 கொள்ளையிடப்பட்டுள்ளன.

03. 19.08.2003 அ.உ.லெ முகம்மது நளீம் என்பவரின் 11 எருமை மாடுகள் ஹிஜ்ரா நகர் - நாவலடிச்சந்தியில் வைத்துப் பறித்துச் செல்லப்பட்டுள்ளன. இவைகளுக்கு எல்.ரி.ரி.யினருக்கு தலா ஒவ்வொன்றுக்கும் 1000 ரூபா வரி கட்டப்பட்டிருந்தது.

04. 05.09.2003 எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களான சந்திரா, ரூபன் என்பவர்களால் ஐ.எல் முஸ்தபா என்பவருக்குச் சொந்தமான 60 எருமை மாடுகள், புனானை - மயிலந்தனையில் வைத்து ஒதுக்கிக் கொண்டு செல்லப்பட்டன. இவற்றின் அண்ணளவான பெறுமதி 20 இலட்சங்களுக்கும் மேலாகும்.

05. 05.09.2003 மு.ச. ஆதம்பாவா என்பவரின் 40.000 ரூபா பெறுமதியான இருமாடுகள், புனானையில் வைத்து புலிகளால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

06. 07.09.2003 பின்வருவோரின் 31 பசுவின வளர்ப்பு மாடுகள் எல்.ரி.ரி.யினரால் நாவலடி-கோழிப்பண்ணை ஏற்றத்தில் வைத்து கொண்டு செல்லப்பட்டுள்ளன.

எச்.எம். ஜெமீல், உ.லெ. முஸ்தபா, இ.மு. முத்து
மு.பு. உசனார், இ. புஹாரி, அ. காதர்ஹாஜி, யூ. இலவத்தம்பி

## 04. பின்வருவோரின் வாகனங்கள் கடத்தப்பட்டுள்ளன.

01. 01.06.2003 எச்.எம். லத்தீப் காவத்தமுனை என்பவரின் 43 - 4053ம் இலக்க உழவு இயந்திரம் எல்.ரி.ரி.யினரால் கடத்தப்பட்டுள்ளது. அது விடுதலை புலி உறுப்பினர்



சிவத்திரனின உடைமையாக ஆக்கப்பட்டுள்ளது.

02. 27.06.2003 புனானை வயல் கண்டத்திலுள்ள கிடச்சிமடு ஓடையருகில் வைத்து, ஓட்டமாவடி 03யைச் சேர்ந்த முகம்மது அலியார் பௌஷர் என்பவரின் பின்வரும் பிரான்ட்னியூ மோட்டார் சைக்கிள் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இது அப்பகுதி நிதிப்பொறுப்புக்குரிய விடுதலை புலிகளிடம் பாவனையிலுள்ளது. இல : EPAE - 5269 கொள்வனவு பத்திர இல : AGE 10877

03. 27.06.2003 கோறளைப்பற்று மேற்கு - ஓட்டமாவடி பிரதேச சபைக்குரிய கழிவகற்றலுக்காக பொதுமக்களின் வரியில் பெறப்பட்ட EP GK 3690ம் இலக்க உழவு இயந்திரம் கடத்தப்பட்டுள்ளது. இது எட்டு இலட்சம் ரூபா பெறுமானமுள்ளது.

04. 04.08.2003 எம்.எம். பாறூக் மீராவோடை - 04 என்பவருடைய போர்க்குசன் 240 இன. 37-7669ம் இலக்க உழவு இயந்திரம் கடத்திச் செல்லப்பட்டு, புலிகளின் பொத்தான வயல் கண்ட பொறுப்பாளரின் உடைமையாக்கப்பட்டுள்ளது.

05. 10.08.2003 எச்.எம்.எம் சுபைர், மீராவோடை என்பவரின் இன்டநஷனல் இன 36 ஸ்ரீ 2277ம் இலக்க உழவு இயந்திரம் காணிக்கை வேப்பையடியில் வைத்து, புலிகளின் வாகரைப்பகுதி குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டது. அதனை விடுவிப்புச் செய்வதற்கு ரூபா 50.000 பெற்றுக்கொள்ளப்பட்டும் இயந்திரம் (பழுதான நிலையில்) பெறப்பட்டது. டெயிலர் - பெட்டி கொடுக்கப்படவில்லை.

06. 15.07.2003 எம்.அ. முகம்மது நஸீர், பிரதான வீதி, ஓட்டமாவடி என்பவருக்குச் சொந்தமான EPGT 0648ம் இலக்க, பிரன்ட்னியூ பெசன் மோட்டார் சைக்கிள் கடத்திச் செல்லப்பட்டது.

07. 22.07.2003 எம்.எஸ் பரீட் - மீராவோடை என்பவருக்குச் சொந்தமான இன்றநஷனல் உழவு இயந்திரம் கடத்தப்பட்டு ரூபா 30.000 பெறப்பட்டபின் இயந்திரம் மட்டும் மீளக் கிடைத்துள்ளது. (பழுதானநிலையில்) பெட்டி - டெயிலர் வழங்கப்பட்வில்லை.

## 05. பறிக்கப்பட்ட மீன் பிடிப்படகுகள்

01. 18.09.2003 சீனிமுகம்மது ஐயூப்கான் - வாழைச்சேனை 05 என்பவருடைய நில்மெரின் பிளாஸ்ரிக் பம், பொருட்களும் கடத்தப்பட்டுள்ளன.

02. 09.08.2003 - புனானை (அணைக்கட்டு)யில் வைத்து பின்வருவோரின், தோணிகளும், வலைகளும், பொருட்களும் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

எஸ்.ஏ. கபூர், எம். ஹயாத்துமுகம்மது, ரி.எம். நஜிமுத்தீன்
யூ.எல். யூசுப் லெப்பை, ஆ.பா. சின்வர்

## 06. இறால் பண்ணைகளிலிருந்து கடத்தப்பட்டவை

01. 21.09.2003 A.L. சகாப்தீன் என்பவரின் இறால் பண்ணைக்குள் ஊடுருவி அங்கிருந்த நீரிறைக்கும் இயந்திரம், பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

02. 26.09.2003 E.L.M. மஹ்றூப் என்பவரின் பண்ணையுள் புகுந்து 75.000 ரூபா பணமும், பொருட்களும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

03. 28.09.2003 A.L. காசினாரின் பண்ணையுள் புகுந்து வலைகள், பொருட்கள், பல இலட்சம் பெறுமதியான இறால்கள் என்பவற்றையும், தோணியையும் கொள்ளையிட்டுள்ளனர்.

## 07) பின்வரும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வயற்கண்டங்கள் பலாத்காரமாக எல்.ரி.ரி.யினரால் செய்கை பண்ணப்படுகின்றன, குத்தகை கூட கொடுக்கப் படுவதில்லை.

01. நூறு ஏக்கர் கண்டம் - 80 ஏக்கர்
02. சேம்பியடி கண்டம் - 150 ஏக்கர்
03. பட்டியடி வெளிக் கண்டம் - 285 ஏக்கர்
04. ஆணைவணங்கிக் கண்டம் -1700 ஏக்கர்
05. கள்ளிச்சை கண்டம் - 650 ஏக்கர்
06. கோங்குலை கண்டம் - 1060 ஏக்கர்
07. பூலக்காடு கண்டம் - 400 ஏக்கர்
08. சின்னக் கோங்குலை கண்டம் - 480 ஏக்கர்
09. வெள்ளாமைச்சேனை கண்டம் - 2200 ஏக்கர்
10. புனானை கண்டம் - 350 ஏக்கர்
11. காரமுனை கண்டம் - 700 ஏக்கர்
12. ஆலங்குளம் கண்டம் - 280 ஏக்கர்
13. கேணி நகர் கண்டம் - 250 ஏக்கர்
14. குப்புளாக்கொடி கண்டம் - 180 ஏக்கர்
15. தளவாய் கண்டம் - 310 ஏக்கர்
16. மாங்கேணி கண்டம் - 215 ஏக்கர்
17. காயங்கேணி கண்டம் - 200 ஏக்கர்

## 08) கப்பம் வரி

01. விவசாயிகளிடம் 1 மூடை நெல்லுக்கு 30 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை பெறப்படுகிறது.
02. ஒரு போகத்திற்கு, உழவு இயந்திரமொன்றுக்கு உழவுவதற்கு ரூபா 10.000 உம், சூடடிப்புக்கு ரூபா.15000 உம் வரி பெறப்படுகிறது.
03. ஒரு இரட்டை மாட்டு வண்டிலுக்கு விறகு ஏற்றுவதற்கு 500 ரூபா பெறப்படுகிறது.
04. ஒரு டிரக்டர் மணல் பெற 150 ரூபா கப்பம் பெறப்படுகிறது.
05. ஒரு டிரக்டர் கிறவல் ஏற்ற ரூபாய் 125 பெறப்படுகிறது.
06. ஒரு எருமை மாடு வாங்குவதற்கு மேலதிகமாக 1000 ரூபாய் அறவிடப்படுகிறது.
07. ஒவ்வொரு அரிசி ஆலையும் மாதாந்தம் 25.000 ரூபா செலுத்த நிர்ப்பந்திக்கப்படுகிறது.
08. ஒவ்வொரு இயந்திரப் படகுக்கும் மாதாந்தம் 2500 ரூபா பெறப்படுகிறது.
09. ஒவ்வொரு மரவாலைகளும், இறால் பண்ணையும் ஆறுமாதங்களுக்கொரு முறை 50.000 முதல் 100.000 ரூபா கப்பம் செலுத்தப் பணிக்கப்பட்டுள்ளது.
10. சைக்கிள் மூலம் விறகு பெறுபவர்கள் ஒவ்வொரு முறையும் 75 ரூபா செலுத்த வேண்டும்.
11. போக்குவரத்து சேவையிலீடுபடும் வாகனக்காரர்கள் மாதாந்தம் 3000 ரூபா முதல் 6000 ரூபா வரை செலுத்த வேண்டும்.
12. ஒப்பந்த வேலைகள் செய்வோர், கிடைக்கும் இலாபத்தில் 30% -60% செலுத்தவேண்டும் அல்லது ஒதுக்கப்படும் நிதியில் 15 [?] பங்கை செலுத்த வேண்டும்.
13. ஒவ்வொரு கடைக்காரரும் வியாபாரத்திற்கேற்ப 500 ரூபா முதல் 15000 ரூபா வரை மாதாந்தம் செலுத்த வேண்டும்.

இதுதான் கல்குடாத் தொகுதியிலுள்ள முஸ்லிம்களுக்கு எல்.ரி.ரி.யினர்கள் செய்யும் சலுகைகள் இவ்வாறான சூழலுக்குள் வாழும் எந்தவொரு முஸ்லிமும் அமைதியுற முடியாது. நிம்மதியாகத் தூங்கவோ, வாழவோ இயலாது. எனவே அது அவனுள், தினமும் அணையாது நெருப்பு அக்கினியைக் கக்கத் தயாராகிக் கொண்டிருக்கும். ●

கல்குடா இப்னு உமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் சரிவுகளையே சந்தித்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் அரசியலில், சமீபகாலமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்களை ஒரு அரசியல் மாணவன் சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு ஒய்யாரமாய் வேடிக்கை பார்க்க முடியாது. பாராளுமன்ற அரசியலை ஏன் குப்பைத் தொட்டிக்குள் வீச வேண்டும்? என்று அவன் உரத்துச் சொல்வதற்கான எல்லா நியாயங்களையும், நமது அரசியல் பிதாமகர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

மக்களது அபிலாஷைகளிலிருந்து மக்கள் சார்பு அரசியல் தோற்றம் பெற வேண்டும் என்பது அரசியலில் பாலபாடம். ஆனால் நமது அரசியல் பிதாமகர்கள், தங்களது சொந்த நலன்களைக் கூட்டிக் கழித்து கணக்குப் பார்த்துவிட்டு, தாம் எடுக்கும் நிலைப்பாடுகளை மக்கள் ஏற்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். வரலாற்றை எப்போதும் பின்னோக்கி இழுப்பதே இவர்களுக்கு வேலையாகிவிட்டது. அவர்களுக்கு வேண்டுமாயின் அது பொழுதுபோக்காக இருக்கலாம். ஆனால் மக்களுக்கு அதுவே உயிர்மூச்சு.

பாண்டிச்சேரி போன்ற ஒரு நிலத்தொடர்பற்ற அதிகார அலகு முஸ்லிம்களது அபிலாஷைகளைத் தீர்க்கும் என்கிறார் ஹக்கீம். நிலத்தொடர்பு, தொடர்பின்மை போன்ற புளித்துப்போன பழைய வாதங்களை உயிர்ப்பித்து, எதிராளிகளுக்குத் தீனி போடுவதைத் தவிர, அது வேறொன்றையும் தரப்போவதில்லை. அதிகாரத்தை சமூகங்களுக்கு - அரசியல் அர்த்தத்தில் சொன்னால் தேசங்களுக்கு பகிரவேண்டும் என்ற யதார்த்தம் நமது அரசியலில் அடிக்கடி மறக்கப்படுகிறது. இது அறியாமையா அல்லது வசதியாக மறக்கும் தந்திரமா?

ஐ.தே.கட்சியின் செல்லப் பிள்ளையாகவிருந்து, முஸ்லிம்களது அபிலாஷைகளை திருப்திப்படுத்தாது பூசிமெழுகுவதே ஹக்கீமின் வேலையாகிப் போயிற்று. மறந்தும்கூட பிரதமரையோ, ஐ.தே.கா.வையோ பாதிக்கும் எந்தவொரு நிலைப்பாட்டையும் அவர் எடுக்க மாட்டார் என்பது நாம் நன்கறிந்த விடயம்.

மறுபுறம் கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கையில் அதாவுல்லா இருக்கிறார். இவரும் நிலம் பற்றிய மாயையிலிருந்து இன்னமும் மீண்டு வரவில்லை. தற்போது கிழக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருப்பதைத் தமக்குச் சாதகமாக அவர் கருதுகிறார் போலும். சிங்களவர்களோடு இணைந்து கிழக்கில் தமிழ் மேலாதிக்கத்தைத் தோற்கடிக்கலாம் என்பது வெறும் பகற்கனவு. சிங்களப் பேரினவாத அரசியல் முஸ்லிம்களுக்கு இழைத்த துரோகங்களையெல்லாம் இவர்கள் எவ்வளவு வசதியாக மறந்துவிட்டாலும், வரலாறு அதை மீள மீள மெய்ப்பித்துக் கொண்டேயிருக்கிறது. தனது நிலைப்பாட்டை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, ஐ.தே.க. அரசுக்கு முண்டுகொடுக்கும் கோழைத்தனமான அரசியல் நிலைப்பாட்டை அதாவுல்லா எடுப்பதன் நோக்கந்தான் என்ன? ஒருபுறம் ஹக்கீமையும் சமாதான நகர்வுகளையும் அவர் விமர்சிக்கிறார். மறுபுறம் ஐ.தே.கா.வின் அதிகார அரசியலில் குளிர்காய்கிறார்.

கிழக்கை இணைப்பதா - பிரிப்பதா என்பதில் மயக்கமான நிலைப்பாட்டை மாறிமாறி எடுத்துவருகிறார் பேரியல் அஷ்ரப். அதாவுல்லாவுக்கும், பேரியலுக்கும் சிங்கள வாக்குகளைக் கவர்வதற்கு கிழக்குப் பிரிப்பு ஒரு வாய்ப்பான கவசமாகத் தெரியலாம். ஆனால் அது நடைமுறையில் கிழக்கு முஸ்லிம்களுக்கு எவ்வாறான விளைவுகளைத் தரும் என்பதைப் பற்றிய கவலை அவர்களுக்கில்லை. வாக்குகளைக் குறிவைப்பதை விடவும், முஸ்லிம் மக்களது




அரசியல் அபிலாஷைகளை இலக்காக வைத்துச் செயற்படுவதே மிக முக்கியமானது. மோசனமான சந்தர்ப்பவாத அரசியல் பொறிக்குள் மக்களை மிக விரைவாக வீழ்த்துவதிலேயே இவர்கள் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றனர்.

கிழக்கு வடக்கில் முஸ்லிம்களுக்கு மேலதிக நிருவாக சபை ஒன்று தேவையென்று ஷேகு இஸ்ஸதீன் இப்போது பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டிருக்கிறார். முஸ்லிம்களது அரசியல் அபிலாஷைகளை வெறும் மாகாண சபைகளை ஒத்த கட்டமைப்புகள் மூலம் திருப்திப்படுத்த முடியுமென்று நினைப்பதை விடவும் அரசியல் அப்பாவித்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.

புலிகள் இடைக்கால தனியாட்சி அலகு பற்றிய முன்மொழிவை வெளியிட்டதொரு தருணத்தில், இம்முஸ்லிம் அரசியல் பிதாமகர்கள் இவ்வளவு பொறுப்புணர்ச்சியற்று தமது நிலைப்பாடுகளை முன்வைத்துவருவது மிகுந்த ஏமாற்றத்தைத் தருகின்றது. முஸ்லிம் மக்கள் திரண்டு ஒலுவில் பிரகடனத்தில் முஸ்லிம்களது சுயாட்சி பற்றி உரத்து சொல்லிய பின்னும் இவர்கள் இவ்வளவு இவ்வாறான நிலைப்பாடுகளை எடுப்பதை என்னவென்று சொல்வது? ஒரு இடைக்கால ஏற்பாடுகூட, இறுதித் தீர்வு மையத்தையும், சாரத்தையும், அரசியல் அர்த்தத்தையும் இழந்துவிடக் கூடாது என்பதில் விடுதலைப் புலிகள் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவுமிருக்கின்றனர். ஆனால் நம் அரசியல் பிதாமகர்களுக்கு நிரந்தரத் தீர்வின் அடியான நிலைப்பாடுகள் பற்றி அக்கறை எந்தளவுக்கு இருக்கிறது? நிலைப்பாடற்ற அரசியல் இவ்வாறான குழப்ப நிலையையும், பின்னடைவையும், தாம் என்ன சொல்கிறோம் என்பது பற்றிய தெளிவீனத்தையுமே அறுவடை செய்யும்.

தற்காலிக 'டொனிக்கு'களைக் கொடுத்து மக்களை ஆறுதல்படுத்தலாம் என்று நினைக்கும் நிலைப்பாடற்ற அரசியல் வறுமையை நாம் தோற்கடிக்க வேண்டும். அப்பாவித்தனம் அரசியலுக்கு ஆகாது. துரோகத்தனம் மன்னிக்க முடியாதது. மூடிய அறைகளின் தடித்த சுவர்களுக்குள் இருந்து அரசியல் நடத்தலாம் என்று இன்னமும் கனவு காண்பதை எப்படி ஒத்துக் கொள்வது?

மக்கள் தளத்தில் உருப்பெற்று, கீழிருந்து மேல் நோக்கி நகர வேண்டிய அரசியலை, மேலிருந்து கீழ் நோக்கித் திணிக்கலாம் என இவர்கள் பகற்கனவு காண்கிறார்கள். வரலாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் அவ்வக்கால ஜாம்பவான்கள் - வரலாற்றுத் துரோகங்களை இழைத்திருப்பார்களாயின், மிக எளிதாக அவர்களை குப்பைத் தொட்டிக்குள் தூக்கியெறிந்து வந்திருக்கும் யதார்த்தத்தை யார் மறுதலிக்க முடியும்?

உள்நாட்டு விவகாரத்தில்தான் இவர்களுக்கு நிலைப்பாடற்ற குழப்பமும் மயக்கமும் என்றால், சர்வதேச அரசியலில் முஸ்லிம்களின் பலமான எதிரியான அமெரிக்காவுக்குச் சாமரம் வீசும் அரசியல் சந்தர்ப்பவாதத்தின் அசிங்கமான முகத்தை ஹக்கீம் பாராளுமன்றத்தில் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருப்பது இரட்டை அவமானத்தையும் தலைகுனிவையும் தருகிறது. ரணிலைக் காப்பாற்றுவதா அல்லது தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களைக் காப்பாற்றுவதா என்றால் - அவருக்கு முதலாவது தெரிவுதான் வசதியானது. இலாபகரமானதும்கூட...

முஸ்லிம் அரசியலை நுணுக்கமாக நோக்கும்போது, மக்கள் நலனில் நின்றுகொண்டு ஒருமித்த ஒருநிலைப்பாட்டுக்கு யாருமே வரமாட்டர்கள் என்றே ஊகிக்க முடிகிறது. எமது அரசியலின் முன்னோக்கிய நகர்வை இவர்கள் வேண்டுமென்று பின்னோக்கி இழுக்கிறார்கள். மீண்டும் பூச்சியத்திலிருந்து தொடங்க வேண்டிய பின்னடைவு நிலைக்கு நம்மைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள்.

ஆயினும், மக்கள் தான் எப்போதும் வரலாற்றைப் படைப்பவர்கள். ஆதலால் நமது மக்களே நமது அரசியலைக் கையேற்க வேண்டும். நமக்கு எதுவேண்டுமென்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். பாராளுமன்ற அரசியலின் அரைச்சொகுசு இன்ப மயக்கத்தினை, நமது விடுதலையின் பெருங்கனவு உடைத்துச் சிதறடிக்க வேண்டும்.

நாமெல்லோரும் கைவிடப்பட்ட நிலையை வந்தடைந்திருக்கிறோம். பலமான சிவில் சமூக வலைப்பின்னலூடான நகர்வே நமது உடனடித் தேவையாகும்.

**சிராஜ் மஷ்ஹூர்**

## உலகின் பெரிய ஆயுத வியாபாரி அமெரிக்கா பெரிய கொள்வனவாளர் சவூதி அரேபியா.

உலகின் அதிகளவான ஆயுதங்களை விற்பனை செய்யும் நாடு அமெரிக்காவாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுள் ஆயுதங்களை கொள்வனவு செய்யும் நாடு சவூதி அரேபியாவாகும்.

சர்வதேச ஐரோப்பிய ஆய்வு மையத்தின் புதிய அறிக்கையில் இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆயுத விற்பனையில் 40.3 சதவீதத்தை அமெரிக்கா உரித்தாக்கிக் கொண்டுள்ளது. 2002ஆம் ஆண்டு மட்டும் ஆயுத விற்பனை மூலம் 10241 கோடி டொலர்களை அது ஈட்டியுள்ளது. அதே ஆண்டில் 520 கோடி டாலருக்கு சவூதி அரேபியா ஆயுதங்களை அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது.

ஆயுத விற்பனையில் 02ஆம் இடத்தை பிரித்தானியாவும், 03ஆம் இடத்தை ரஷியாவும், 4ம் இடத்தை பிரான்ஸும், 5ஆம் இடத்தை சீனாவும், 6ஆம் இடத்தை உக்ரேனும், 07ஆம் இடத்தை இஸ்ரேலும், 08ஆம் இடத்தை பிரேஸிலும் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்த அரசாங்கம் 56 நிறுவனங்களை இழுத்து மூடிவிட்டு 32000 ஊழியர்களை வெளியேற்றியுள்ளது.

இந்த அரசாங்கம் ஆட்சியமைத்ததன் பின் எவ்வித தொழிற்சங்க போராட்டங்களுமின்றி 56 தனியார் நிறுவனங்களை இழுத்து மூடிவிட்டு 32000 ஊழியர்களின் வேலையை இரத்துச் செய்துள்ளது. அரச நிறுவனங்களில் இருந்து கூட அநேகமானோர் விலக்கப் பட்டுள்ளதுடன், இன்னும் அநேகமானோரின் தொழில் வாய்ப்புக்களை காவு கொள்ளப் பார்க்கிறது.

இழுத்து மூடப்பட்ட தனியார் நிறுவனங்களின் 56வது நிறுவனம்தான் காபூல் லங்கா அதன் 4000 ஊழியர்களின் நிலை அந்தரத்தில் உள்ளது.

எவ்வித நஷ்டஈட்டுத் தொகையும் வழங்காமல் மகாவலியில் தொழில் புரியும் 800 பாதுகாப்பு ஊழியர்கள் ஜனவரியில் வேலை நீக்கம் செய்யப்படவுள்ளனர்.

இதே வேளை வேலையற்ற பட்டதாரிகளின் தொகை 35000 ஆகும்.

இந்த அரசாங்கத்தில் 1000 பேருக்காவது தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுக்க தொழில் அமைச்சரினால் முடியவில்லை. பொறியியல் நிறுவனங்கள் அசைந்து கொண்டிருக்கின்றன. உள்நாட்டு வர்த்தகமும் சிதைந்து போயுள்ளது. உள்நாட்டு புத்திஜீவிகள் தங்கள் துறையின் தேய்வையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி அழுது வடிகின்றனர்.

அரசாங்கத்தின் முக்கிய நிறுவனங்களான இறைவரி திணைக்களம், சுங்கத் திணைக்களம் ஆகியவற்றுள் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

கணக்கெடுப்பின் படி தற்போதைய வேலையற்றோர் தொகை 46 ஆயிரமாகும். இது தவறான கணக்கெடுப்பாகும். உண்மை நிலை என்னவென்றால் இந்நாட்டில் வேலையற்றோர் தொகை பட்டதாரிகள் அடங்கலாக 20 இலட்சமாகும்.

கிண்ணியா விவகாரம்

## அமைச்சர்களான ஹக்கீம், ரவி கருணாநாயக்காவுக்கிடையில் மோதல்!

கிண்ணியாவிலிருந்து தொடர்ச்சியான கொலைகள் தொடர்பாக வெளிவந்துள்ள தகவல்கள் பற்றி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பொறுப்பான கருத்துக்களை வெளியிடவில்லையென்று அமைச்சர் ரவி கருணாநாயக்கா குற்றம் சுமத்தியுள்ள அதே சமயம், இக்குற்றச் சாட்டுகள் பற்றித் தான் அலட்டிக் கொள்ளவில்லையென்று அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.



தனது சுமார் ஒரு வாரகால இந்திய விஜயத்தின் பின் நாடு திரும்பிய அமைச்சர் ஹக்கீம், தன்னைப் பற்றி அமைச்சர் ரவி கருணாநாயக்கா அமைச்சரவையில் கூறிய விடயங்களையிட்டுத் தான் அலட்டிக் கொள்ளவில்லையென்றும், தான் ஓர் அமைச்சர் என்ற போதிலும், தான் குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் தலைவரென்றும் ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பாக அமைச்சர் ஹக்கீம், 'கூட்டுப் பொறுப்பு'டன் செயற்படுவதில்லையென அமைச்சர் ரவி கருணாநாயக்க கடந்த வாரம் அமைச்சரவையில் குறிப்பிட்டார். கிண்ணியாவில் பாதுகாப்பு நிலை தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட போதே அமைச்சர் ரவி கருணாநாயக்க இக்கருத்துக்களை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஹக்கீம், தான் பிரதமரையோ, அரசாங்கத்தையோ விமர்சிக்கவில்லையென்றும், கிண்ணியாவில் முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவதன் பின்னணியில் 'மூன்றாந் தரப்பினர்' செயற்படுவதாகக் கூறியவர்களின் அறிவீனத்தையே கேள்விக்குள்ளாக்கியதாகவும், அது வெறும் கற்பனையென்றும் குறிப்பிட்டார்.

'எனது கருத்துப்படி மூன்றாம் தரப்பினர் செயற்படுவதாகக் கூறியமை வெறும் கற்பனையே. அத்தகைய அறிக்கைகளில் நான் நம்பிக்கை கொள்வதில்லை. படைகளில் உயர்பதவிகளில் உள்ளோர் அத்தகைய கற்பனையான அறிக்கைகளை வெளியிடுகையில் அவற்றைக் கண்டிப்பது எனது கடமையாகும்' என அவர் மேலும் குறிப்பிட்டார். இவ்வாரத் தொடக்கத்தில் ஹக்கீம் கிண்ணியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு மறுக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தினம்: டிசம்பர் 10

டிசம்பர் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினமாகும். ஆனால் என்ன நோக்கத்திற்காக இத்தினம் உருவாக்கப்பட்டதோ அது உலகளாவிய முஸ்லிம்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்ற அதே வேளை குறிப்பாக நமது நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களுக்கு மறுக்கப்பட்டுள்ளமை பகிரங்கமானது.

"எல்லா வகையான இனஞ்சார் பார பட்சங்களையும் நீக்கிவிடவேண்டும்"

என்றே மனித உரிமைகளுக்கான சர்வதேசச் சமவாயப் பட்டயம் கூறுகின்றது. எல்லா மனிதரும் சுதந்திரமாகவும், மதிப்பிலும், உரிமைகளிலும், சமமாகவும் பிறந்துள்ளனரென்றும், இனம், நிறம், அல்லது நாட்டினத் தோற்றுவாய் என்பன பற்றிய வேறுபாடின்றி, மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவர்கள் என்று மனித உரிமைகள் பிரகடனம் கூறுகின்றது.

அப்பிரகடனத்தில் மேலும், 'இனக்கொலை என்ற குற்றத்தை தடுத்து, குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்" என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 'சிறுபான்மையோரின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

-ஹூஸைன் பின் ஹமீட்-

ஆனால் முஸ்லிம்கள் விடயத்தில் தமிழ்ப் புலிகள் இயக்கத்தினர் மட்டுமன்றி, ஆயுதம் தரித்த அனைத்து ஆதிக்க சக்திகளும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை அப்பட்டமாக மீறும் வகையில் நடந்து கொண்டுள்ளனர், நடந்து கொண்டிருக்கின்றனர்.

முஸ்லிம்கள் தாம் பூர்வீகமாக வாழ்ந்த வடபகுதியிலிருந்து முற்றாக வெளியேற்றப்பட்டு இப்பொழுது 13 ஆண்டுகள் கடந்துள்ளன. இதேபோன்று கிழக்கின் விவசாய வளமுள்ள பகுதிகளிலிருந்தும், புறநகர்ப் பகுதிகளிலிருந்தும் 1985ஆம் ஆண்டிலிருந்தே தமிழ்ப்புலிகளாலும், ஆயுதம் தரித்த தமிழ்த் தரப்பினர்களாலும் வெளியேற்றப்பட்டும், தாமாகவே வெளியேறிச் செல்லக்கூடிய வகையிலான நெருக்கடிகளையும் கொடுத்துக்கொண்டே வருகின்றனர்.

கிழக்கில் விவசாயம், மீன்பிடி, வியாபாரம் போன்ற பல்வேறு தொழிற்துறைகளுடன் பூர்வீகமாக வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் தமிழர் போராட்டம் தொடங்கியதிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் கட்டம் கட்டமாக எல்ரீரீஈ இனரால் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு தமிழர் உரிமைப் போராட்டம் எனக் கூறப்பட்ட மாற்று இனச் சுத்திகரிப்புப் போராட்டத்தின் காரணமாக கிழக்கு முஸ்லிம்கள் கடந்த 18 ஆண்டுகளுக்கு மேலாகவும் வடபகுதி முஸ்லிம்கள் 13 வருடகாலமாகவும் நாடு பூராக சிதறிப் போயுள்ளார்கள். அன்றிலிருந்து இன்றுவரை மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் எல்லாம் மீறப்பட்ட நிலையில் இவர்கள் வாழ்கின்றார்கள்.

இன்னும் தமிழ்ப் புலிகளின் ஆளுகையின் கீழுள்ள பகுதியிலுள்ள முஸ்லிம்களின் விவசாயக் காணிகள், குடிநிலக்காணிகள், கால்நடைகள், மற்றுமுள்ள முஸ்லிம்களின் அனைத்து சொத்துக்களும் தமிழ்ப் புலிகளால் அபகரிக்கப்பட்ட நிலையிலுள்ளன.



வாழும் உரிமை, தொழிற் செய்து பிழைப்பு நடத்தும் உரிமை, பொருளாதார உரிமை, கல்வி உரிமைகளும் மறுக்கப்பட்ட, பறிக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஒரு சமூகம் வாழ்வதென்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒரு பயங்கர அராஜகமாகும்.

சுய நிர்ணயம், சுய உரிமை கோரிப்போராடி வரும் தமிழ்ப் புலிகள் அதே மொழியைப் பேசி ஒரே நிலத் தொடர்புகளால் இணைந்து வாழ்ந்து வரும் தமது சகோதர சிறுபான்மை இனத்தின் சகல உரிமைகளையும் துவம்சம் செய்து விட்டு வேடிக்கை பார்ப்பதோடு முஸ்லிம்களின் உரிமைகளுக்காகவும் நாமே குரல் கொடுக்கப் போதுமானவர்கள் எனவும் தமாஷ் விடுகின்றனர்.

இதேவேளை மனித உரிமைகளுக்காகப் போராடி வருவதாகக் கூறிக்கொள்ளும் 'பினாமி" மனித உரிமை அமைப்புக்களும் புலிகளின் கொடுஞ்செயலுக்கு முன்னால மண்டியிட்டு விட்டார்கள் போல்தான் நிலைமை காணப்படுகின்றது.

திருமலை, கிண்ணியா, மூதூர், தோப்பூர், முள்ளிப்பொத்தானை, வாழைச்சேனை, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில், மன்னார் என முஸ்லிம்கள் மீதான இன அழிப்புகளும், பொருளாதார அழிப்புகளும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. அதுமட்டுமன்றி முஸ்லிம்கள் மீது அச்சுறுத்தல், இம்சைகள், கடத்தல், கப்பம், பறிப்பு, படுகொலைகள் என்பன இன்னமும் எல்ரீரீஈ இனரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

சமாதானப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் முஸ்லிம்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். பலகோடி ரூபாய் பெறுமதியான முஸ்லிம்களின் பொருளாதாரம் திட்டமிட்டு அழிக்கப்பட்டிருக்கின்றது. பலர் கடத்தப்பட்டுக் காணாமல் போயுள்ளார்கள். பல கோடி ரூபாய் பணம் முஸ்லிம்களிடமிருந்து கப்பமாகப் பெறப்பட்டிருக்கின்றது. இப்பொழுதும் இந்நிலை ஒரு தொடர் கதையாகவே இருந்து வருகின்றன.

நிலைமை இவ்வாறிருக்கும்போது புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் 'தமிழ் முஸ்லிம் உறவு வலுப்பெற்றிருப்பதாக" புலிகளின் கிழக்குத் தளபதி கருணா அம்மான் கூறியிருப்பது சர்வதேச சமூகத்தை ஏமாற்றி முஸ்லிம்களை அடக்கியாளும் ஒருவித அராஜக தந்திரோபாயமாகும்.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கையொப்பமிட்டுள்ள இலங்கை அரசும் அரசின் பங்காளிக் கட்சியாகவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றி பொறுப்புக் கூற வேண்டியவர்களாக உள்ளார்கள். அதேநேரம் 1965ஆம் ஆண்டின் டிசம்பர் 21ஆம் தேதிய பொதுச்சபைத் தீர்மானத்தின் உறுப்புரைகளில் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலை அரசாங்கம் கொண்டிருக்கின்றது.

## வெளிச்ச வாசல்

அபூ அஹ்ஸன் ஆங்கிலத்தில் : இஸ்லாம் ஒன் லைன்

கடந்த வாரத் தொடர்...

கேள்வி - உங்களது மகனின் இழப்புக்காக எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பயங்கரவாதத்தின் மீதான போரானது நியாயமற்றது என்று எப்போது அமெரிக்கர்கள் உணரப் போகிறார்கள்? தற்கொலைக் குண்டுதாரிகளால் கொல்லப்படுகிறார்களென்றால் அதற்குக் காரணம் தங்களது வாழ்வின் மீதான நம்பிக்கை இழப்புத்தான் என்பதை உணரக் கூடாதா? ஏன் உங்களது மக்கள் எங்களையும் நிம்மதியாக, அமைதியாக வாழவிட்டு அவர்களும் அப்படி வாழக் கூடாது? நாங்கள் எல்லோரும் அமைதியாக வாழ்வதற்கு உரிமை இருக்கிறது அல்லவா? ஆப்கானிஸ்தானையும் ஈராக்கையும் கண்திறந்து பாருங்கள். உங்களது மக்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள். எங்களை எங்களது பாட்டில் வாழ விடுங்கள்.

பதில் - உங்களது வார்த்தைகளுக்கு அர்த்தம் இருக்கிறது. அதில் நியாயம் இருக்கிறது. ஒரு சிறிய திருத்தம்: எங்களில் அநேகமானோர் இயல்பாகவும் அமைதியாகவும் - வெறுப்புகளிருந்தும் பயங்களிலிருந்தும் விடுதலை பெற்றும் வாழவே விரும்புகிறோம். துரதிர்ஷ்டவசமாக இந்த ஜனாதிபதியும் சில முன்னாள் தலைவர்களும் நாங்கள் ஒரு தேசம் என்பதைப் பற்றிக் கவலைப்படாது இதில் தலையிட்டார்கள். அவர்களே உலகம் முழுவதும் மரணத்தின் அலைகளைப் பரவ விட்டார்கள். முஸ்லிம் தேசங்களும் மற்றையோரும், அமெரிக்க தேசம் அவர்களது எதிரியல்ல என்பதையும் அமைதிக்காகப் போராடும் அநேக நண்பர்கள் இங்கு இருக்கிறார்கள் என்பதையும் தெரிந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

கேள்வி - உங்களுக்குத் தெரியும்... இந்தப் போர் சரியானது என்றும் சட்டபூர்வமானது என்றும் நடக்க வேண்டிய ஒன்று என்றும் அங்கு சிலர் கருதுகிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு நீங்கள் விடுக்கும் செய்தி என்ன?

பதில் - அவர்களுக்கு நான் சொல்வது இதுதான். இந்த யுத்தத்தை நடத்துவதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்பதைத் தயவு செய்து கண் திறந்த பாருங்கள். சில தனிப்பட்டவர்களின் விருப்பங்களை விட மனித உயிர்கள் பெறுமதி மிக்கவை. தனது சொந்த மக்களை சதாம் ஹுஸைன் துன்பப் படுத்தினார் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்காக ஏற்கனவே நொந்து நலிந்திருக்கும் மக்களை வருத்துவதும் நசுக்குவதும் எந்த விதத்தில் நியாயமாகும்? இந்த வேளையில் எந்தவொரு நாட்டின் தலையீடும் இல்லாமல் ஐக்கிய நாடுகள், ஈராக்கின் பொருளாதாரத்தையும் ஈராக்கையும் கட்டியெழுப்ப முன் வர வேண்டும்.

கேள்வி - இந்த யுத்தம் நிகழ வேண்டிய ஒன்று என்று நீங்கள் கருதுகிறீர்களா? 'ஈராக்கில் அமெரிக்க எதிர்ப்பு உள்ளது' என்றும் 'அவர்கள் சதாமின் ஆதரவாளர்கள்' என்றும் நீங்கள் (அமெரிக்கர்கள்) ஏன் நினைக்கிறீர்கள்?

பதில் - இல்லை. இந்த யுத்தம் ஒரு போதும் நடந்திருக்கக் கூடாது. ஈராக் சதாமுக்கு ஆதரவானது என்று அமெரிக்க நிர்வாகம் கருதுவது உண்மை. ஆனால் அது பொய் சொல்கிறது. ஈராக்கில் உள்ள எதிர்ப்பானது ஈராக்கின் சுதந்திரத்தை வேண்டி மேற் கொள்ளப்படும் ஒரு நடவடிக்கை என்பதே எனது பார்வையாகும். சதாம் வீழ்ந்த பிறகு ஈராக்கியர்கள் அநேகர் (எல்லோரும் அல்லர்) எமது துருப்பினருக்கு ஆதரவு தெரிவித்தனர் என்பதை அங்கு தொடர்பு கொண்டு தெரிந்து கொண்டேன். ஆனால் அமெரிக்கப் படையின் நீண்ட இருப்பு அவர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்திற்று. தேசத்தைப் புனரமைக்காத துருப்பினர் இருக்கும் வரை எதிர்ப்புணர்வு தொடர்ந்து நிலவும்.

கேள்வி - பெருந்தொகையான அமெரிக்கர்கள் இன்று வரை ஈராக் மீதான ஆக்கிரமிப்பை ஆதரிப்போராகவே தெரிகிறது. ஈராக் மீது தாக்குதல் மேற்கொண்ட உண்மையான அமெரிக்க நோக்கம் பற்றி புரிந்து கொள்ளாத மக்கள் அமெரிக்காவைக் குருட்டுத்தனமாக நம்புகிறார்கள் என்பதற்கு, முஸ்லிம்களின் கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிப்பதற்காக உங்களைக் குற்றம் சுமத்திய படை வீரரே நல்ல உதாரணமாகும். இந்த நிலையில் புஷ்ஷின் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போதுமான பெருந்தொகையான அமைதியை விரும்பும் மக்கள் அங்கு இருக்கிறார்களா? உங்களுக்கு அதில் நம்பிக்கை உள்ளதா?

பதில் - ஆம். போருக்கு எதிராகக் கிளர்ந்த மக்கள் தொகையைப் பார்த்தீர்களானால் நீங்கள் நம்புவீர்கள். மே மாதம் ஜனாதிபதியின் போருக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் 65 வீதமானோர். இன்றைய நிலையில் (ஆகஸ்ட்) அந்த வீதம் 43 ஆக வீழ்ச்சியடைந்திருக்கிறது. நாம் இன்னும் அழுத்தத்தை ஏற்படுத்தினோமானால் அதில் இன்னும் வீழ்ச்சியை ஏற்படுத்தலாம். அதிர்ஷ்டவசமாக ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே புனரமைப்பில் அழுத்தத்தைப் பிரயோகித்து வருகிறது. உங்களது பிரான்ஸ் தேசம் போன்ற சில நாடுகள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கவில்லை என்பது மகிழ்ச்சிக்குரியது. உங்களுக்கு நன்றி.

முற்றும்

## எமது கிராமம்

கேகாலை மாவட்டம் ருவான் வெலைத் தொகுதியில், அவிசாவெலைக்கு அருகாமையில் முன்னோர்களால் 'சின்னமக்கம்" என அழைக்கப்பட்ட நாபாவெளை எனும் முஸ்லிம் கிராமம் வியாபாரம் செய்வதே முக்கிய தொழிலாகக் கொண்ட மக்களில் 80 வீதம் வசதி குறைந்தவர்களே உள்ளனர்.

இங்கு அல்-பௌஸியாஹ் அரபுக்கலாசாலையை எமது ஊர் அகுரணை அல்-றஹ்மானியா அதிபர் அல்-ஹாஜ் ஏ.சி.எம். ஜிப்ரி ஹஸ்ரத் அவர்களின் வழி காட்டலில் ஜமாஅத்தாரின் ஒத்துழைப்புடன் அரபு நாட்டுக்கொடைவள்ளல் ஒருவரின் உதவியுடன் அமைந்துள்ளது.

மேலும், ஜும்ஆப் பள்ளியும், இரண்டு சிறுபள்ளிகளும் அவ்லியாக்கள் அடங்கப்பட்டுள்ள ஒரு கட்டிடமும் முஸ்லிம் வித்தியாலயமும் அமைந்துள்ளன.

அல்-ஹாஜ் எம்.எல்.எம். சனூன் அவர்களின் பெருமுயற்சியினாலும், ஜமாஅத்தாரின் ஒத்துழைப்போடும் ஆரம்பப்பாடசாலை கட்டப்பட்டுள்ளது. அமைச்சர் கபீர் ஹாஷீம் அவர்கள் உதவி செய்துள்ளார். போக்குவரத்திற்கு மிகவும் வசதி குறைவாக இருந்த பிரதான பாதை இப்போது புனரமைக்கப்பட்டுவருகின்றது.

குழாய்நீர், தொலைபேசி, வசதி இல்லை. பஸ்சேவையும் திருப்திகரமாக நடைபெறுவதில்லை. நோயாளிகள் அவிசாவெலை அரசாங்க ஆஸ்பத்திரிக்கே செல்ல வேண்டும்.

இங்கு மூவின மக்களும் எந்த விதமான பிரச்சினைகளும் இல்லாமல் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். மேலும் முஸ்லிம்கள் இயக்கங்களாகப் பிரிந்து வாழாது குர்ஆனையும், நபிவழியையும் பின்பற்றி வாழ்கின்றனர். கேகாலை மாவட்டத்தில் கூடுதலான மௌலவிமார்கள் இங்கேதான் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர்களும், ஒருசில அரசாங்க உத்தியோகஸ்தர்களும் மாத்திரமே உள்ளனர். முஸ்லிம்களில் ஒரு டாக்டரோ, அட்வகேட்டோ, எஞ்சினியர்களோ முப்படைகளில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களோ இல்லை என்பது கவலை தரக்கூடிய விஷயமாக உள்ளது. இங்கு வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்றுள்ள பெண்கள் மிகக்குறைவாக உள்ளனர்.

கிராம அபிவிருத்தி, நலன்புரிச்சங்கம் போன்றவைகளை அமைத்து மக்களின் முக்கிய தேவைகளை அரசாங்கத்திற்கு கூறி தக்க நடவடிக்கைகள் எடுக்க எமது இளைஞர்கள் முன்வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

அதேநேரம் சமூக, கலாசார, கல்வி மறுமலர்ச்சி, பொருளாதார விடயங்கள் உள்ளடக்கியதாக திருக்குர்ஆன், நபிவழி, ஹதீஸ் அடிப்படையில் எமது கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சித்து வருகின்றோம்.

**அல்-ஹாஜ் எம்.எஸ்.எம். ராஸீக் நாபாவெளை, அவிசாவெலை**


வாசகர் கவனத்திற்கு
முஸ்லிம் குரலின்
1-24 இதழ்கள்
(பைண்டிங் தொகுப்பு)
தேவைப்படுவோர், ரூபா. 400/-க்கான காசுக்கட்டளை/காசோலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை சிறுகதை சிறுகதை

# வலித்துப்போன நெஞ்சு

செல்வி. ஏ. றிஸான்றோஸ், பொத்துவில்



இன்று இருள் சரியாகப் பிரியாத வைகறைப் பொழுது. பொறுப்புடன் சேவையாற்றும் மனிதனைப்போல் சூரியன் எந்த சலனமுமின்றி சிரித்துக் கொண்டே உதிக்கின்றது. வசந்தகாலம் என்பதால் குயிலொன்று கூவ எத்தனிக்கின்றது. காகமோ விட்டு விடவில்லை துரத்திக் கொத்துகிறது. குயில் தனக்கென ஒரு கூடு இல்லையென உணர்ந்ததாய் இன்னுமொரு இடம் தேடி பறக்கிறது. தன் சிந்தனையை எங்கையோ தொலைத்தவள் போல் ஏக்கம் மிக்கவளாய், எதிர்பார்ப்பு கொண்டவளாய் அரைத் தூக்கத்துடன் ஜன்னல் வழியே விழியை மேயவிட்டவளாய், வேதனைப் பசிக்கு தன் நெஞ்சை இரையாக்கி நடந்ததை நினைத்து தனக்குள் வருந்துகிறாள் அஜீபா...

அன்றவள் சரியாகத் தூங்கவில்லை என்பதை அவள் கயல் விழிகள் காட்டிக் கொடுத்தது. சட்டென கதவு திறக்கும் சத்தம் கேட்டு மெல்லத் திரும்பி பார்த்தாள் அஜீபா அவள் தாய் ஆயிஷா ஒரு காலை இழந்தவள். ஊன்று கோலின் உதவியுடன் தெத்தித், தெத்தி அவளை நெருங்கினாள்.

'ஏம்மா அஜீ! நீராவு செரியாத் தூங்கலியா?" இல்லையென்று மௌனமாய் தலையசைத்தாள் அஜீபா. 'நடந்து போன விசியத்தை நெனச்சி நெனச்சி வீணா ஒடம்பக் கெடுத்துக்காதம்மா அல்லா மேல பாரத்தப் போட்டிட்டு இன்னா இந்த காப்பிய குடிம்மா" என்று காப்பிக் கோப்பையை நீட்டினாள் ஆயிஷா. வாங்கிக் கொண்ட அஜீபா தன்னருகில் காப்பிக் கோப்பையை வைத்துவிட்டு விரக்தி கலந்த முகத்துடன் ஆயிஷாவை உற்று நோக்கினாள் 'புள்ள! நான், ஒன்று கேப்பன் சம்மதிப்பியா?"

'என்ன என்று சொல்லுங்கம்மா நான் ஒங்களுக்காகத்தான் உசிரோட வாழ்றன்! நீங்க எதச் சொன்னாலும் செய்வேன்."

'அஜி! நான் ஒனக்கொரு மாப்புள பாத்திருக்கேன். நெல்ல பையன் எந்த வரதட்சணையும் வேண்டாம். ஏழப் பெண்ணத்தான் கலியாணம் முடிச்சா முடிப்பனென்று ஒத்தக் கால்ல நிக்கானாம். அதனால இந்த வரனுக்கு நீ எனக்காக சம்மதம் சொல்லத்தான் வேணும்" என்று ஒன்றும் விடாமல் கூறி முடித்தாள் அஜிபாவின்தாய் ஆயிஷா.

'ஏனும்மா இன்னும் இன்னும் என்ன வேதனைப்படுத்த நினைக்கிறயல்? நாலு வரன், வரதட்சணை கேட்டு என் நாடித்துடிப்பையே செயலிழத்திட்டு. இந்த வரனுக்கு என் சுவாசத் துடிப்பையா கேக்குறயள்? சொல்லுங்கோ செய்றன். ஒங்களுக்கு தெரியாதா? பணமில்லாதவள் பட்டுப்போன மரம் என்டு நெனைக்கிற இந்த மனிசங்க மத்தியிலே ஏழைங்க எப்படிம்மா வாழ்றது?" என்று தன் ஆதங்கங்களையெல்லாம் கொட்டித் தீர்த்தாள் அஜீபா.

'நான், ஒன்ன விட்டுப்போட்டு மௌத்தா போய்ட்டா ஒனக்கு யாருபுள்ள தொணையாக இருக்கா? நான் சந்தோசமா இருக்கனும் என்டு நீ நெனச்சா இதற்கு சம்மதிக்கத்தான் வேணும்" என்றாள் ஆயிஷா. எனவே தாயின் பல்வேறுபட்ட நச்சரிப்புக்களின் மத்தியில் ஐந்தாவது வரனுக்கும் சம்மதித்தாள் அஜீபா.

அவளுடைய குழப்பமான மனம் உம்மாவை தொடர்ந்து கொண்டு அடுக்களைக்குச் சென்றது. நேரமும் யாருக்கும் காத்திருக்கவில்லை. காலை பத்துமணியிருக்கும். வரவேற்பறையில் பெண் பார்க்க வந்தவர்களின் பேச்சுக் குரல் ஒலித்தது. யாரோ ஒருவர் 'பெண்ணை கூட்டி வாங்கோ" என்று சொல்லி முடித்தார்.

சீரிய, மணப்பெண்ணுக்குரிய அலங்காரங்களுடன் வெட்கித்தவளாய் வரவேற்பறையை நோக்கி நடந்தாள் அஜீபா. பெண்ணைப் பார்த்த மாப்பிள்ளை மௌனித்து போனான். 'என்ன, மாப்புள! பொண்ணைப் புடிச்சிருக்கா?" என்றார் ஒரு வயதானவர்.

மாப்பிள்ளை மெதுவாகச் சொன்னான் 'எனக்கு பிடிக்கல!" 'ஏன் பிடிக்கவில்லை என்டு எங்களுக்கு சொன்னா நல்லா இருக்கும்"

'எனக்கு வரப்போற மனையாள் வெள்ளையா, சிவப்பா இருக்கனும் என்னு ஆசப்படுறன்" இதுல ஏதாச்சும் தப்புத் தவறு இருந்தா எல்லோரும் என்ன மன்னிக்கனும்'என்றவனாய் எழுந்து சென்றான்."

ஆடிப்போனாள் அஜீபா. 'கருப்பென்டா எல்லோருக்கும் ஏனிந்த வெறுப்பு? கருப்பென்டால் மனித சாதியில கழிவா?" பல வினாக்கள் அவளுக்குள். மீண்டும் மீண்டும் சோக மேகம் கருக்கட்ட, யாருடைய அனுமதியும் இன்றி கண்ணீர் மழையாய் பெய்து அவள் முகத்தில் ஆறாய் ஓடியது.

குழம்பிப்போன அவளுக்கு எழும்பி நடக்க முடியவில்லை. அந்த ஒரு வார்த்தையால் முடமாகிப்போன தன் தாயின் காலைவிட அவளுள்ளம் ஊனமுற்றுப்போனது. அஜீபா சோகம் தீர அழுது முடித்தாள். அஜீபாவின் தாய் ஆயிஷா உயிரற்ற ஜடமாக மூலையில் முடங்கிக் கிடந்தாள். அஜீபா விஷ போத்தலில் தன் விரல்களை வைத்தவள் அருந்துவதற்கு எத்தனிக்கும்போது முனகல் சத்தம் கேட்கவே 'நான் மட்டும் மௌத்தாப் போனால் உம்மாவை யார் பார்ப்பது? என தனக்குள் எண்ணிக் கொண்டவளாய் கனத்துப்போன மனதுடன் தன்னை கருவறையில் சுமந்தவளை நெருங்குகிறாள்.

அப்போது.

'காத்திருந்து காத்திருந்து
காலங்கள் போனதடி!
பூத்திருந்து பூத்திருந்து
பூவிழி நோகுதடி!"

தள்ளி ஒலிக்கும் பாடல்வரி அவள் சோகத்திற்கு சொட்டு நீராய் இருக்கின்றது.

*(யாவும் கற்பனையில்லை)*

# கொலைக்கான சதி பற்றிய செய்தியை இளவரசியின் கடிதங்கள் மெய்ப்பிக்கின்றன



இளவரசி டயானா, கார் விபத்தொன்றில் தான் கொலை செய்யப்படுவார் என்பதனை அது நடப்பதற்குப் பத்து மாதங்களுக்கு முன்னரே முன்கூட்டிச் சொன்னதாகப் புதிதாக வெளியிடப்பட்டுள்ள தொடர்பறிக்கைகள் கூறுகின்றன.

சதிமுயற்சிகள் தொடர்பாக இளவரசி பின்வருமாறு எழுதியிருந்தார். 'பொலிஸ் அலுவலராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர் எனக் கருதப்படும் ஒருவர் விபத்தைத் திட்டமிடுவதாக நான் நிச்சயமாக நம்புகிறேன்"

வேப்ல் குமாருக்கு மறுமணம் செய்வதற்கான வழியை உருவாக்கிக் கொடுப்பதற்காக தனது காரின் சுழற்சி வேகத்தைத் தடுக்கும் கருவிகளில் (Braks) நாசகார செயல்களை உண்டாக்க ஒருவர் சதித்திட்டம் தீட்டியமை பற்றி இளவரசி டயானா சந்தேகித்ததாக எழுதியிருக்கிறார்.

இவ்விடயம் இளவரசியின் பணியாள் போர் புர்ரலுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இளவரசி சந்தேகித்த நபரின் பெயர் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. எழுதப்பட்ட கடிதம் பற்றி இதுவரை சந்தேகம் எழுப்பப்படவில்லை.

1997ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பரிஸில் நடைபெற்ற கார் விபத்தில் மரணமுற்ற டயானாவினதும் அல்பயாட்டினதும் மரண விசாரணை நடாத்திய பிரஞ்சு நீதிபதியிடம் ஏன் இக்கடிதம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது தெளிவில்லை.

கடிதத்தில் டயானா மேலும் குறிப்பிடுகையில் நான் அரவணைக்கப்பட வேண்டும் என விரும்புகிறேன். நான் உறுதியாக இருப்பதற்காக எனது சிரசை உயர்ந்த நிலையில் வைத்திருப்பதற்காக ஆர்வமூட்டப்பட வேண்டிய நிலையில் இருக்கிறேன்"

இக்குறிப்பிட்ட காலகட்டம் எனது வாழ்வில் மிகவும் அபாயகரமானது. தனிநபர் ஒருவர் சார்ள்ஸ் மறுமணம் செய்வதற்கான வழியை உருவாக்குவதற்காக என்னை அழிப்பதற்காக திட்டமிடுகிறார்.

இளவரசி பொதுமக்களின் கண்முன் தோன்றி இருக்கும் சந்தேகம் பற்றி இக்கடிதம் எழுதப்பட்டது. இரு மாதங்களுக்கு முன்னர் அவரது விவாகரத்து இடம் பெற்றிருக்கின்றது. இக்கடிதம் அவரது மரணத்திற்கான காரணத்தை வெளியிடாவிடினும் இளவரசியின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. 15 ஆண்டுகளாக தான் அனுபவித்த சொல்லொண்ணாத் துயரங்களை அக்கடிதம் சுட்டிக் காட்டுகிறது.

வேட்ல் குமார் தன்னை ஓர் நரகவாழ்வில் உட்படுத்தியதாக இளவரசி முறையிட்டுள்ளார். என்னை இத்தகைய இடர் நிறைந்த வாழ்வில் உட்படுத்தியமைக்கு நன்றி. சார்ள்ஸ் அவர்களே, இக் கொடுமை வாழ்வு மூலம் நான் பல பாடங்களைக் கற்றுள்ளேன். நான் அதிக தூரம் முன்னேறிச் சென்றுள்ளேன்.

ஓரிடத்தில் இளவரசி மேலும் குறிப்பிடுகையில் இந்தப் பிணக்குகள் மூலம் நான் களைத்துப் போய்விட்டேன். ஆயினும் நான் ஒருபோதும் சரணடையமாட்டேன். நான் உள்ளார்ந்த ரீதியில் உறுதியாக இருக்கிறேன். எனது எதிரிகள் இதனால் பயன் அடைந்திருக்கலாம் என எழுதியுள்ளார்.

இவ்விடயமானது நாம் இதுவரை பகிரங்கமாக வெளியிட்டிருந்த சந்தேகங்களை உறுதிப்படுத்துகின்றது. இவை இதுவரை காலமும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன.

இதே விசேடமான கடிதத் தொடர்புகளை வெளியிடுவதற்குப் பணியாளர் புர்ரலுக்கு ஆறு ஆண்டுகள் சென்றன என்பதனையிட்டு நான் வேதனையடைகிறேன். அவசியம் இன்னும் என்ன இரகசியங்கள் இருக்கின்றனவோ என இதன் மூலம் கேள்விகள் எழுகின்றன என சொல்கிறார் டயானவுடன் மரணித்த டொடி அல் பயாட்டின் தந்தை முஹம்மத் அல்பயட்.


## கிழக்கு மாகாண முஸ்லிம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அங்குரார்ப்பணம்!

கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காகவும், அபிவிருத்திக்காகவும் குரல் கொடுப்பதற்கும், செயற்படுவதற்குமாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து புதிதாக "கொம் நெப்" என்ற பெயரினைக் கொண்ட கிழக்கு மாகாண முஸ்லிம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் 01.12.2003இல் அக்கறைப்பற்றில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

முஸ்லிம் மக்கள் தனியான தேசிய இனம், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. கிழக்கு, வடக்கு முஸ்லிம்களினதும் தாயகம் என்ற யதார்த்தத்தை வென்றெடுப்பதற்காக கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று வெகுஜன அபிப்பிராயத்தையும், சர்வதேச ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதற்காக இவ்வமைப்பு தொடர்ந்து பாடுபடும்.

முஸ்லிம் தேச உருவாக்கத்திலும், அபிவிருத்தியிலும் உண்மையான அக்கறையுள்ள முஸ்லிம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் "கொம் நெப்"பில் இணைந்து பணியாற்ற அழைக்கப்படுகின்றது. விண்ணப்பப்படிவங்களுக்கு பின்வரும் முகவரிகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

இணைப்பாளர்,
கொம் நெப்
68, வம்மியடி,
அம்பாறை வீதி,
அக்கறைப்பற்று

பொதுச் செயலாளர்,
'கொம் நெப்'
40.சரிப் புறக்டர் வீதி,
காத்தான்குடி - 02

Advt



விற்பனையாகிறது

## தினச்சுடர்

மாத இதழ்

ஆசிரியர் : முபாறக் அப்துல் மஜீத்

இம்மாத இதழில்:
காத்தான்குடியில் ஆயுதப்பயிற்சி செய்தி உண்மையானதே!
பாதுகாப்பு அமைச்சர் பதவி நீக்கம் முஸ்லிம்களின் சாபமா?
மு.காவின் நகலுக்கு இரு மாத அவகாசம் - இன்னுமொரு நாடகமா?
வங்கியின் சேமிப்பால் வரும் பணம் ஹறாமானதல்ல.
மற்றும் சிறுவர்களுக்கான பகுதி, கேள்வி பதில்கள் உட்பட சுவையான அம்சங்கள்
தபாலில் பெற ரூ 4-50க்கான 3 முத்திரைகள் அனுப்பவும். பயிற்சி நிருபர்களும், விற்பனை முகவர்களும் தேவை.

THINACHCHUDAR
21, Symond's Road,
Colombo-10,
T.P: 0777-570639

Advt


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாறு

எழுதுவது: லைலா அஷ்ராவி

## சமகாலத்தில் உலமாக்களின் பங்களிப்பு!

அண்மைய இனமோதல் நிகழ்வுகளின் பின்னான சமூக நிலைமைகளுக்கு உலமாக்களின் பங்களிப்பும் கணிசமாக இருந்து வருகிறது. ஆனால், அவர்களின் கட்டுப்பாட்டையும் மீறி நடக்கின்ற செயற்பாடுகள் அவர்கள் மீதும் கடும் விமர்சனங்களை சமூகத்தினர் வைக்குமளவிற்குச் சென்றிருக்கிறது. சிவில் சமூகத்தின் பிரதான அங்கம் வகிக்கும் உலமாக்கள், இக்கட்டான நிலைமைகளில் எவ்வாறான பங்காற்றுவது என்பதில் சிக்கல்களை எதிர்கொண்டு வருகிறார்கள். அதீத எதிர்பார்ப்புக்களை அவர்களின் எல்லைகளையும் மீறி வைத்துக்கொண்டிருப்பதால், சில இடங்களில் பலர் முயன்றிருப்பதை அறிய முடிகிறது. எமது வேறு பல சக்திகள் எம் பாதுகாப்பு விடயத்தில் போதிய அக்கறை காட்டாத நிலையில், இந்தச் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் பங்களிப்பு நியாயபூர்வமாகப் பார்க்கப்பட வேண்டும் என்பது எனது தாழ்வான அபிப்பிராயம்!

## அல் ஜஸீறாவின் இன்றைய நிலை

அரபுலகின் ஒரு மாற்று ஊடகமாக சர்வதேச கவனம் பெற்ற அல்-ஜஸீரா பற்றிய பல்வேறு கட்டுரைகளை, Mean Time என்கின்ற இந்திய (கேரள) சஞ்சிகையில் வாசிக்கக் கிடைத்தது. இவ்வருட மே மாத இதழ் "அல்-ஜஸீரா"வை "கவர் ஸ்டோரி"யாக்கியுள்ளது. அதில் பல்வேறு சுவையான தகவல்கள் இடம்பெற்றுள்ளன. (அவற்றில் சிலதைத் தமிழிலும் தரவேண்டியுள்ளது. இன்ஷா அல்லாஹ்)

ஓரளவுக்குத் தாம் அல்-ஜஸீராவின் செயற்பாடுகள் பற்றி அறிந்திருக்கிறோம். எனினும் அவைகூட பல்வேறு விமர்சனங்களுக்கு, ஏனைய சில அரபு முஸ்லிம் நாடுகளின் தடைவிதிப்புக்கும் ஆளாகியிருக்கிறது. "நீங்கள் தகவல்களை அல்ல உண்மைகளைக் கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் மக்கள் பார்க்க மாட்டார்கள். இந்த அடிப்படையில்தான் நாம் இதனைத் தோற்றுவித்தோம். நாம் எம் பார்வையாளர்களை 'புத்திஜீவி நுகர்வோர்களாகக் கணிக்கிறோமேயொழிய, நீங்கள் கொடுப்பதை அப்படியே ஜீரணிப்பவர்களாக அல்ல" என்று அல்- ஜஸீராவின் நிர்வாகப் பணிப்பாளர் ஜாஸிம் அல்-அலி குறிப்பிடுகிறார்.

அல்-ஜஸீராவின் மீதான பிரதான குற்றச்சாட்டு என்னவெனில் அது தனது நாட்டு நலன் கருதி சில விடயங்களில் பாராமுகமாக இருக்கிறது என்பதுதான். இதற்கு உதாரணமாகச் சொல்லப்படுவது கட்டாரில் இருக்கிற 'அமெரிக்க மத்திய கட்டளைத்தளம்.' இங்கிருந்துதான் தாக்குதல்கள் திட்டமிடப்படுகின்றன. ஜெனரல் டொம்மி பிரான்க்ஸ் இங்கிருந்துதான் கட்டளையிடுகிறார். செய்தியறிக்கைகளை வெளியிடுகிறார். ஆனால் இவற்றை ஜஸீராவின் கமராக்கள் கண்டு கொள்வதில்லை என்று விமர்சிக்கிறார்கள் சிலர்.

இதையும் மீறி ஜஸீராவின் தேவை பரவலாக உணரப்பட்டிருப்பினும் சில அரபு - முஸ்லிம் நாடுகள் இது தொடர்பில் எடுத்திருக்கின்ற நிலைப்பாடு ஆச்சரியத்தையும் கவலையையும் தருகிறது. சவூதி அரேபியா ஹஜ் போன்ற விடயங்களை 'கவர்' பண்ண மாத்திரமே ஜஸீராவை அனுமதித்திருக்கிறது. ஒரு நேர்காணலில் அதிதி ஒருவர் ஜோர்டான் அரசை விமர்சித்தார் என்பதற்காக, அதன் ஜோர்டான் பணியகத்தை மூடச் செய்தது. ஜோர்டான் அரசு, டுனீசியா, மொரோக்கோ, லிபியா போன்ற நாடுகள் ஜஸீராவின் சில செய்தி அறிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டும் முகமாகத் தங்கள் தூதுவர்களை கட்டாரிலிருந்து மீளப்பெற்றிருக்கிறது'

# யார் மீது குற்றம்?

வடபகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் 1990ம் ஆண்டு விடுதலைப்புலிகளால் குறிப்பிட்ட மணித்தியாலங்களில் வெறும் கையுடன். வெளியேற்றப்பட்டது ஏன்? இம்மாவட்ட முஸ்லிம்கள் செய்த குற்றம் என்ன? வடபகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழ் சகோதரர்களோடு பரம்பரை பரம்பரையாக சகோதரர்களாக வாழ்ந்தது குற்றமா? இப்பகுதியில், தமிழ் சகோதரர்களோடு குறிப்பாக, விவசாயம், கடற்றொழில் போன்றவற்றில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவர் உதவியாக தொழில் செய்தது குற்றமா? ஒன்றாக உண்டு பழகியது குற்றமா? கல்விக் கூடங்களில் கலந்து கல்வி கற்றது குற்றமா? இப்பகுதி முஸ்லிம் மக்கள் செய்த குற்றம்தான் என்ன? இதற்கு இன்றைக்கு 13 ஆண்டுகள் நிறைவடைந்தும் எதுவித பதிலும் இல்லை. பதில் அளிக்க யாரால் முடியும்.?

2001ம் ஆண்டு அமைச்சர் றவூப் ஹக்கீமிடம் தமிழீழ விடுதலைப்புலிகள் சொன்ன பதில், "பழமை அனைத்தையும் மறந்து விடுவோம் நாமும் மறப்போம். வடபகுதி முஸ்லிம்களும் மறந்து விடட்டும்" என்பதே.

நாம் எதை மறப்பது. அவற்றிலும் முக்கியமாக முல்லை மாவட்ட முஸ்லிம்களில் ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, தன்னீரூற்று கிராமங்களை தற்போது நேரில் பார்த்தபோது ஹிஜ்ராபுரம் கிராமம் அடர்ந்த காடாக காட்சியளிக்கின்றது. இக்கிராமத்தில் 200க்கு மேற்பட்ட குடும்பங்கள் ஓரளவு நல்ல நிலையில் வாழ்ந்தவர்கள் இவர்களில் கூடுதலானோர் கடல் தொழிலை தமது தொழிலாகக் கொண்டவர்கள். இவர்கள் தங்களது சொந்த தொழிலால் உயர்ந்தவர்கள். 20 வீதமான மக்கள் விவசாயம், வியாபாரம் போன்றவற்றைத் தொழிலாக கொண்டு வாழ்ந்தவர்கள் இக்கிராம மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக சம்பாதித்து ஓரளவு வீடுகளை கட்டி நன்றாக கஷ்டம் இன்றி வாழ்ந்து வந்தவர்கள். தற்போதய நிலையில் இவர்களது வீடுகள் இருந்த இடம் கூடத் தெரியாமல் காட்சி தருகின்றது. இக்கிராமத்து மக்களை மீள் குடியமரச் சொன்னால் எப்படி குடியமர்வது. இதைப்பற்றி யாருக்குத் தெரியும். எமது



பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூடத் தெரியாது.

எண்ணிப்பார்க்க முடியாத நிலை. இக்கிராமமக்களின் உடமைகள் எங்கே? இதற்கு யார் பொறுப்பு இம்மக்கள் மீள் குடியமர்வது எப்படி இதற்கு யார் பதில் சொல்வது?

மறுபுறம் நீராவிப்பட்டி கிராமத்தில் வாழ்ந்த மக்களின் வீடுகள் 50 வீதம் தரை மட்டமாக உள்ளது. இவர்களின் உடமைகளுக்கு என்ன நடந்தது இம் மக்கள் விவசாயம் செய்து முன்னுக்கு வந்தவர்கள் இவர்களின் நஸ்டஈட்டை யார் கொடுப்பது கொஞ்சம் சிந்தித்துப்பார்த்தார்களா? தண்ணீரூற்று கிராமத்து மக்களின் வீடுகள் ஓரளவு (60 வீதம்) உள்ளது. மிகுதியானவை அழிக்கப்பட்டுள்ளன.

மேலும் வடபகுதி முஸ்லிம்களை குறிப்பிட்ட நேரத்திற்குள் வெளியேற்றிய விடுதலைப்புலிகள் இவர்களது உடமைகளுக்கு பாதுகாப்பு வழங்கியிருக்க வேண்டும். இல்லையேல், இவர்களது உடமைகளை எடுத்துச் செல்ல அனுமதி அளித்திருக்க வேண்டும் இரண்டும் அல்லாமல் இவர்களை அநியாயமாக வெளியேற்றி பிச்சை எடுக்கவைத்தது.

அத்துடன் தற்போது குறிப்பிட்ட மூன்று கிராமங்களிலும் ஆங்காங்கே மண்வீடுகள் அமைத்து அயல் கிராமங்களான, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணி, போன்ற கிராமங்களில் வாழ்ந்த தமிழ் சகோதரர்கள், வாழ்விடங்களில் வசித்து வருகின்றனர். இவர்களிடம் நாம் சென்று கேட்டபோது, எமது முஸ்லிம் மக்களை அரசிடம் எமது மந்திரிமார்களிடம் சொல்லி கொக்கிளாய் இராணுவ முகாமை அகற்றிய பின்னர் எமது கிராமத்தை விட்டு தாங்கள் தங்கள் இடத்திற்கு போவதாக சொல்கின்றனர். இவை நடக்கக் கூடிய காரியமா?

எமது மூன்று கிராமங்களும், வீடுகளும் அழிக்கப்பட்டது யாரால்? உடமைகள் சூறையாடப்பட்டது யாரால்? இராணுவத்தினராலயா? விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள எமது கிராமம். எனவே யார் செய்தது இவை அனைத்தையும்? முல்லை மாவட்ட முஸ்லிம்கள் திரும்பவும் மீள்குடியமர்வதாக இருந்தால் இவர்கள் அனைவரது வீடுகளும் கட்டப்படவேண்டும். அல்லது அவர்களது வீடுகளுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும். இவர்களது உடமைகளுக்கும் நஷ்ட ஈடு தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இடத்தில் வைத்தே கொடுக்க வேண்டும்.

அத்தோடு, இம்மூன்று கிராமங்களில் இருந்தும் மூன்று மூன்று பேர் வீதம் பொது சேவைக்காக நியமித்து, இவர்களின் மேற்பார்வையில் சகல விஷயங்களும் நடைபெறவேண்டும். மீள்குடியமர்வும் குறிப்பிட்ட குழுவின் கவனத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். மூன்று கிராமங்களிலும் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் சகோதரர்கள் சந்தோஷமாக தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட வேண்டும். 1990ம் ஆண்டு எப்படி இம் முஸ்லிம் மக்கள் வாழ்ந்தார்களோ அதே நிலைக்கு ஆக்கப்படவேண்டும். இதுவே முல்லை மாவட்ட முஸ்லிம்களின் நிரந்தர ஆசை. இதுவே இம்மக்களுக்கு செய்யும் கைங்கரியம்.

முல்லை மகன்




**முஸ்லிம்குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி, இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை, முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.**

**இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.**

51

முஹம்மதனிபா ஹச்சி முகம்மது. ஹிஸ்புல்லா வீதி, காவத்தமுனை, வாகனேரி பிறந்த திகதி :15.04.1968
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக 11.07.1998இல் விடுதலைப் புலிகளினால் இடது கை சேதமாக்கப்பட்டது.

52



சின்னப்பிள்ளை ஹாஜி முஹம்மதிஸ்மாயில். 245, ஏசி 10 ஒழுங்கை, அக்கரைப்பற்று 06
பிறந்த திகதி : 1926.06.11.
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும்: முதலைக்கல்வட்டை நீத்தை, அக்கரைப்பற்று. 1990.08.07 மரணம் பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப்பத்திர இல: 916

53



அஹமது முகைடீன் செய்யது புஹாரி, கபுறடி வீதி, 4ம் ஒழுங்கை, காத்தான்குடி 01.
பிறந்த ஆண்டு: 1971.
சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : மீரா ஜும்ஆ பள்ளிவாசலில் புலிகளினால் சுடப்பட்டு காலில் காயமானார். 3.8.1990

54



கச்சி முகம்மது முகம்மது சம்சுதீன், மீரா பள்ளிவாயல் காத்தான் குடி 01. பிறந்த திகதி : 1944.01.23
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும்: மீரா ஜும்ஆ பள்ளிவாயலில் புலிகளினால் 03.08.90.ல் நடத்தப்பட்ட தாக்குதலில் மரணமானார்.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5693

55



அசனார் ஆதம் லெவ்வை, 4 12, உடையார் லேன், சாவியா வீதி, காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 1932.02.18 சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : மீரா ஜும்ஆ பள்ளிவாயலில் புலிகளினால் 03.08.90.ல் நடத்தப்பட்ட தாக்குதலில் மரணமானார்.
மரண அத்தாட்சிப் பத்திர இல : 5692

56



கலந்தர் முஹம்மது அனிபா, 119, ஆசாத் மௌலானா வீதி, பொத்துவில்-02.
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : செங்காமம், 1989.10.20
மரணம் பயங்கரவாதிகளினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இல : 1153

57



செய்யதலவி, அஷ்செய்யது யூசுப், நத்வா வீதி, மூதூர் 05.
பிறந்த திகதி : 1983.10.7
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் கலாச்சார மண்டபம் மூதூர், 2000.10.02, மரணம் பயங்கரவாதிகளினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1582

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசீர் சேகுதாவூதுக்கு ஒரு போராளியின் பகிரங்க மடல்

தேசியப்பட்டியல் பிரதியமைச்சா் அவா்களே! அஸ்ஸலாமு அலைக்கும்.

பிரதியமைச்சு தரும் சுகபோகத்தில் நீங்கள் நலமாக இருப்பீா்கள். நிறையப் பணம் உழைத்துவிட்டதாகவும் கேள்வி. முஸ்லிம் காங்கிரஸ் பேராளிகள் நாங்கள் நலமாக இல்லை. எங்கள் கச்சையையும் நீங்களும், புலிகளும் சேர்ந்து பறித்துக்கொண்டீர்கள். அண்மைக்காலமாக உங்களுக்கு 'கோட்டும், சூட்டு'ம் வேறு.

தேசியப்பட்டியலை கைப்பற்ற நீங்கள் மேற்கொண்ட யு.என்.பி. காங்கிரஸ் ஒப்பந்த கையாலாகாத்தனத்தால் முஸ்லிம் சமூகம் நாசமாய் போய் நலமில்லாமல் காணப் படுவதை தெரியப்படுத்த. நீண்ட காலமாக கடிதம் ஒன்றை எழுத நினைத்திருந்தேன். வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பாராளுமன்றத்தில் நீங்கள் வெட்டி. முறித்து வீர வசனம் பேசியதை பத்திரிகைகளில் பார்த்த பின்தான் இனியும் தாமதிக்கக் கூடாது என்று இம்மடலை எழுதுகிறேன்.

தேசியப்பட்டியல் பாராளுமன்ற பிரதிநிதித் துவத்தை பெறுவதில் கின்னஸ் சாதனை படைத்தவா் நீங்கள். அஸ்வா். ஸக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோா் ஒரே கட்சிகளில்தான் தேசிய பட்டியலில் பெயர் பதித்தனா் நீங்களோ 1989ல் ஈரோஸ் தமிழா் இயக்கத்தில் தேசியப் பட்டியல் 2002ல் நுஆ முஸ்லிம் கட்சியில் தேசியப்பட்டியல். 2001ல் யு.என்.பி. சிங்கள கட்சியில் தேசியப்பட்டியல் எல்லா இன கட்சிகளிலும் தேசியப்பட்டியல் அங்கத்தவராகும் கலை உலகில் உங்களுக்கு மாத்திரமே தெரியும் என்பதை நீங்கள் நிரூபித்துள்ளீா்கள். நல்லம் . ஆனால். ஏறாவூரில் முஸ்லிம் காங்கிரஸ்காரர்களாகிய எங்களை அன்று ஈரோஸில் இருக்கும்போது கட்டிவைத்தடித்ததை நாம் மறக்கவில்லை.

தேசியப் பட்டியல் கதையை ஏன் இப்போது ஆரம்பித்து சமூகத்தை குழப்புகிறான் என்று நீங்கள் ஆத்திரப்படுவது எனக்கு விளங்குகிறது. ஒரு முறையாவது வெற்றியடைந்து விட வேண்டும் என்று நீங்கள் துடித்தது. துடித்துக்கொள்வது எல்லாம் மக்களுக்கு தெரியும்.

நாசமாய் போன தேசியப்பட்டியல் களங் கத்தை துடைக்கவேண்டும் என்ற உங்களின் ஆதங்கமும் எமக்கு விளங்குகிறது. நீங்கள் தேசியப்பட்டியலில் இருந்து கொண்டு.மக்கள் ஆதரவினால் வெற்றியடைந்த ஹாரிஸ். அன்வா் இஸ்மாயில். றிஸாத் பதியுத்தீன். தௌபீக். திடீா் தௌபீக் ஆகியோா்களுக்கு பிரதியமைச்சா் பதவி கிடைப்பதை தடுத்து நீங்கள் பிரதியமைச்சா் ஆன மா்மத்தை இன்னும் நீங்கள் போராளிகளுக்கும். முஸ்லிம் சமூகத்திற்கும் துலக்கவேயில்லையே!


அடிக்கடி. நீங்கள் தேசியப்பட்டியல் என்பதை மறந்து அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றியடைந்தவா் போன்று வீராவேச அறிக்கை விடுகிறீா்கள். அதிலொன்றுதான் பாராளுமன்றத்தில் நீங்கள் புலம்பிய வரவு செலவு திட்ட விவாதத்தில் ஒரு பத்திரிகையின் முழுப்பக்க அறிக்கை! இதே போன்று நீங்கள் அடிக்கடி புலம்புவதை ஞாபகப்படுத்துகிறேன்.

*01. புலிகளுடன் ஒப்பந்தம் செய்து விட்டு வந்து ஏறாவு ரில் வீரனை வீரன்தான் மதிப் பான். பிரபாகரன் என்ற வீரன் பசீா் என்ற வீரனை மதித்துத் தான் ஒப்பந்தம் செய்தானே தவிர ஹக்கீமிற்காகவோ. முஸ்லிம் சமூகத் திற்கா கவோ செய்யவில்லையென்று ஓயாமல் சொல்லி யது இன்னும் ஏமாந்த போராளி களைான எமக்கு கேட்கிறது.*

*02. புலிகளுக்கு வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை கொடுப்பதே ஒரே வழி என்று புலிப் புராணம் பாடினீா்கள். தற்போது முஸ்லிம்களுக்கு தனியான அலகு வேண்டும் என்று கூறி முஸ்லிம்களை ஏமாற்றப் பார்க்கிறீா்கள். முஸ்லிம்களின் தலையில் செங்கல்லையும் அரைக்கலாம் என்ற வித்தை தெரிந்தவா் நீங்கள்.*

*03. அமையவிருக்கும் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபையின் பிரதி முதலமைச்சா் நானே என்று சொல்லி கூட இருந்தவா்களை குஷிப்படுத்தினீா்கள். நோர்வேக்குச் சென்று பயிற்சியெடுத்தது இதற்காகத்தான் என்று இரகசியமாக எல்லோருக்கும் சொன்னீா்கள்.*

*04. இரண்டு முழு அமைச்சுப் பதவியை ரணிலிடம் கேட்டீா்கள். வென்று வந்தால் தனக்கு ஒன்று என்று ஒதுக்கீடு செய்தீா்கள். வென்று வந்த அதாவுல்லாஹ்வுக்கு முழு அமைச்சை கொடுக்க கூடாது தலைமைத்துவ போட்டி வரும் என்று ஹக்கீமுக்கு மாத்திரம் ஓதினீா்கள். உங்கள் சுய நலத்திற்கு கட்சியை சுக்கு நூறாக்க அப்போதே கங்கணம் கட்டி வெற்றியடை ந்தீா்கள். உங்களின் தனிப்பட்ட நலனுக்காக முஸ்லிம் சமூகத்தின் எதிர் காலத்தை குழி தோண்டிப் புதைத்து விட்டீா்கள்.*



*05. ஹக்கீமுக்கு நானில்லாமல் சுயமாக முடிவெடுக்கவே தெரியாது என்று போராளிகளிடம் சொல்லி பெருமைப்பட்டீா்கள். நீங்கள் சொன்னது உண்மைதான் என்று மெய்ப்பித்து காட்டினீா்கள்.*

*06. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்கு 01 பிரதிநிதிதான் வரவேண்டும் என்று திட்டம் தீட்டி செயற்படுத்தி வருகிறீா்கள். ஓட்டமாவடியில் ரகசிய ஆதரவாளா்களிடம் திட்டத்தை சொல்லி ஹரீஸ். அன்வா் இஸ்மாயிலுக்கு வேட்பாளா் தேர்வில் கல்தா என்றும் நௌஸாத்தை உள்வாங்குவேன் என்றும் மார்தட்டியிருக்கிறீா்கள்.*

*07. கல்குடா பிரதிநிதித்துவத்திற்கு ஆப்பு வைப்பேன் என்று ஏறாவு ரில் இடித்து ரைத்துள்ளீா்கள். அமீா் அலியையும். பரீட் மாஸ்டரையும் வேட்பாளராக்கி வேட்டு வைக்க திட்டமிட்டுள்ளதை இப்போதே ஏறாவு ா் போராளிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளீா்கள்.*

*08. நான் அடுத்தமுறை மினிஸ்டராவேன். ஹக்கீம்தான் பாவம் என்று மிக இரகசியமாக கோடினேட்டா் கபு ரிடம் கூறியுள்ளீா்கள்.*

*09. மிலிந்த மொரகொடவை ஜனாதிபதியாக்கியே தீருவேன் என்றும் மிலிந்த அமெரிக்காவுக்கும். இந்தியாவுக்கும் வேலை செய்பவா். தனது தேசியப்பட்டியல் இரு நாடுகளாலும் உறுதி செய்யப்படும் என்று நம்பிக்கையாளா்களிடம் உரைத்திருந்தீா்கள்.*

உங்களின் புலம்பலில் கொஞ்சத்தை ஞாபகப்படுத்தியிருக்கிறேன். நீங்கள் இதை மறுக்கமாட்டீா்கள்.

நீங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு செய்த காட்டிக் கொடுப்புக்களில் சிலதையும் உங்களுக்கு ஞாபகப்படுத்தி விட்டு அந்தப் பத்திரிகையின் முழுப் பக்க அறிக்கைக்கு செல்லலாம் என்று நினைக்கின்றேன்.

*01. சேபால ஆட்டிக்கல ராணுவத் தளபதியாக இருந்த நேரம். ஈரோஸில் நீங்கள் இருந்து கையெழுத்து வைத்துப் பெற்ற டீ 81 ரக 700 துப்பாக்கிகளையும் புலிகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்து ஏறாவு ரில் முஸ்லிம்களைக் கொல்ல காரணமாக இருந்தீா்கள்.*

*02. உங்களுக்கு 2000ல் பிரதி மந்திரி பதவி கிடைக்கவில்லை யென்பதற்காக மகாராஜா மகேந்திரனுடன் இணைந்து சந்திரிகா அரசை கவிழ்த்து முஸ்லிம்களை புலிகள் அடிமைப்படுத்த யு.என்.பி யுடன் கூட்டு வைத்து முஸ்லிம்களை நாடற்றவா்க ளாக்கினீா்கள்.*

*03. பாலகுமாரின் வேண்டுகோளின் பேரில் நோர்வே அனுசரணையுடன் புலிகளுடன் முஸ்லிம்களின் தலைமையை ஒப்பந்தம் செய்ய வைத்து ஏமாற்றியுள்ளீா்கள். ஹக்கீம் பரவாயில்லை என்று பிரபாகரன் சொன்னதாக டுப் வேறு அடித்தீா்கள்.*

*04. முஸ்லிம் சமூகத்தின் தலைமையை பிரபாகரனின் முன்னால் கைகட்டி நிற்க வைத்து 'தம்பி' என்று அழைக்க வேண்டும் என்று ஹக்கீமுக்கு ஆலோசனை வழங்கி புலிகளின் கட்டளையை நிறைவேற்றியுள்ளீா்கள்.*

*05. முஸ்லிம்களின் காணிகளை புலிகளிடம் பெற்றுத்தருவதாகக் கூறி குழு அமைத்து ஏமாற்றி வருகிறீா்கள்.*

*06. பேச்சுவார்த்தைக்கு தனித்தரப்பாகவே ஹக்கீம் செல்கிறார் என்று நம்பவைக்க நாடகமாடினீா்கள். ஹக்கீம் செல்வது தனித்தரப்பு அல்ல என்று மக்களுக்கு தெரிந்தவுடன். மெல்ல தலையை ஆமை போல் உள்ளுக்குள் இழுத்துக் கொண்டீா்கள்.*

உங்கள் காட்டிக் கொடுப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம். உதாரணத்திற்கு மாத்திரம் சில வற்றை ஞாபகப்படுத் தியுள்ளேன்.

இப்போது உங்கள் பாராளுமன்ற விவாதத் திற்கு வருகிறேன். கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு தனியான ராணுவம் அமைக்கப்பட வேண் டும் என்றும் பொலிஸ் படை அமைக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்றத்தில் நீங்கள் கா்ச்சித்ததை ஞாபகப்படுத்துகிறேன்.

நீங்கள் வாய்ச்சொல் லில் வீரா் என்று தொடா்ந்து நிரூபித்தே வருகிறீா்கள். அந்த வரிசையில் முஸ்லிம் இளைஞா்கள் குண்டு கட்டிக்கொண்டு போ ராட்டத்தில் குதிப் பார்கள் என்று வாய்ச் ஜாலம் அடித் துள்ளீா்கள். உங்க ளையும் ஹக்கீமையும் நம்பி முஸ்லிம் இளை ஞா்கள் குண்டுகட்டிப் பாய்வதற்கு ஒன்றும் பைத்தியக்காரா்கள் அல்ல.

உங்கள் பதவி ஆசைக்காக நீங்கள் முஸ்லிம் காங்கிஸில் இணைந்தீா்கள். பின் னா்தான் விளங் கியது நீங்கள் வெறும் மண் குதிரையென்று. முகமூடியணிந்து பொய்யான தீவிரவாதம் பேசிக்கொண்டு முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற அரசியல் புரியாது இளைஞா்களை தீவிரவாதத்தை நோக்கி தள்ளுவதாக பாராளுமன்றத்தில் வீரம் பேசியுள்ளீா்கள். இயற்கையில் நீங்கள் சரியான பயந்தாங் கொள்ளி என்று உங்கள் நண்பா் அபூ ஹனீபா கூறுவது இப்போது எமக்கு ஞாபகம் வருகிறது.

முஸ்லிம் இளைஞா்களுக்குள் இருக்கும் போராட்ட உத்வேகத்தை போலியான தீவிரவாதம் என்று கொச்சைப்ப டுத்தியுள்ளீா்கள்.

உங்களை நம்பி ஒருவரும் போராட வெளிப்பட மாட்டார்கள் என்று தெரிந்ததும். தேசியப் பட்டியலுக்கு மண் விழும் என்ற அச்சத்தில் காரியம் சாதிக்க இப்போதே திட்டமிடுகிறீா்கள்.

தோ்தல் ஒன்று வந்தால் பிரதியமைச்சா் பதவிக்கு "அம்போ" என்று கணக்குப் போட் டவுடன் புதிய தோ்தலினால் இனப்பிரச் சினையை தீா்க்க முடியாது என பாராளு மன்றத்தில் ஞான உபதேசம் செய்துள்ளீா்கள். கண்கள் கலங்கி. தோ்தல் வருகிறது என்றால் ஏன் நடுக்கம் வருகிறது உங்களுக்கு. முடியு மானால் தோ்தலில் நின்று மட்டக்களப்பில் வென்று பாருங்கள். நீங்களும், ஹக்கீமும் யு.என்.பி. யிடம் வாங்கிய நன்கொ டைகளுக்காக யு.என்.பி யிலேயே சங்கம மாவீா்கள் என்று எமது மக்களுக்கு நன்றாகவே தெரியும். அதனை மறைப்பதற்கு இப்போது வேசம் போடுகிறீா்கள்.

மக்களுக்காக அல் லாது வெறும் வயிற்றுப் பிழைப் புக்காக் அரசியல் நடத்துகிறீா்கள் என்பது எமக்குத் தெரியும். ஏறாவூரில் இருக்கும் ஆதரவு உங்களுக்குறியதல்ல. அது முஸ்லிம் காங்கிரஸுக்கு விழும் வாக்கு கள்தான் ஏறாவூரில் உங்களுக்கு இருக்கும் ஆதரவு. மக்கள் உங்களை ஆதரிப் பதாக நீங்கள் கற்பனை கோட்டை கட்டி யிருக் கிறீா்கள். ஒவ் வொரு தோ்தலி லும் நீங்கள் எடுத்த வாக்குகளை மீண்டும் திருப்பி பார்க்காது முஸ்லிம் மக்களை கரையேற்ற வந்த பசீா் போல் அறிக்கை மன்னராக காலத்தை கடத்துகிறீா்கள். முஸ்லிம் சமூ கத்தில் இருக்கும் துரோகிகளில் முதல்தர மானவா் நீங்கள்தான் என்பதை உங்கள் பக்கத்தி லுள்ளவா்களிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

இறுதியாக ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இளைஞா்கள் நீங்கள் எச்சரிப்பது போல் குண்டுடன் பாய்வார்கள். அதற்கு தயாராக இருக்கிறார்கள். முதலில் உங்களைப் போன்ற முஸ்லிம் தேசத்தை அடகுவைககும, கையாலாகாத ஒபபநதஙகளை செய்து சமூகத்தை பேய் காட்டும் எத்தா்களுக்கும் . போலியான தலைமைகளுக்கும் என்பதை நினைவில் வைத்திருங்கள். அதன் பிறகே தனது சமூகத்தை அடிமைப்படுத்தும் அரசியல் எதிரிகள் பக்கம் இளைஞா்கள் திரும்புவார்கள்.

அல்லாஹ். உங்கள் பதவி ஆசையை துறந்து சமூகத்துக்கு பாடுபட உதவி புரிய பிரார்த் திக்கின்றேன். உண்மையான ஆன்மீகம் பதவியை துறப்பதே.

வஸ்ஸலாம்.

**முஸ்லிம் காங்கிரஸ் போராளி - ஏறாவு ர்.**

## நாளைய விடியலுக்காக...

முகவரியிழந்து
பெரும் ரணங்களோடு
ஊஞ்சலாடுகிறோம்...!

இருப்பிடங்கள்
இதயங்களில்
வெருண்டதால்
'அகதி' எனும் நாமத்துடன்
உரிமைகளிழந்து...

வடக்கிற்கும்
கிழக்கிற்கும்
பாலமமைப்பவர்கள் நாம் என
தக்குரலிடுபவர்கள்
எங்கள் தட்டுகளில்
ஒரு 'பைசா' கூட
இடாமல் 'இவனுக்குமா?' என
மனதாலும் தள்ளுகிறார்கள்...

தெற்கிற்கு
சல்லடையாக்கப்பட்ட
நெஞ்சத்தூடு
பின்னிய கால்களோடு
செல்கையில் -இவன்
ஹிரோஷிமாவைச்
சார்ந்தவனா?
எனக் கேள்விக் கணைகள்...
உரிமைகளைப்
பெற்றுத்தருவதாய்
உரத்துக் கூறுபவர்கள்



இன்னும் ஊளையிடுவதனால்
ஊமைச்
சனங்களாக இன்னும் நாம்...

இன்னும்
இன்னும் எங்களுக்குள்
புதைகுழிகளும்
ரவைகளும்
கழுத்து நெரிப்புக்களும்...

எங்கள் உரிமைக்காக
காத்திருக்கையில்
நாளைய நாளுக்காக
விரல் விட்டெண்ணுகையில்
கிண்ணியாவில்
மீண்டும் பல்லவி...!
எங்கள் உரிமைகளுக்குப் பதிலாக
பட்டப் பகலில்
அடாவடித்தனங்கள்...!

நாளைய தினம்
எங்களுக்குள்
விடியல் வருமா என்பதில்
இக்கணமும் சந்தேகந்தான்?

- மதுராப்புர
**கலைமகன் பைரூஸ்**
06122003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நம் சமுதாய மைந்தர்கள் சகல துறைகளிலும் விழிப்படைய வேண்டும். சமகால தேசிய பிரச்சினைகளைப் பற்றி சிந்திக்கும்போது, அரசியல் துறையில் அவசியம் நம் சன்மார்க்க சகோதரர்கள் விழிப்படைந்தாக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். இரண்டு தசாப்த கால வயதுடைய இனப்பிரச்சினைக்கு, இன்னுமே தீர்வு கண்டும் காணாமலும் நாடு தடுமாறுகிற நிலையில், விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, போர்நிறுத்தம் ஈராண்டுகள் நடைமுறைப் படுத்தப்பட்ட சூழலில், இடைக்கால நிர்வாகத்திற்கான திட்டவரைவு விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்றாம் நாள், ஜனாதிபதி மூன்று முக்கிய அமைச்சுக்களை திடுதிப்பென பொறுப்பேற்றதை அடுத்து, உருவான அரசியல் நெருக்கடியின் அலைகள் சதாவும் கரைபுரண்டு கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் நம் முஸ்லிம்கள் குறிப்பாக, அரசியல் ரீதியில் விழிப்படையவே வேண்டும். இன்றைய நிலையில் முஸ்லிம்கள் விழிப்படையாமல், எப்போதும் போன்று சும்மாவே இருந்துவிட்டால், எதிர்காலத்தில் மிகப் பெரிய பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். அத்தகையதொரு 'துர்ப்பாக்கியம்" ஏற்படக் கூடாது என்றால், வெள்ளம் வருமுன் அணை கட்டும் நோக்கில், இப்போதிருந்தே அதற்கான முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

'முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்கு" அடிப்படைத் தேவை எது என்றால், சமூகம் சகல துறைகளிலும், மிகக் கட்டாயமாக அரசியல் துறையில் விழிப்படைந்தாக வேண்டும் என்பதுதான்!

சமூகம் விழிப்படைய வேண்டும் என்றால், யார் அதனைச் செய்வது?

சன்மார்க்க உடன்பிறப்புக்களே இந்தக் கேள்விக்கு முல்லாவினால் சமுதாய மட்டத்தில் பலரை விரல் நீட்டி சுட்டிக்காட்ட முடியும். ஆனால் எவருமே சமுதாயப் பற்றுறுதியோடு, தமக்குரிய சமுதாயக் கடமையை பொறுப்புணர்வோடு செய்வதில்லை என்ற கவலையை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அரசியல் ரீதியில் விழிப்புணர்ச்சியை ஊட்டவேண்டிய கடப்பாடுள்ள அரசியல் தலைவர்களைச் சற்றே திரும்பிப் பாருங்கள். விழிப்படையச் செய்யும் விளைவில் யார் இருக்கின்றார்கள்? பௌத்த பேரினத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான இரு கட்சிகளிலும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களில் ஒருசாரார் செய்வது, பேசுவது மறுசாராருக்கு பிடிப்பதில்லை. இரு சாராரும் முஸ்லிம் சமுதாயம் குறித்துத்தான் பேசுகின்றனர். பொதுப்பிரச்சினையில் சமுதாய நலன்கருதி பொது உடன்பாட்டுக்கு, இரு பிரதான கட்சிகளினதும் முஸ்லிம் தலைவர்கள் வருவதில்லை. எதிலும் எப்போதும் கீறியும் பாம்பும் கதைதான்!

முஸ்லிம்களின் தனித்துவம் காத்து, முஸ்லிம் சமுதாயத்தின் அரசியற் சக்தியை ஒன்றுதிரட்டி, பேரம் பேசி பெரும்பணி புரிய வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை எடுத்து நோக்குங்கள். அங்கேயும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஈரணிகளாக இரண்டுபட்டுக் கிடக்கின்றனர். சமீபத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், சமுதாயப் பிரச்சினையில் பிரிந்து நிற்கும் அணியினர் ஒன்றுபட்டு பணியாற்ற அழைப்பு விடுத்தார். மற்ற அணியின் தலைவர் எஸ். சுபைர்தீன் இந்த அழைப்பை வரவேற்றதுடன், 'இது காலந்தாழ்த்தி விடுக்கப்பட்ட அழைப்பு" என்றும் கூறியிருந்தார். இருப்பினும், இன்றுவரை உரிய இலக்கினை எந்த ஒற்றுமை முயற்சியும் எட்டவில்லை என்பது வேதனைக்குரிய விடயம்.

## ஜும்ஆ பள்ளிவாயல்கள் நம்மவர்களை விழிப்படையச் செய்ய முன்வர வேண்டும்!

சமுதாய நலன்பேணுவதற்காக முன்வந்த முஸ்லிம்களின் ஏனைய சிறுசிறுகட்சிகள் எதுவும் விழிப்படையச் செய்யும் நிலையில் இல்லை. முஸ்லிம் அறிஞர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், ஊடகத்துறையினர் எவருமே சமூகத்தை ஒன்றிணைக்கவோ, விழிப்படையச் செய்யவோ எவரும் முன்வருவதாக இல்லை. எல்லோருமே மௌன சாம்ராஜ்யத்தின் மன்னர்களாகவே இருக்கின்றனர்.

ஊடகத்துறைகளில் பணியாற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்களோ தங்களது பதவியையும், தொழிலையும் பாதுகாக்கும் நோக்கில், தங்களது மௌனத்திற்கு நியாயம் கற்பிக்க, ஒவ்வொரு காரணங்களை கூறுவதில் திருப்தியடைந்து விடுகின்றனர். இந்த முஸ்லிம் ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து, தங்களது பதவிக்கும், தொழிலுக்கும் பங்கம் வராமல், சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஊட்ட, எத்தனையோ வழிகள் இருக்கவே செய்கின்றன. ஏனோ முஸ்லிம் ஊடகப்பிரிவினர் துடிப்போடு செயல்படுவதாய் இல்லை.

இந்த நிலையில், யார்தான் சமூகத்தை விழிப்படையச் செய்யப் பொருத்தமானவர்கள்?

நம் கத்தீப்மார்கள் ஜும்ஆவில் நிகழ்த்தப்படும் குத்பா உபந்நியாசத்தை சரிவர கையாண்டால், எவருமே தட்டி எழுப்பாத இந்த சன்மார்க்க சமுதாயத்தை அழகாக விழிப்படையச் செய்யலாம், செய்ய முடியும். எந்தப் பக்கத்து அரசியலையும் சாடாமலும், புகழ்மாலை சூடாமலும், எல்லாப் பக்கத்து கோணங்களையும், கோலங்களையும் தொட்டு விளக்க வேண்டும். சமூகம் எதிர்நோக்கும் அபாயங்களையும், பாதிப்புக்களையும் சுட்டிக் காட்ட வேண்டும். அரசியல் அறிவை ஊரறியச் செய்ய வேண்டும். இது சாத்தியமாகுமா? பள்ளிவாசல்களில் தொழுகை நடத்தும் கதீப்மார்களும், பேஷ் இமாம்களும் நாட்டு நடப்புக்களை ஜமாத்தாருக்கு விளக்கும் வண்ணம் தகுதி பெற்றுள்ளனரா? நம் உலமாக்களில் எத்தனை பேர் அன்றாடம் தினசரிகளைப் படித்து, நாட்டு நடப்புக்களை விளங்கியுள்ளனர்? என்பது கேள்விக்குறியன்றோ?

இப்படி வினாக்களைத் தொடுப்பதும் முல்லா அறிந்ததே! எல்லாப் பள்ளிவாசல்களிலும் நிரந்தர ஊதியத்திற்கு பணியாற்றும் கத்தீப் பேஷ் இமாம்களே, அதே பள்ளியில் ஜும்ஆ தொழுகையையும் நடத்திவரும் பாரம்பரியம், நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வந்தது. கடந்த 15-20 வருடங்களில் இப்பாரம்பரியம் மாறி, ஜும்ஆ தொழுகைக்கென பிரபலமான, தரமான உலமா ஒருவர் வரவழைக்கப்பட்டு, ஜும்ஆ தொழுகை நிறைவேற்றப்பட்டு வருகிறது. பள்ளி நிர்வாகம் இதற்கான அனுமதியை வழங்கி சிறப்பித்து வருகிறது.

தரமான உலமாக்கள் நம்மிடையே இல்லாமலில்லை பேருவளை, ஜாமிஆ நழீமிய்யா கலாபீடம், பேரறிஞர் மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களின் சிந்தனைக்கும், நழீம் ஹாஜியார் அவர்களின் செயல்பாட்டுக்கும் உரிய அறுவடையாக, மறைகல்வியிலும், லோகாயத, கல்வியிலும் பாண்டித்தியம் மிக்க 'அஷ்ஷெய்கு" எனும் பட்டதாரி உலமாக்களை உருவாக்கி வருகிறதே.... இந்த உலமாப் பட்டதாரிகளை நாட்டிலுள்ள ஜும்ஆப் பள்ளிவாயல் நிர்வாகங்கள் அழகாகப் பயன்படுத்தலாமே!

நாட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜும்ஆப் பள்ளிவாசல்கள் இருக்கின்றன. பெரும் நகரம் முதல் குக்கிராமம் வரையுள்ள, முஸ்லிம்கள் வாழக்கூடிய அனைத்து ஊர் ஜும்ஆப் பள்ளிகளிலும் இந்த நழீமீக்களைக் கொண்டு, ஜும்ஆ குத்பா பிரசங்கங்களை நிகழ்த்தி, தொழுகை நடத்தி, சன்மார்க்க சகோதரர்களுக்கு தெளிவை உண்டாக்கினால், விழிப்புணர்ச்சி விரைவாய் வந்து, இஸ்லாமிய இல்லங்களினதும், உள்ளங்கினதும் கதவுகளை தட்டத்துவங்கி விடும்.

நம் சமூகம் விழிப்படைந்து விட்டால், முஸ்லிம் அரசியல் தலைமைகளாலும், தேசியத் தலைமைகளாலும் நம்மை எவரும் ஏமாற்ற முடியாது. இது குறித்து சோம்பலாக/ இருந்துவிடாமல் ஷீரியஸாக சிந்திப்போமாக.

**கின்னஸ் புத்தகத்திலிருந்து...**

### மிக நீண்ட கண்டேனா

உலகின் மிக நீண்ட கண்டேனரானது FCL Interstate Transport Services எனும் நிறுவனத்துக்குரியது. இந்த கண்டேனர் 1998ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி டொரிஸ் இன்ஜினியர்ஸ் எனும் நிறுவனத்தினரால் வடிவமைக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் கிவின்ஸ்லாந்திலுள்ள இந்த கண்டேனரின் நீளம் 62 அடிகளாகும். (19 மீட்டர்)

### உலகில் அதிக சுமையைத் தூக்கக் கூடிய இயந்திரம் - போர்க் லிப்ட்

உலகில் அதிகூடிய சுமையை தூக்கக் கூடிய இயந்திரம் சுவீடனில் உள்ளது. Kalmar Lmv எனும் பெயருடைய இதன் மூலம் 90 தொன் பாரத்தை 7 அடி வரை தூக்க இயலும்.

### மிக நீண்ட நோயாளர் வண்டி

உலகின் மிக நீண்ட நோயாளர் வண்டி (அம்பியுலன்ஸ்) Across Trust எனும் நிறுவனத்திற்குறியது. 59 அடி நீளம் கொண்ட இந்த நோயாளர் வண்டி ஐரோப்பியாவில் வணக்கஸ்த்தலங்களுக்கும், சுற்றுலாவிற்கும் நோயாளர்களினால் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்காவிலும் இத்தகைய நோயாளர் வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

### மக்கள் வசிக்கும் உலகின் பெரிய மாளிகை

உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரரான ப்றூனய் சுல்தானுக்குரிய இந்த மாளிகை ஸகானா நூறுல இமாம என அழைக்கப்படுகிறது. இதில் 1788 அறைகளும் 257 குளியலறைகளும் உள்ளன. இதன் நிர்மாணச் செலவு மட்டும் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்த மாளிகையின் பூமிக்கு அடியிலுள்ள வாகன சாலையில் ஒரே தடவையில் 153 வாகனங்கள் நிறுத்தி வைக்கும் வசதியுண்டு.

அறிவெனும்




### அதிக பணம் செலவழித்து கட்டப்பட்ட விளையாட்டு அரங்கு

1998ல் நடைபெற்ற உலக கால்பந்து போட்டியை முன்னிட்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த விளையாட்டரங்கு பிரான்ஸில் உள்ளது. இதனை நிர்மாணிக்க செலவழிக்கப்பட்ட தொகை 466 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். ஒரே தடவையில் 80000 பேர் அமர்ந்து விளையாட்டுக்களை ரசிக்கக் கூடியவாறு இது அமைக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் புனித டெனிஸ் என்பதாகும்.

# முஸ்லிம் குரல்

**புதிர்ப் போட்டி இல - 06**

**அகழ்வு : நிஷாத் கரீம்**

## போட்டி நிபந்தனைகள்

✔ உங்கள் விடைகள் தெளிவான எழுத்துக்களில் எழுதி அனுப்பப்படல் வேண்டும். (விடைத்தாளை நீங்கள் தயாரித்துக் கொள்ளவும்)

✔ சகல வினாக்களுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பிய அதிஷ்டசாலிக்கு பெறுமதியானதும், அறிவு ரீதியா னதுமான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

✔ ஒன்றுக்கு மேலானவர்கள் சரியான விடையை எழுதி அனுப்பும் பட்சத்தில் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார்.

✔ ஏனைய 10 முதல் தர விடைதாரர்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டு பாராட்டுப் பெறுவர்.

✔ நிரப்பப்பட்ட விடைத்தாள் 27.12.2003 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாய் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

✔ **விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி**

**முஸ்லிம் குரல்,**
**புதிர்ப் போட்டி இல - 04**
**181/1 மாளிகாகந்த வீதி,**
**(வைட் பார்க்)**
**கொழும்பு - 10**

இந்தப் பகுதியின் மாதிரி விடைத்தாளில் புதிர் எண்களும் அதற்கான விடை எழுதும் பகுதியும் தரப்பட்டுள்ளன. (காண்க விடைத்தாள் - 04)

**புதிர்கள் :-**

01. முஸ்லிம் என்ற காரணத்திற்காக பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட மன்னார் அரசாங்க அதிபர் யார்?

02. காரைதீவு சந்தியில் வைத்து முஸ்லிம் பொலிஸ் உத்தியோகத்தர்களை தனியாக பிரித்தெடுத்து சுட்டுக் கொன்ற தமிழ் இயக்கம் எது?

03. மர்ஹூம் அமைச்சர் அஷ்ரஃப் அவர்களால் கிழக்கில் அமைக்கப்பட்ட துறைமுகம் எங்குள்ளது?

04. அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் நெற்காணிகளை சுவீகரிக்க சிங்கள சோவனிஸ அரசு புனித பூமியாக பிரகடனப்படுத்திய விகாரை எது?

05. முஸ்லிம்களின் பெருந் தலைவர் பதியுத்தீன் மஃமூத் அவர்கள் பிறந்த இடம் எது?

06. முதன் முதல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற பெண்மணி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

07. குரங்கில் இருந்து மனிதன் பிறந்தான் என்ற இஸ்லாத்துக்கு முரணான கருத்தை கொண்ட டார்வினின் கொள்கை எது?

08. உலகில் வாழுகின்ற மனித இனங்களில் ஒன்றைக் குர்ஆனில் அல்லாஹ் சபித்துள்ளான் அந்த இனம் எது?

09. புலிகள் போன்று முஸ்லிம்களை கொன்று குவித்து, தாயகத்திலிருந்து வெளியேற்றி அண்மையில் சுதந்திரம் பெற்ற நாடு எது?

10. யூதர்கள் உலகை ஆள்கிறார்கள் என்று துணிந்து கூறிய முஸ்லிம் நாட்டு தலைவர் யார்?

### மாதிரி விடைத்தாள் 05

**முஸ்லிம் குரல்**
**புதிர்ப் போட்டி இல- 05**

| புதிர் இல. | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

பெயர் :..........

முகவரி :..........

கையொப்பம் :..........

**புதிர் போட்டி இல. 3இன் விடை**

01. முஸ்லிம் பின் அல் ஹஜ்ஜாஜ்
02. எஸ்.எச். இஸ்மாயில் - புத்தளம்
03. துருக்கி
04. உமர் பின் அப்தல் அஜீஸ் (ரஹ்)
05. செனரத்
06. ஜம்மு கஷ்மீர்
07. சுமையா (ரலி)
08. 103
09. வேர்வலை
10. பீ. ஜெயினுல் ஆப்தீன்

வெற்றி பெற்றவர் :
ப. சுல்பிகார்,
இல. 52 முஸ்லிம் கொலனி,
கதுறுவெல, பொலன்னறுவ

**புதிர் போட்டி இல.4இன் விடை**

01. டொக்டர் பதியுத்தீன் மஃமூத்
02. மஜீத் நகர்
03. ஸாகிறா
04. கல்லோயா குடியேற்றத் திட்டம்
05. எம்.ஐ.அப்துல் அஸீஸ்
06. ஓராபி பாஷா
07. மொரோக்கோ
08. கலே பண்டார
09. பங்கர கம்மன
10. தவளம்

வெற்றி பெற்றவர் :
எம்.ஐ.எம் அஷ்ரப்,
489, ஆஸ்பத்திரி வீதி,
சாய்ந்த மருது.

இருவருக்குமான பரிசு நூல்கள்அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பெயரால் ஒன்றுபடுவார்களா?

**நமது மக்களை ஒன்றுபடுமாறு நாளுக்குநாள் பத்திரிகைகளிலும், மேடைகளிலும் கூவிக் கொண்டிருக்கும் அத்தனை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான வாக்களித்து ஏமாந்து போன மக்கள் சார்பாக உருக்கமான முறையில் விடுக்கும் வேண்டுகோள்!**

ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களித்து இப்போது கையைப் பிசைந்து கொண்டிருக்கும் லட்சக்கணக்கான ஏமாந்துபோன முஸ்லிம் குடிமக்களில் ஒருவனின் குரல் இது. எனது ஊருக்கு என்ன செய்து விட்டார்கள்? எனது பிரதேசத்திற்கு என்ன செய்து விட்டார்கள். எனது சமூகம் இழப்பிற்குட்பட்டபோது என்ன செய்து விட்டார்கள் என்று மனநிலை அமைதிதேடி சஞ்சரிக்கும் குழம்பிய பல்லாயிரக்கணக்கான ஏமாந்து போன முஸ்லிம்களின் ஒருவனின் குரல் இது.

**இப்போது எங்கள் தீர்வு இதுதான் என்பதைத்தெளிவாகச் சுட்டிக் காட்டி விட்டோம். இனி நீங்கள் யாரேனும் மக்களே ஒன்றுபடுங்கள் போராடுவோம்! நாம் ஒன்றிணைந்தால் நமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்!! என்றுமட்டும் கோஷம் போட மேடைகளில் ஏறினீர்கள். உங்களைத் தாக்க நாம் உபயோகிக்கும் ஆயுதம் மிக இழிவானதாக இருக்கும்.**

முஸ்லிம்களின் உயிர்மூச்சாக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃபின் மறைவோடு அம்மணமானது. பதவி ஆசையும், அதிகார வெறியும் கொண்ட ஒரு கூட்டத்தை சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக்காட்டியது. 'நான் தான் தலைவர்" என்பதற்காக சமூகத்தின் பிரச்சினைகளை மறந்து பல லட்சம் செலவழித்து நீதி மன்ற வாசலிலேயே தவம் கிடந்த, மானமிழந்த தலைவர்களின் மாண்புதனைக் கண்டோம். முழு மாவனல்லையும் எரிந்தபோது ஒன்றுபட்ட அரசில் இருந்து ஆதரவை வாபஸ் பெற்று அதிகாரத்திற்காக சமூகத் தையே மறந்து கறிச்சட்டிக்காய் போட் டிபோடும் நாய்க ளைப்போல மாறிப்போன தலைவரே! தலைவியே! மக்கள் பெயரால் கேட்கிறேன் ஒன்று படுங்கள் இனி எப்போதும் இணையாத துருவங்களாக ஒரு தாயின் இரு பிள்ளையையும் மாற்றிவிட்டீர்களே!

கூட்டுக்குடும்பம் போல் இருந்த முஸ்லிம் காங்கிரஸை தகர்த்து எறிந்து விட்டீர்களே! நான் தான் தலைவன்! என்னால் தான் முடியும்! எனக்குத்தான் தகுதி இருக்கின்றது! என்று தன்னையே அத்தனையிலும் முற்படுத்தி வெறிபிடித்த பேய் போல மதங்கொண்ட யானை போல தலைமைப் பித்துப் பிடித்து மமதை கொண்டு ஏன் அலைகின்றீர்கள். அடுத்தவரை குற்றஞ்சாட்ட உங்கள் ஒருவருக்கும் தகுதியில்லை. ஏனெனில் நீங்கள் ஒவ்வொருவரும், வெவ்வேறு விதமான கோரமுகங்களை உங்களிடம் தக்கவைத்துக் கொண்டுள்ளீர்கள். அறிக்கை விட்டே அனைவரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள்! ஒன்றை மட்டும் இப்போது ஞாபகப் படுத்துகின்றேன். எமது மக்கள் எப்போதும் ஏமாளிகள் என்று மட்டும் நினைக்காதீர்கள். இனி நாங்கள் சொல்லப் போகின்றோம். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நன்கு கவனித்து அத்தனைக்கும் பதிலளியுங்கள்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களே! அவரோடு இணைந்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களே! 'அஷ்ரஃப் காங்கிரஸ்' என்றொன்றை உருவாக்கி மக்களை இன்னும் துண்டாக உடைக்க முனைந்த அதாவுல்லா அவர்களே! அவரோடு சேர்ந்து இருப்பவர்களே! நீங்கள் அனைவரும் அப்போது என்ன சொல்லிக்கொண்டிருந்தீர்கள் தெரியுமா? எமது மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் எனத் தொடங்கி முன்னால் சொன்ன அத்தனை டயலொக்குகளையும் அப்படியே அடிப்பீர்கள். ஒரு படி மேலே சென்று எமது மக்களுக்காக எமது பதவிகளை இளப்போம்! "எமது கோரிக்கைகளுக்கு அரசு செவி சாய்க்காவிட்டால் நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசிலிருந்து பதவிகளை தூக்கியெடுத்துவிட்டு வெளியேறிவிடுவோம்! முஸ்லிம்களே ஒன்றுபடுங்கள் நாம் போராடுவோம்".

ஐயா! கனவான்களே! இப்போது நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லவா? சமூகத்தை துண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஒன்று சேருங்கள் எனது பக்கம் என்று அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். பதவிவிலகுவோம் என பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கின்றீர்கள் பதவிகளுக்காக வெறியாட்டம் ஆடுகிறாகள். உங்களின யதாததஙகளை மறநது மககளாகிய எங்களை ஏமாற்றிக் கொண்டி ருக்கிறீர்கள். அவைகள் எங்கே எட்டப் போகின்றன. இப்போது நாங்கள் சொல்லப்போகிறோம் உங்களுக்கு தீர்வு! இனி நாங்கள் சொல்வதைத்தான் நீங்கள் செய்ய வேண்டும். ஏனெனில் நாங்கள்தான் உங்களுக்கு வாக்குப்பிச்சை போட்டு உங்களை இந்தளவுக்கு கொண்டு வந்தது. கேள்வி கேட்காமலே விட்டு வைத்திருந்தோம்.

சரி தீர்வைச் சொல்லாமல் இவ்வளவு பேசியதும் உங்களுக்கு விளங்க வேண்டும் என்றுதான் - அம்மா பேரியலே அவர்சார்ந்தவர்களே! ஐயா ஹக்கீமே! அவர் சார்ந்தவர்களே அதாஉல்லாவே! நீங்கள் அனைவரும் 'அஷ்ரஃப் என்கின்ற மாமனிதனின் வழி நடப்போம்' என்றுதானே பறை சாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள்.

முஸ்லிம் எம்.பி மார்களாகிய நீங்கள் அனைவரும் ஒரே வீட்டுக்குடும்பமாக மாறுவதால் பிரச்சினைகள் தீர்ந்து போகின்றன. சில்லறையாகச் சாக்கடைச் சண்டைபிடித்து ஆளுக்காள் குற்றம் சாட்டி. பழி சுமத்தி...... என்று எதற்கும் வழியில்லை. நியாயமாக அனைவரும் சேர்ந்தே எமக்கான அத்தனை பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணமுடியும். எமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.
இதனை எழுதிவிட்டு இத்தோடு சும்மா இருந்துவிடுவோம்

**காவத்தமுனை முஸ்டீன்**

என்று மட்டும் கனவிலும் நினைக்காதீர்கள்! நீங்கள் ஒவ்வொருவராய் இதற்குப் பதில் சொல்லும்வரை விடமாட்டோம் நீங்கள் ஒவ்வொருவரும் இதற்குப்பதில் அளித்தேயாக வேண்டும். இது எமது ஆணை! இனி உங்களைக் கேள்வி கேட்கத்துணிந்து விட்டோம். அறிவு பெற்றுவிட்டோம் என்பதை மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்துகின்றோம். சரியான முடிவு கிடைக்கும்வரை விடமாட்டோம் ஒன்றை மட்டும் மனதில் பதித்துக் கொள்ளுங்கள் "அடுத்த தேர்தல் வெகுதொலைவில் இல்லை"

## கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

'எல்லா இனங்களும் இணைந்தன்பு கொள்வோம்" என்ற தொனிப்பொருளில் கலாபூஷணம் மருதூர் வாணரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'சமாதானம்" சஞ்சிகை கலாசூரி சிவகுருநாதன், கலாபூஷணம் ஏ.யூ.எம்.ஏ. கரீம், கவிச்சுடர் அன்பு முகைதீன் ஆகியோரின் நினைவாக நடாத்திய நினைவுக்கவிதைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

'நாளைய சந்ததிக்கு" என்ற தலைப்பிலான மரபுக்கவிதை 1ம் இடம் - கவிஞர் பூ . பாநதன்" பொன்கவநாயகம், 515/150 திருமலைவீதி, மட்டக்களப்பு, 2ம் இடம் கவிஞர் அ.க.மு. றிஸ்வின், நெய்தல் நகர், மூதூர் - 1, 3ம் இடம் கவிஞர் ஆர். தம்பிதுரை, மேஃபா திரு எஸ். யுவராஜா (ee), டக் வாரித் தோட்டம், ரங்கல (வழி) கணடி, 'மகளிருக்கு முதலிடம்" என்ற தலைப்பிலான புதுக்கவிதை 1ம் இடம் கவிஞர் ஐ.ஏ. ஹஸன், 21 அல்-அக்ஷா 1ம் குறுக்குத் தெரு, சின்னக்கிண்ணியா, கிண்ணியா - 02, 2ம் இடம் எம்.ஜே.எம். சிறானா, 73/12, மடவள வீதி, கட்டுகஸ்கொட்ட, 3ம் இடம் - கவிஞர் எம்.எம். பாத்திமா ஜெமிலா 15/1, 9ம் ஒழுங்கை போல்ஸ் வீதி, புத்தளம்.

கௌரவப் பரிசு பெறும் கவிஞர் மலைமதி சந்திரசேகரன் 75/22, ரத்கொட்ட வீதி, மாத்தளை, விஷேட பரிசு பெறுபவர் கவிஞர் மூதூர் கலைமேகம் (ஏ.எஸ். இப்றாஹீம்) நடுத்தீவு, மூதூர்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் விரைவில் பதில் நீதிபதி ஏ.எம். பதுறுதீன் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

தகவல் - பி.எம்.எம்.ஏ. காதர் -மருதமுனை.

# கவிக்கோவுக்கு ஒரு கடிதம் - 3

ஏனென்றால் உனது இலக்கு பெரும்பான்மையினரின் அங்கீகாரம்!

நல்ல வேளை! மஹாபாரதத்தில் நீ ஒரு கதாபாத்திரமாக வரவில்லை. அப்படி வந்திருந்தால் சிறுபான்மையினரான பாண்டவர்களைப் பாதுகாக்க வந்த கிருஷ்ண பரமாத்மாவாக ஒரு போதும் வந்திருக்க மாட்டாய். மாறாக கௌரவர்களின் பக்கம் சாயும் சகுனியாகத்தான் இருந்திருப்பாய். அதில் சற்றேனும் சந்தேகமில்லை.

நீ தமிழ் மக்களுக்காக் குரல் கொடுப்பது அவர்கள் மீது பூண்ட அன்பினால் அல்ல. அவர்கள் மத்தியில் உன் பேரையும் புகழையும் பேணிக் கொள்வதற்காககத்தான் அதில் நீ கணிசமான அளவு வெற்றியும் கண்டிருக்கிறாய்.

இப்போது பயங்கரவாதி பிரபாகரப் பைசாசங்களால் இஸ்லாமியர்கள் கொன்று குவிக்கப்படும்போது நீ அதை வாய் திறந்து கண்டித்தால் நீ இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டு - உன் மனசாட்சியை விற்று சம்பாதித்த பேரும் புகழும் என்னாவது? 'ஐயையோ! என்னையும் இஸ்லாமிய அடிப்படைவாதி என்று முத்திரை குத்தி விடுவார்களோ?" வென்று பயந்து நீ மௌனிக்கிறாய். அதன் மூலம் உனது பேரையும், புகழையும், இமேஜையும காப்பாற்றிக் கொள்வதற்கு நீ துடியாய்த் துடிக்கிறாய்.

உண்மையில் சகோதரா உன்னைப் பார்க்கும் போது ரெம்ப பரிதாபமாக இருக்கிறது.

நீ உன் மனசாட்சியை விற்றுவிட்ட போது கூட மனசாட்சி மரித்துப் போகாத தமிழ் மக்கள் இருக்கிறார்கள். அதிலும் யாழ் மண்ணின் மைந்தர்கள் இருக்கின்றார்கள். அத்தகைய ஒருவர் தான் அண்மையில் அமரரான தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் சிவசிதம்பரம் அவர்கள்.

அவர் யாழ் மண்ணில் பிறந்து வளர்ந்தவர். அந்த மண்மீது மாறாத பற்றும் பாசமும் கொண்டவர். என்ன தான் கொழும்பில் கொடிகட்டிப் பறந்தாலுங் கூட அந்த யாழ்ப்பாணத்து மக்களின் இதயமோ பனைமரத்து நிழலை நாடியே பறக்கும். அந்த மட்டுக்கு அவர்கள் தன் தாய் மண் மீது தன்னுயிரையே வைத்திருப்பார்கள்.

யாழ் மண்ணிலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப்பட்ட போது அந்தத் தமிழ் மகன் ஒரு சபதம் செய்தார் "வடக்கு முஸ்லிம்கள் மீண்டும் தன் தாயகமான யாழ் திரும்பும் வரை அந்த மண்ணை மீண்டும் மிதிக்க மாட்டேன்" அதில் அவர் அணுவளவும் அசைந்து கொடுக்கவில்லை. அவர் உயிருடனிருக்கும் வரை - தன் தாய் மண்ணை - மீண்டும் மிதிக்கவே இல்லை.

அன்னாரது ஆவி பிரிந்தாலும் அவரது பூதவுடல் தான் அங்கே கொண்டு போகப்பட்டது.

இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் அவர் ஒரு யாழ். பாராளுமன்ற உறுப்பினர் தனது பதவிக்காக யாழ்வாசிகளின் வாக்குகளை நம்பி வாழ்ந்தவர். ஆயினும் அந்தக் கொள்கை வீரன் தனது மனச்சாட்சியை விற்பதற்கு ஒரு போதும் இசையவில்லை.


உஸ்மான் மரிக்கார்

ஆனால் வடக்கு முஸ்லிம்கள் அந்த மண்ணிலிருந்து அடித்து விரட்டப்பட்டு, பதின்மூன்று வருடங்களாக அகதிகளாய் அலைந்து திரியும்போது தமிழகத்து இஸ்லாமியர்களான நீயும், உனது தம்பிமாரான இன்குலாப்களும், மேத்தாக்களும் வெட்கம் கெட்டுப் போய் யாழ்ப்பாணம் போய் வந்தீர்கள். இஸ்லாத்தைத் துறந்திருந்தால் யாழ் முஸ்லிம்கள் வட மண்ணில் வளமாக வாழ்ந்திருக்கலாம். கலிமாச் சொன்னதுதான் அவர்கள் செய்த ஒரே குற்றம். அவர்கள் தமது மதத்தைக் கால் செருப்பாகக் கழற்றி வைக்காது தமது சொத்து சுகங்களைக் கால் செருப்பாகக் கழற்றி எறிந்து விட்டு அந்த மண்ணைத் துறந்த மாவீரர்கள். அது ஒரு ஹிஜ்ரத் அது ஒரு ஜிஹாத்.

ஆனால் தமிழ்பேசும் இஸ்லாமியனான நீயும் உன் தம்பிமாரான இன்குலாப்களும், மேத்தாக்களும் உண்மையிலேயே இஸ்லாமியர்களாக இருந்திருந்தால் யாழ் மண்ணை மிதித்திருக்கக் கூடாது. மாறாகப் பகீஷ்கரித்திருக்க வேண்டும். - அமரர் சிவசிதம்பரம் அவர்களைப் போல.

"நான் ஓர் இஸ்லாமியன். யாழ் மண்ணிலிருந்த முஸ்லிம்களை ஏன் அநியாயமாக அடித்து விரட்டினீர்கள்? அவர்கள் மீள்குடியேற்றப்படும் வரை மிதிக்க மாட்டோம், யாழ் மண்ணை என்றல்லவா கூறி இருக்க வேண்டும்.

ஓர் அநியாயம் நடந்தால் அநியாயம் செய்யப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டியது ஒரு மனிதனுடைய கடமை. அதிலும் ஓர் இஸ்லாமியனுடைய கட்டாயக்கடமை. அவ்வாறு அநீதி இழைக்கப்பட்டவர் யாராயிருந்தாலும் சரியே. ஒரு யூதனாக இருந்தாலும் கூட அவனுக்காக நாம் குரல் கொடுக்க வேண்டும்.

அதே போல் அநியாயம் செய்பவனை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டியது ஒரு மனிதனுடைய கடமை. அதிலும் ஓர் இஸ்லாமியனுக்கு கட்டாயக்கடமை அவ்வாறு அநியாயம் செய்பவன் யாராயிருந்தாலும் சரியே அவன் ஓர் இஸ்லாமியனாக இருந்தாலும் கூட அவனை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணுகுண்டின் உதயம்

இரண்டாம் உலக யுத்தத்தின்போது சர்வாதிகாரத்துடன் இணைந்து கொண்ட ஜப்பான் போர் முஸ்தீபுகளில் இறங்கி, ஹவாய் தீவில் அமைந்துள்ள பர்ல் துறை முகத்தைத் தாக்கியது. 1941.12.07ம் திகதி நடாத்தப்பட்ட இந்தத் தாக்குதல் காரணமாக பர்ல் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க போர்க் கப்பல்கள் 08ஆம், கப்பற் படை படகுகள் 10ஆம் அழிவுக்குள்ளான துடன், அதிக ளவிலான படையினரும் அழிந்து போயினர்.



இத்தகைய பின்னணியில் ஜப்பான் மீது அணுகுண்டு தாக்குதலொன்றை மேற்கொள்ளாத பட்சத்தில் போரை நிறுத்த முடியாது என்பதே போர் வல்லுனர்களின் கருத்தாக இருந்தது. அதன்படி பயங்கரமான அணுகுண்டை தயாரிப்பது பற்றிய எண்ணம் அமெரிக்கப் படையணியின் ஜெனரலாக இருந்த லெஸ்லி ஆர். க்ரூட்ஸ் என்பவரால் அக்கால அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஹரீ எஸ். ட்ரூமன் என்பவரின் உள்ளத்தில் தூவப்பட்டது. அதன் பின் அணுகுண்டின் நிர்மாணப் பணிகளுக்காக ஜூலியஸ் ஜக்ஷன் ரொபர்ட் ஓபன்ஹைமர் என்ற விஞ்ஞானி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அமெரிக்க வர்த்தகரொருவரின் மகனாகிய ஓபன்ஹைமர் பௌதிகவியலை கற்பதற்காக இணைந்து கொண்ட இளம் அமெரிக்கராவார். மிகத் திறமையான மாணவராகிய அவர் 1927ம் ஆண்டு மே மாதம் நடாத்தப்பட்ட கலாநிதி பட்டப் பரீட்சையில் உயர் தரத்தில் சித்தியடைந்து, 1943ம் ஆண்டு அமெரிக்காவின் லொஸ் அலாமோஸ் இரசாயன கூடத்தின் பணிப்பாளராக நியமனம் பெற்றார்.

பல வருடகால ஆய்வுகளின் பின் 1945.07.16ம் திகதி அமெரிக்காவிலுள்ள நியு மெக்ஸிகோ மாநிலத்திலுள்ள அலமோகோடோ பாலைவனத்தில் T.N.T (ட்ரை நைட்ரோ டூலயின் 15,000 - 20,000 தொன் நிறையுள்ள) எனும் முதலாவது அணுகுண்டு பரீட்சார்த்திக் கப்பட்டது. அதன் முழக்கத்தினால் வெளியேறிய ஒளியா னது சூரிய ஒளியினைக் காட்டி லும் பலமடங்காக இருந்ததுடன், அதன் வெப்பம் 300,000 பாகை சென்டிகிரோட்டாக இருந்தது. அதன் அதிர்வு எத்தகையதெனின், தான் பாரிய அமைதியின்மைக்கு ஆட்பட்டதுடன் கரங்கள் நடுங்கியதன் காரணமாக வாகனத்தை செலுத்த இயலாமல் தன் நண்பரை செலுத்தும்படி ஏவியதாக ஓபன்ஹைமர் கூறியுள்ளார் 1945.08.06ம், 09ம் திகதிகளில் 02 பிலியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட லிட்ல் போய், பெட்போய் எனும் பெயர்களையுடைய இரண்டு அணுகுண்டுகள் ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா, நாகஷாஹி ஆகிய நகரங்களின் மீது போடப்பட்டன. அதன் காரணமாக உயிர் நீத்த மக்களின் தொகை 4 இலட்சத்து 40 ஆயிரமாகும். அவர்களின் விதியை நிர்ணயித்த ஓபன்ஹைமர் 1954.04.12ம் திகதி சர்வதேச யுத்த நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டார். 02 வார காலங்கள் வழக்கு நடைபெற்றது.

ஓபன்ஹைமர் அமெரிக்காவுக்கு மட்டுமல்ல உலகில் வாழும் முழு மனித இனத்துக்கும் சார்ப்பான நியாயமான மனிதர் என்று 1954.05.06ம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், அவரது மனைவி அவரை மிகவும் வெறுத்தார். ஆயுள் முழுவதும் உள்ளத்தால் பலமுறை இறந்த கலாநிதி ஜூலியஸ் ஸக்ஷன் ரொபர்ட் ஓபன்ஹைமர் என்ற விஞ்ஞானி 1957.02.18ம் திகதி தொண்டையில் ஏற்பட்ட புற்றுநோய் காரணமாக நிரந்தரமாக உயிர் நீத்தார்.

## நாம் வாசிக்காதவை

### 01) 30 வருடங்கள் பூர்த்தியாகும் லாபீரின் உலக சாதனை.

இலங்கைக்கு முதலாவது கன்னி உலக சாதனையை வென்று தந்தவர் முகம்மது லாபீர்தான் - லாபீர் அவர்கள் பிலியட் விளையாட்டில் உலக சாதனையை ஏற்படுத்தி டிச-11ம் திகதிக்கு 30 வருடங்கள் பூர்த்தியாகின்றன. அவர் 1973.12.11ம் திகதி பயிலுநர் பிலியட் போட்டியில் வென்று இலங்கைக்கு முதலாவது உலக சாதனையை பெற்றுத் தந்தார்.

தனது 12வது வயதில் பிலியட் களம் புகுந்த லாபீர் பல இந்திய இலங்கை வெற்றிகளின் ஊடாக உலக வெற்றியை நாடிச் சென்ற விளையாட்டு வீரராவார். சிறு பராயத்தில் தும்புத் தடி, கண்ணாடி குண்டுகளைக் கொண்டு விளையாட ஆரம்பித்த லாபீர் அவர்கள் முதல் முதலாக தனது திறமையை 1964ம் ஆண்டே வெளிக்காட்டினார். அவ்வாண்டில் அவர் தேசிய பிலியட் விருதையும், ஸ்நூகர் விருதுகளையும் பெற்றுக்கொண்டார். அவர் 1981.04.27ம் திகதி இருதய நோயினால் எம்மை விட்டும் பிரிந்த வேளை 20 தேசிய பிலியட் விருதுகளையும், 19 ஸ்நூகர் விருதுகளையும் பெறும் அளவிற்கு திறமைசாலியாக இருந்தார். அக்காலத்தில் 09 திறமையான வீரர்களை வென்றதன் மூலமே அவர் உலக சாதனையைப் படைத்தார். ஒரே சுற்றில் 859 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் அவர் மேலுமொரு சாதனையையும் படைத்தார்.

### 02) ரோலண்ட் க்ரொஸ் என்ற பெயர் வரக் காரணம்

ரோலண்ட் க்ரொஸ் எனும் பெயரில் பிரான்ஸில் ஒரு டென்னிஸ் விளையாட்டரங்கு உள்ளது. பிரான்சில் இருந்த மிகத் திறமையான ரோலண்ட் க்ரொஸ் என்ற விமானி இந்த விளையாட்டரங்கு அமைந்துள்ள இடத்தின் மீது விமானத்துடன் மோதி உயிர் நீத்துள்ளார். அவரது ஞாபகார்த்தமாகவே இவ்விளையாட்டரங்குக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### 03) 176 மைல் தூரத்திற்குச் சென்ற ரக்கர் பந்து

ரக்கர் பந்தொன்று போட்டி நடுவில் 176 மைல் தூரத்திற்கு சென்றது என்று கூறினால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? வயல் வெளியொன்றில் நடாத்தப்பட்ட ரக்கர் போட்டியொன்றின்போது விளையாட்டு வீரரொருவர் அடித்த ரக்கர் பந்தொன்று 176 மைல்கள் பிரயாணம் செய்துள்ளது.

நடந்தது இதுதான். விளையாட்டு வீரர் அடித்த பந்து ஒரு திறந்த லொரிக்குள் விழுந்து விட்டது. அதைத் தேடும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டிருந்தபோது அந்த லொரி புறப்பட்டு விட்டது. 02 நாட்களின் பின் அந்தப் பந்தை லாரியின் சாரதி கொண்டு வந்து ஒப்படைக்கும் போது அந்தப் பந்து 176 மைல்கள் பயணம் செய்திருந்தது. அந்த ரக்கர் பந்தை அடித்த விளையாட்டு வீரரின் பெயர் ரிசட் காமர் விளையாட்டு மைதானத்தின் பெயர் காடின்.

## சுகதேகியாக வேண்டுமானால் நீங்கள் நடக்க வேண்டும்

முறைப்படி, சுறுசுறுப்பாக, போதியளவு வேகத்துடன் நடப்பதால் உடல் ரீதியான வளர்ச்சி ஏற்படுவதுடன் அதன் மூலம் பலவிதமான சுகாதார நன்மைகளையும் ஈட்டிக் கொள்ள முடியும். நீங்கள் இதுவரை நடப்பவராக இல்லாவிடில் இன்றே இப்பொழுதே நடக்க ஆரம்பியுங்கள். அமைதியாக சிந்தித்துப் பாருங்கள். நடப்பது என்பது பெரும்பான்மை மக்களின் உடற் பலத்தைப் பொறுத்து நடாத்தப்படுகின்ற உடற்பயிற்சியாகும். உடலுழைப்பில் ஈடுபடாதவர்கள் ஏனைய உடற்பயிற்சிகளைக் காட்டிலும் நடப்பதை யதார்த்தமான சவாலாக ஏற்றுக்கொள்ள விரும்புகின்றனர். நடப்பது என்பதை மக்களின் வாழ்க்கை முறையுடன் மிகவும் சுலபமாக இணைத்துவிட முடியும். நடக்கும்போது ஏற்படுகின்ற உடற்தாக்கம் மிகவும் கீழ் மட்டத்திலேயே இருக்கும். இருகால்கள், மூட்டு இணைப்புக்கள் ஆகியவற்றின் பிரயாசையும் குறைந்தே காணப்படும். ஆகவே, மூட்டு இணைப்புக்களில் ஏற்படும் பாதிப்பும் குறைவாகவே இருக்கும். இன்னும் பல நன்மைகள் கீழ்வருமாறு:-

இருதய நோய்களை தடுத்துக் கொள்வதற்கும், கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்கும் நடப்பது உறுதுணையாகும்

இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

உடல் நிறையைக் கட்டுப்படுத்தலாம்.

நீரிழிவு நோய்க்கான காரணியை நடப்பதினால் இல்லாதொழிக்கலாம்.

நடப்பதால் தசைகளும், எலும்புகளும் பலமடையும்.

உடல் சமநிலை பாதுகாக்கப்படும்.

ஆதரைடீஸ் காரணமாக முழங்காலில் ஏற்படும் வேதனைக்கு நிவாரணமாகும்.

அல்ஷிமர் நோய்த் தாக்கத்திலிருந்து மீட்சி.

கொலோன் புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கவல்லது.

குடல் புற்றுநோய் வராமல் தடுக்கும்.

மனஅழுத்தம் குறையும்.

நல்ல' கொலஸ்ரோலின் அளவை அதிகரிக்கச் செய்யும். (இது குறை வடைவதால் இருதய தமணி நோய் ஏற்படும்)

கிரமமான முறையில் நடை பயிற்சியை மேற்கொள்பவருக்கு மனப்பலம் அதிகரிக்கும். தாங்கிக் கொள்ளும் பலம் உண்டாகும். உடற்கலம் சீரடையும். என்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

வெயில் என்றும் மழை என்றும் பாராது நடப்பீர்களானால், மேற்படி அனைத்து நன்மைகளும் உங்களை வந்தடையும். ஆகவே, இன்றே நடக்க ஆரம்பியுங்கள்.

## எம்மை வாழ்விக்கும் இயற்கை

ஆற்றில் அடித்துக் கொண்டு வந்த ஏனைய கற்களைக் காட்டிலும் குறிப்பிட்ட ஒரு கல் மினுங்க ஆரம்பித்தது. அதற்கு அனைவரும் மாணிக்கம் என பெயரிட்டனர். ஏனைய கற்களும் மினுங்கவும், மாணிக்கமாக மாறவும் எத்தனித்தன. நான் மிக நீண்ட பயணமொன்றை மேற்கொண்டேன். அந்தப் பயணத்தின்போது நான் மிகவும் துன்பப்பட்டேன். நான் சிறாய்ப்புக்குள்ளானேன். களைத்துப் போனேன் அப்படி ஆக ஆக கூர்மை அடைந்து பளபளப்பானேன். அதன் பிறகுதான் நான் மாணிக்கமானேன். என்று அந்த மாணிக்கக்கல் கூறியது. இதனை செவிமடுத்த ஏனைய கற்கள் வெட்கத்தினால் நொலிந்தன.

## எங்கள் காலத்து உவமைக் கதை மாணிக்கம்

இயற்கையானது எம்மிடமிருந்து எதனையும் எதிர்பார்க்காமலேயே எமக்கு அனைத்தையும் பெற்றுத் தருகிறது.எமக்கு வதிவிடங்களையும், அருந்துவதற்கு ஆறு-குளங்களிலிருந்து தண்ணீரையும், உணவுக்காக பழமரங்களையும், பிராணிகளையும் இயற்கை அன்னையே வழங்கியுள்ளாள். ஆனால், எங்கள் சமூகத்தில் வாழும் சில குரூரமானவர்களால் இயற்கையன்னை பாதிக்கப்படுவது துரதிஷ்டமே. நாம் இயற்கையன்னையை பாதுகாப்பதே அதற்கு வழங்கும் மரியாதையாகும்.

## ரியானா மெட்சன் - கின்னஸ் சாதனை புரிந்த அமெரிக்க சிறுமி



அமெரிக்கர்கள் அநேகமாக அனைத்துத் துறையிலும் ஏனைய இனத்தரைக் காட்டிலும் முன்னணியில் உள்ளனர் என்பதை நாம் கூறித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. விளையாட்டு, தொழில் நுட்பம், வர்த்தகம், கல்வி மற்றும் அநேகமான துறைகளிலும் அமெரிக்கர்கள் முன்னணியிலேயே உள்ளனர். இவ்வாறு அவர்கள் அனைத்திலும் முன்னணியில் இருக்கக் காரணம். அவர்கள் சிறுபராயம் முதலே ஒவ்வொரு துறையிலும் பயிற்சிகளைப் பெறுவதே.

அண்மையில் அமெரிக்காவில் வசிக்கும் ஒரு சிறுமி மேற்படி மூலதர்மத்தின் படி முன்னேறி உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார். அவள் ஆறே வயதான ரியானா மெட்சன் ஆவார். முதல் முறையாக பிரதேச பாரம் தூக்கும் போட்டியில் கலந்து கொண்ட ரியானா டெட் லிப்ட் முறையில் 45 கி.கிராம் பாரத்தை தூக்கி (99 இறாத்தல்) உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இத்தனைக்கும் இவர் 28 கி.கிராம் (62 இறாதல்) நிறையுடையவர் என்று அப்போட்டிக்கு அனுசரணை வழங்கிய அமெரிக்க விளையாட்டுச் சங்கம் தெரிவித்துள்ளது. இதன்படி அவள் தன்னைக் காட்டிலும் 60 சதவீத நிறையை தூக்கியுள்ளார். ஆனால் 101 இறாத்தல் நிறையை ரியானா பயிற்சிகளின்போது தூக்கியதாக அவரது தந்தை தெரிவித்துள்ளார். எப்படி இருப்பினும் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் தனது பெயரை பதிவுசெய்து கொள்ளும் அளவுக்கு ரியானா திறமையானவர் என்றும் அவர் தெரிவித்தார்.

## மடல் மடல்

*வேட்டைக்கார*
*வேலு அண்ணாவுக்கு!*
*வெள்ளாடுகள் சார்பில்*
*நாங்கள்*
*எழுதும் மடல்*
*உங்கள் வேங்கைகள்*
*வேலி தாண்டிவந்து*
*எங்கள் வெள்ளாடுகளை*
*வேட்டையாடிச் செல்கின்றன.*

*விபரம் உங்களுக்குத் தெரியும்*
*வரக்கூடிய விபரீதங்களும்*
*உங்களுக்குத் தெரியும்*
*இதனை வளர விட்டு விட்டால்....!*
*எங்கள் வெள்ளாடுகளும்*
*உங்கள் வேங்கைகளை*
*கோட்டைக்குள் புகுந்து.....*
*வேட்டையாடிவிடும்...*
*சொல்லி வையுங்கள்.*

வெலிமடை ஜஹாங்கீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஸ்லிம் உம்மா" என்பது ஓர் உடல் போன்றது. ஓர் உறுப்பு வருத்தம் கண்டால் மற்றைய உறுப்பும் வருந்தும். வருந்த வேண்டும் என்பது நபிமொழி. இதுதான் முஸ்லிம் தேசத்தின் உயிர்நாடி.



இந்தவகையில் எங்கோ ஈராக்கிலும், பலஸ்தீனிலும் அமெரிக்க, ஸ்ரேலிய சர்வதேசப் பயங்கர வாதிகளால் கொல்லப்படும் முஸ்லிம் சகோதரனுக்காய், சகோதரிக்காய் இங்குள்ள முஸ்லிம்கள் ஜனாஸாத் தொழுகையில் ஈடுபட்டு அழுது துஆச் செய்வர். இவ்வாறிருக்கும்போது இலங்கைக்குள் ஒரு பிரதேசத்தில் வாழுகின்ற முஸ்லிம் உம்மத்தின் துன்பத்தில் அதிசயம் அல்லவே.

ஏனெனில், அதுதான் மனிதாபிமானமும், இஸ்லாத்தின் போதனையுமாகும். அந்தவகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற முஸ்லிம்களைப் புலிகள் அடக்கி ஒடுக்கும்போது, அனைத்துப் பிரதேச முஸ்லிம்களும் தம் எதிர்ப்பையும், அனுதாபத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்கள். இதனால் முஸ்லிம்களுக்கிடையிலான இனஉறவு

கைச்சாத்திட வருமாறு) அழைத்தனர்.

'ஒரு ஊரையே கொழுத்தினால் கூட முஸ்லிம்கள் எவ்வித சலனமும் இல்லாமல் மனதால் மாத்திரம் அழ வேண்டும்' என எதிர்பார்க்கின்ற புலிகள், ஒரு தமிழ் மகனை இராணுவ வாகனம் உரசிவிட்டால் கூட ஊரைக் கூட்டி ஊடகத்தின் முன் அழுது புலம்பி உலகுக்கு உடனே அறிவித்து விடுகின்றனர். அந்தவகையில் புலிகளின் ஆர்ப்பாட்டமானது அடுத்த வருக்குத் தம் கருத்தைச் சொல்வதோடல்லாமல் முஸ்லிம்களை அழிக்கவும் ஒழுங்குபடுத்தப்படுவதைக் கண்கூடாகக் காணலாம். 25-06-02 அன்று மூதூரில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களின் கைகளில் பதாகைகளோ, சுலோகங்களோ இருக்கவில்லை. மாறாக தடி, கல்,வாள், சைக்கிள் 'செயின்', பெற்றோல் 'கேன்' என்பனவே (பயங்கர) காட்சி தந்தன. அவ்வார்ப்பாட்டத்தின் மூலம் புலிகள் அடைந்து கொண்ட உச்சப்பயன்தான் மூதூர் ஜபல்நகர் பள்ளிவாசலை முற்றாக எரித்தமை.

## மாமி உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன்குடம்

-அபூ உமைர்-

வளர்வதுடன் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படுகின்ற துன்பியல்கள் வெளியுலகுக்குத் தெரியக்கூடிய வாய்ப்பும் ஏற்படுகின்றது.

இதனை விரும்பாத அரசும், புலிகளும் முஸ்லிம்களின் வெகுஜனப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்தப் படாதபாடுபடுகின்றனர். சில சமயம் புலிகளின் இவ்வஞ்சக வலையில் முஸ்லிம் தலைமைகளும் வீழ்ந்துவிடுகின்றன. இதனால் முஸ்லிம்களது ஆர்ப்பாட்டம், ஹர்த்தால் போன்ற ஜனநாயக மனித உரிமைகளை முஸ்லிம்களைக் கொண்டே தடுத்து நிறுத்தி விடுகின்றனர். இதற்கு முஸ்லிம் சிவில் சமூகச் சந்திப்பு, பிரதேசமட்ட சமாதான ஒப்பந்தம், (மீறி ஹர்த்தால், ஆர்ப்பாட்டம் செய்தால் புகுந்து) வன்முறையைத் தூண்டிவிடுதல் போன்றவற்றைப் புலிகள் கையாள்கின்றனர்.

உதாரணமாக 12-04-2002 அன்று ஒலுவிலில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவச் சமூகத்தால் ஏற்பாடு செய்திருந்த முஸ்லிம் தேசப் பிரகடனத்தைத் தடுத்து நிறுத்தும் முகமாகப் புலிகள் ரவூப் ஹக்கீமை (தான் தயாரித்து வைத்திருந்த ஒப்பந்தத்தில்

நெடுந்தீவில் புலிகள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து கிழக்கு மாகாணம் முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு புலிகள் கட்டளையிட்டனர். அப்போது முஸ்லிம்களது கடைகளையும் மூடுமாறு கேட்டு அடாவடித்தனம் புரிந்தனர். ஆக புலிகள் தம் கருத்தைக் கூற வெகுஜனப்போராட்டம் நடத்துவார்களாம். முஸ்லிம்கள் அவ்வாறு செய்வது ஜனநாயக விரோதச் செயலாம். குழப்பங்கள் ஏற்படுமாம். முஸ்லிம்களது வெகுஜனப் போராட்டம் தமிழரைப் பாதித்த சான்று எதனையும் இவர்களால் காட்ட முடியுமா?

எனவே, முஸ்லிம்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும், அனைத்து முஸ்லிம் பிரதேசங்களிலும் அனுதாபமும், எதிர்ப்பும் தெரிவிக்கப்பட வேண்டும். அனைத்து வெகுஜனப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும். புலிகளின் அச்சுறுத்தல், சமாதானப் பேச்சு, சிவில் சமூகச் சந்திப்பு என்ற தந்திரங்களுக்குப் பலியாகாது முஸ்லிம்களின் வெகுஜனப் போராட்டம் தங்குதடையின்றி முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். இது முழு முஸ்லிம் உம்மாவின் மீதுள்ள காலத்தின் தேவையாகும்.

## கையாலாகாத்தனத்திற்கு யார் பொறுப்பு?

கிண்ணியாச் சம்பவங்களுக்கு தமிழ்க் கூட்டமைப்பினர்தான் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில், அவர்கள்தான் கிடைக்கவிருந்த 550 பொலிசாரைக் கிடைக்காது செய்தவர்கள் எனக் கிழக்குமாகாண ஜம்மியதுல் உலமாசபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக முஸ்லிம் பிரதேசங்களை புலிகள் தொடராகத் தாக்கி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக 17.08.03 அன்று சம்மாந்துறையில் புலிகள் முஸ்லிம்களைக் கொலை செய்தனர். இதனால் முஸ்லிம் எம்.பிக்கள் பிரதமரிடம் 550 பொலிசார் கோரிக்கையை முன்வைத்தனர். முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெறுவதைச் சகிக்க முடியாத தமிழ் கூட்டமைப்பினர் 550 பொலிசார் விடயத்தைக் கைவிடுமாறு கேட்டு பிரதமரிடம் பாதயாத்திரை சென்றனர். பிரதமரும் உடனே பொலிசார் விடயத்தை முதுகுக்குப் பின்னால் போட்டுவிட்டார். இதனால்தான் கிழக்கு மாகான ஜம்மியதுல் உலமாசபை தமிழ்க் கூட்டமைப்பைக் குற்றம் சாட்டுகிறது.

புலிகளானால் என்ன? தமிழர் ஊடகங்களானாலென்ன? தமிழ் கூட்டமைப்பானாலென்ன? முஸ்லிம்களை அழிப்பது அல்லது அடிமைகளாக்குவது என்ற விடயத்தில் அவையனைத்தும் ஒரு குட்டையில் ஊறிக்கொண்டிருக்கும் மட்டைகளே. அந்தவகையில் 550 பொலிசார் விடயத்தில் த.கூ. அமைப்பினர் தம் கடமையைத் தானே செய்திருக்கின்றனர். இப்படியிருக்கையில் அவர்களைக் குற்றஞ்சுமத்துவது நியாயம் தானா?

உண்மையில் 550 பொலிசார் விடயத்தை முன்மொழிந்தவர்களும், அதனை த.கூ. அமைப்பினர் அர்த்தமற்றதாக மாற்றும்போது கையாலாகாதவர்களாக கைகட்டி வாய்புதைத்து நின்றவர்களும் யார்? ஆட்சியின் பங்காளிகளல்லவா! எனவே குற்றஞ்சுமத்தப்பட வேண்டியவர்களாக முஸ்லிம் தலைவர்கள் இருக்க கிழக்குமாகாண ஜம்மியதுல் உலமா சபையினர் தமிழ் கூட்டமைப்பினர் மீது பழிபோட்டு சம்பந்தப்பட்டவர்களின் கையாலாகாத்தனத்தை மூடிமறைக்க முற்படுவது விசனிக்கத்தக்கதல்லவா!

-மூதூர் முகம்மதலி ஜின்னாஹ் ஜே.பி.-

## ஆதி நபி ஆதம் [அலை] அவர்கள் தோற்றம் இப்பூவுலகில் அல்ல! ஆரம்ப மனிதப் பெருக்கம் கண்டது வெமுரியாக் கண்டமுமல்ல!!

03

இதற்குப் பின்வரும் கூற்றுக்கள் விரிவான, தெளிவான, உறுதியான விளக்கங்களாக அமைவது மறைவன்று. விடயத்தை விளங்கவேண்டும் என்கின்ற தூய எண்ணமுடையோர்களுக்கு இது போதுமான ஆதாரங்களாக அமையும். அதேவேளை குதர்க்க விவாதங்களை விரும்பும் எண்ணமுடையோர்களுக்கு எத்தகைய விளக்கங்களை முன்வைத்தும் பயனில்லை என்பது ஒருவகை யதார்த்தமாகும்.

'மிகப்பழங்காலத்திலிருந்தே அரபு நாடு பல இன மக்களின் வசிப்பிடமாக இருந்து வந்திருக்கின்றது. ஆரம்பகாலத்தில் செமித்தியர் (இவர்கள், நபி நூஹ் (அலை) அவர்களின் மக்களுள் ஒருவரான ஸாம் என்பவரின் வழிவந்தவர்)களே அங்கு வாழ்ந்தனர்.

அவர்களிற் சில பகுதியினர் கி.மு. 3500 ஆம் ஆண்டளவில் நைல், தைகிரிசு, யூப்பிரட்டிஸ், முதலிய நதிகள் பாயப்பெற்ற பள்ளத்தாக்குகளுக்கு குடிபெயர்ந்து சென்று வாழலாயினர்".
(நன்றி : இஸ்லாமிய வரலாறு, பாகம் ஒன்று-பன்னூலாசிரியர் டாக்டர் ஏ.எம். அபூபக்கர்)

'அரேபியப் பரம்பரையினரின் தோற்றம் நபி நூஹ் (அலை) அவர்களின் பரம்பரையிலிருந்து உற்பத்தியாகியதாக அரபு வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். நபி நூஹ் (அலை) அவர்களின் மகனான ஸாம் என்பவரே இதற்கு ஆரம்பகர்த்தா எனவும் கருதுகின்றனர்.

கீழைத்தேச ஆராய்ச்சியாளர்கள் இதனையே 'செமித்திய" ப்பரம்பரை எனக் கொள்கின்றனர். அரேபியத் தீபகற்பத்தில் வாழ்ந்தவர்களை அரபுல் ஆரிபா, அரபுல் பாஇதா, அரபுல் முஸ்தஃரிபா என வரலாற்று ஆசிரியர்கள் வகைப்படுத்துகின்றனர்.

அரபுல் ஆரிபா பிரிவினர் கஃதான் கோத்திரத்துடனும், அரபுல் பாஇதா எனும் பிரிவினர் ஆத், தமூத் கோத்திரத்துடனும், அரபுல் முஸ்தஃரிபா எனும் பிரிவினர் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் மைந்தர் இஸ்மாயீல் (அலை) அவர்களுடனும் தொடர்பு படுத்தப்படுகின்றனர்.
(நன்றி : ஸீரதுன்னபியும், முஸ்லிம் உலக ஐக்கியமும் - கலாநிதி கே.எம்.எச். காலிதீன்)

'ஐரோப்பாவின் பாரிய பனி ஊழிக்காலப்பகுதியில், அரேபியா தற்காலத்தைவிட - சிறந்த மழைவீழ்ச்சியைப் பெற்றுவந்தது. இங்கு நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகள் பழைய கற்கால கலாசாரத்திற்குரிய வரலாற்றுக்கு முந்திய மக்கள் வாழ்ந்துள்ளதை உறுதி செய்துள்ளன.

இந்த மக்கள்தான் வளமான பாபிலோனிய பகுதிகளுக்குப் பலதடவை சென்று குடியேறிவந்துள்ளனர். பாபிலோனியர்களாகவும், அஸ்ஸீரியர்களாகவும், ஹிப்றூக்களாகவும், அரேபியர்களாகவும், பெரு நாகரிகங்களை உருவாக்கியவர்கள் இந்த செமித்தியர்களே.... அக்காடியர், சால்டியர், அஸ்ஸீரியர், ஹிப்றூக்களின் இனப்பின்னணியில் இருப்பது செமித்தியராகும்".
(நன்றி : அரேபியர் வரலாறு)

> “ வையகத்தின் ஆரம்பச்சமயமான இஸ்லாத்தின் பின்னர்தான் உலகிற்கு நாகரிகங்கள் கூட எட்டியிருக்கின்றதென்பது வரலாற்றுத் தெளிவுடைய பக்கங்களாகும். ”

- எம்.எம்.எம். நூறுல்ஹக் -

ஆதம் (அலை) அவர்களும், ஹவ்வா (அலை) அவர்களும்) அரஃபாத் தில் சந்தித்துக்கொண்டனர். இதன் பின்னரே மனித உற்பத்தி பெருகத் தொடங்கியதென்று இஸ்லாமிய வரலாறு கூறுகின்றது. அவர்களின் வழித்தோன்றல்கள் உலகம் முழுவதும் பரவினர். அவர்களின் மூத்த மகன் காபீல் யமனுக்கு ஓடி அங்கு மக்களை ஈன்றெடுத்தான் என்றும், அவர்களின் மற்றொரு மகனாகிய ஷீத் (அலை) அவர்களிலிருந்து நபிமார்களுடைய பரம்பரை துவங்கியதென்றும் கூறப்படுகின்றது......

ஷீத் (அலை) அவர்களின் வழிவந்த நூஹ் (அலை) அவர்களின் மக்களில் ஷாமின் வழிவந்தவர்கள் ஷாமி இனத்தவர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் அரேபியாவின் மத்திய பகுதியில் வாழ்ந்துவந்தனர். ஷாமின் வழித்தோன்றல்களாக அரேபியாவின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த ஆத், தமூத், இரம் முதலான இனத்தவரையும் குறிப்பிடலாம்.
(நன்றி : இஸ்லாமிய கலைக்களஞ்சியம், தொகுதி ஒன்று - அப்துற் ரஹீம்)

### உலக நாகரிகங்களும், தோற்றங்களும்

'ஆதியில் நாகரிகம் என்பது எகிப்து, மெசப்பொட்டோமியா, இந்தியா, கீழ்நாடுகளில் முறையே நைல், டைக்கிரிஸ், யூப்ரட்டீஸ், சிந்து ஆகிய ஆற்றுவெளிகளில் தோன்றியது."

'உலகின் தொன்மையான நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகம் ஒன்றாகும். சுமேரிய நாகரிகத்தைத்தவிர, மற்றைய நாகரிகங்கள் யாவும் காலத்தில் எகிப்திய நாகரிகங்களுக்குப் பிற்பட்டவையாகும்."

'யூப்ரடீஸ், டைகிரிஸ் போன்ற இரு நதிகளுக்குமிடையில் தோன்றிய நாகரிகம் மெசப்பொட்டோமியா நாகரிகங்களாகும். இது பல நாகரிகங்களை உள்ளடக்கியது" 'சுமேரியாவில் பார்லி, பேரீச்சம் பழம், காய்கறிகள் பயிரிட்டனர்."

பாபிலோனியா என்பது பண்டைய காலத்தில் டைக்கரிஸ், யூப்பிரட்டீஸ் பள்ளத்தாக்கின் தென்பகுதியாக இருந்தது. இன்று ஈராக் நாட்டின் தென்பகுதியாக உள்ளது...... பாபிலோனிய நாகரிகத்துக்கு அடிகோலியவர்கள் சுமேரிய மக்களே. பாபிலோனிய வாழ் மக்கள் செமித்திய இனத்தைச் சேர்ந்தவர்கள்......."
(நன்றி : உலக நாகரிகங்களும், தமிழர் பெருமையும் - அ. ஜெய்குமார்)

அகிலத்தின் ஆதி மதமான இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களுக்கும், பண்பாடுகளுக்கும், செமித்திய மக்களின் பண்பாடுகளுக்குமிடையில் சில பொதுத்தன்மைகளின் ஒட்டுதலையும், தொடர்புகளையும் அவதானிக்கலாம். வையகத்தின் ஆரம்பச்சமயமான இஸ்லாத்தின் பின்னர்தான் உலகிற்கு நாகரிகங்கள் கூட எட்டியிருக்கின்றதென்பது வரலாற்றுத் தெளிவுடைய பக்கங்களாகும்.

இதனை மேற்படி நாகரிகங்களின் தோற்றங்களையும், வெற்றிடங்களுக்களுக்கிடையில் காணப்படும் சில பொதுத்தன்மைப் பொருத்தத்தினைக்கொண்டே இலகுவில் இனங்கண்டு கொள்ளமுடியும். அரேபியாவிலும், அரபிகளிடமும் காணப்பட்ட சில பண்புகளும் செமித்தியர்களிடமும் காணப்பட்டவை இருப்பு கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநேரம் பழைய உவில்லிய வேதத்தின் வழிநின்று ஆங்கிலேயர் பின்வரும் கருத்துக்களை முன்வைத்திருப்பதும் நமது சிந்தனையைத்தட்டிக் கொடுத்து, நல்ல பல கருத்துக்களை அறிந்து, அவற்றில் நமது கவனத்தை பதியவைக்க வல்லனதாகும்.

'ஆதாமும் ஏவாளும் முதல் மனிதர். உலகிலுள்ள எல்லா மக்களும் இவர்களுடைய சந்ததிகள். ஆதாம், ஏவாள் தோன்றிய இடம் மத்திய ஆசியா, அல்லது மேற்காசியா, அல்லது கிழக்காபிரிக்காவாகும்." (நன்றி: நாம் தமிழர் - பொ. சங்கரப்பிள்ளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் கட்ட ஈழ யுத்தம் எங்கே ஆரம்பமாகும்?

நான்காம் கட்ட ஈழ யுத்தம் எங்கு ஆரம்பமாகும் என்ற கேள்வி இன்று அனைவரினது மனங்களிலும் ஏற்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டிருந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பகிரங்கமாகவே எதிர்க்கின்ற சந்திரிகாவின் கரங்களில் பாதுகாப்பு அமைச்சு உட்பட அளவற்ற அதிகாரங்கள் சென்று விட்டுள்ள நிலையிலும், யுத்த வெறியர்களின் கைகள் ஓங்கிவிட்டுள்ள நிலையிலும், சமாதான ஏற்பாட்டாளர்கள் வெளியேறிவிட்டுள்ள நிலையிலும், அடுத்த யுத்தம் என்பது அதிக தொலைவில் இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அண்மைய வரவு செலவுத்திட்ட முன்மொழிவில் நாட்டின் பாதுகாப்பிற்கென்று கூறி ஒதுக்கப்பட்டுள்ள பெருந்தொகைப் பணமும், அரசாங்கம் வல்லரசு நாடுகளுடன் செய்துகொள்ள ஆரம்பித்துள்ள பாதுகாப்பு வலைப்பின்னல் நடவடிக்கைகளும், அடுத்த யுத்தம் ஒன்று பற்றிக் கட்டியம் கூறுவதாகவே இருக்கின்றது.

கடந்த காலங்களில் சமாதான முன்னெடுப்புக்களின் பின்னர் இடம்பெற்ற அநேகமான யுத்தங்கள் கிழக்கிலேயே ஆரம்பமாகி இருந்தது வரலாறு. பிரேமதாசா அரசாங்கத்துடனான புலிகளின் தேன் நிலவு முறிவடைந்ததைத் தொடர்ந்து, 2ம் கட்ட ஈழ யுத்தம் 11.06.1990இல் கிழக்கில், மட்டக்களப்பில் ஆரம்பமாகி இருந்தது.

சந்திரிகாவுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து ஆரம்பமான மூன்றாம் கட்ட ஈழப் போரும், 19.04.1995 இல் கிழக்கில், திருகோணமலைத் துறைமுகத்திலேயே ஆரம்பமாகி இருந்தது.

இந்த அடிப்படையில் இம்முறை 4ஆம் கட்ட ஈழப்போரும் கிழக்கிலேயே ஆரம்பமாகலாம் என்ற எதிர்பார்ப்பு பலதரப்பினரிடையேயும் காணப்படுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள், இடைக்கால நிர்வாகசபை, சர்வதேச சமூகத்தின் முயற்சிகள் போன்ற விடயங்களையெல்லாம் ஒரு புறம் வைத்துவிட்டு, "மற்றொரு யுத்தம்" என்ற விடயத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு சற்று ஆராய்வோமேயானால், அந்த யுத்தம் ஆரம்பமாவதற்குச் சிறந்த ஒரு பிரதேசமாக மட்டக்களப்பு காணப்படுவதை எம்மால் உணரக்கூடியதாக இருக்கும்.

மற்றொரு யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் புலிகளுக்கு ஏற்பட்டால், அவர்களது சிந்தனை எந்த அடிப்படையில் அமைந்திருக்கும் என்பதைப் பார்த்தோமானால், 4ஆம் கட்ட ஈழயுத்தத்தின் பூகோள அமைவிடத்தை இலகுவாகக் கணிப்பிட முடியும். மட்டக்களப்பைப் பொறுத்தவரை 80 வீதமான நிலப்பரப்பு தற்பொழுது விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் தமிழ் மக்களைக் கொண்ட இந்த மாவட்டத்தைப் பூரணமாகக் கைப்பற்றுவது இன்று புலிகளுக்கு மிகவும் இலகுவான ஒரு விடயம். புலிகளின் முக்கிய படையணிகள், மற்றும் தளபதிகள் வன்னியில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியிலேயே, புலிகள் மட்டக்களப்பின் 80 வீதமான நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தார்கள். ஒரு சிறிய படைத் தொகுதியைக் கொண்டுதான் மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி-கண்டி ஏ-5 பிரதான வீதி உட்பட பல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை புலிகள் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து வைத்திருந்தார்கள்.



சாத்வீகன்
நன்றி:
தமிழ் அலை
(புலிகளின் உத்தியோக இதழ்)

ஆனால் இன்று நிலமை அவ்வாறு இல்லை. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பல முக்கிய படையணிகள் மட்டக்களப்பில் நிலைகொண்டுள்ளன. முக்கியமாக 'ஜெயசிக்குறு எதிர்ச்சமரில்' ஸ்ரீலங்காப் படைகளுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த 'ஜெயாந்தன் சிறப்புப் படையணி' இன்று மட்டக்களப்பில் நிலைகொண்டுள்ளது. மேலதிகமாக, வினோதன் படையணி, விசாலகன் படையணி, அன்பரசி படையணி, மதனா படையணி என்று பல்வேறு கட்டுக்கோப்பான படையணிகள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு, 'ஜோன்சன் மோட்டார் படையணி' என்ற ஒரு பீரங்கிப் படையணியும் மட்டக்களப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் மேலாக, 'ஜெயசிக்குறு எதிர்ச் சமரை தலைமை தாங்கி நடாத்திய கேணல் கருணா அம்மான், மற்றும் முக்கிய தளபதிகள் தற்பொழுது மட்டக்களப்பில் நிலைகொண்டுள்ளார்கள். சண்டைகள் மீண்டும் ஆரம்பமானால் ஒருசில தினங்களுக்குள்ளேயே மட்டக்களப்பு மாவட்டம் முழுவதையுமே கைப்பற்றிவிடும் பலத்துடன் புலிகள் இன்று காணப்படுகின்றார்கள். மட்டக்களப்பின் மையத்தில் அமைந்துள்ள பிரிகேட் தலைமையகத்திற்கு வடக்கிலும், தெற்கிலுமாக இரண்டு பிரதான விநியோகப் பாதைகள் (மட்-கொழும்பு, மட்-கல்முனை) மட்டுமே இன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஒரு பக்கம் கடலையும், மறுபுறத்தில் வாவியையும் கொண்டுள்ள இந்த விநியோகப் பாதைகளை தற்பொழுது புலிகள் நிலைகொண்டுள்ள பிரதேசங்களில் இருந்துகொண்டே, அல்லது ஒரு சிறிய நகர்வின் மூலம் புலிகளால் இலகுவாகத் துண்டித்துவிட முடியும். அடுத்ததாக மட்டக்களப்பிலுள்ள ஒரே விமான ஓடுபாதையும், மட்டக்களப்பில் உலங்குவானூர்திகள் தரையிறங்கக் கூடியதான அனைத்து இடங்களும் ஏற்கனவே புலிகளின் மோட்டார் வீச்சு எல்லைகளுக்குள்தான் அமைந்துள்ளன. எனவே ஆகாயமார்க்கமாக மட்டக்களப்பிலுள்ள படையினருக்குக் கிடைக்கக் கூடியதான உதவிகளும் ஒரு வரையறைகளுக்கு அப்பால் சாத்தியமற்றதே.

மறுபக்கம் பார்த்தால், மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் முக்கிய படையணிகள் எதுவுமே நிலைகொண்டிருக்கவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஸ்ரீலங்கா இராணுவத்தின் 23.3வது காலாட் படைப்பிரிவினர் (Infantry Regiment) மட்டுமே தற்பொழுது மட்டக்களப்பில் நிலைகொண்டிருக்கிறார்கள். இவர்கள் சென்றிகளில் நின்று வெறும் காவல் கடமைகளை மேற்கொள்ளுவதற்கும், சிறிய அளவிலான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மட்டுமே பயிற்றப்பட்ட படைப்பிரிவினர். அடுத்ததாக மட்டக்களப்பில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தின் தொண்டர் படைப்பிரிவும் மூர்க்கமான சண்டையை எதிர்கொள்ள லாயக்கற்றது. மட்டக்களப்பிலுள்ள ஸ்ரீலங்காவின் பொலிஸ் பிரிவு பற்றி கூறவேதேவையில்லை. மட்டக்களப்பின் தென்பகுதியில் ஆரையம்பதி முதல் நீலாவனை வரை நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்காவின் விஷேட அதிரடிப்படையினர், சண்டைகளை எதிர்கொள்ள ஓரளவு பயிற்றப்பட்டவர்கள்தான் என்றாலும், பாரிய யுத்தங்களை எதிர்கொள்ளும் ஆட்பலமோ, வளமோ அவர்களிடம் கிடையாது. ஆகமொத்தத்தில் மட்டக்களப்பைக் கைப்பற்ற புலிகள் ஒரு தாக்குதலை மேற்கொண்டால், நின்றுபிடிக்கமுடியாத ஸ்ரீலங்காவின் படைப் பிரிவுகளே தற்பொழுது மட்டக்களப்பில் நிலைகொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக, 4ஆம் கட்ட ஈழப் போர் ஆரம்பமானால், சண்டைகள் அனேகமாக நாடு முழுவதும் பரவலாக நடைபெறும் என்றே எதிர்வுகூறப்படுகின்றது. வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையகம், தென் இலங்கை என்று பரவலாக தாக்குதல்கள் நடைபெற்று ஸ்ரீலங்காப் படைத்துறைத் தலைமையினதும், விமானப் படையினரதும் சிந்தனைகள் ஒருமுனைப்படுத்தப்படாமல் சிதறடிக்கப்படும் என்றே போரியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். எனவே மீட்புப் படைகளின் உதவியைப் பெறுவது மட்டக்களப்பில் உள்ள ஸ்ரீலங்கா படைகளுக்கு மிகவும் கடினமான ஒன்றாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

## உலக சமாதானத்திற்கு இஸ்ரேல் அச்சுறுத்தலாக உள்ளது!

உலக சமாதானத்திற்குக் கடும் அச்சுறுத்தல் இஸ்ரேலிடமிருந்தே என்று ஐரோப்பியர்கள் தெரிவிக் கின்றனர். 'யுரோபரோமீடர்' என்ற அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போதே இது தெரிய வந்துள்ளது. ஐரோப்பா சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமையவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலக சமாதானத்திற்குக் கடும் அச்சுறுத்தல் இஸ்ரேல்தான் என்று மேற்படி ஆய்வின்போது கலந்து கொண்டோரில் 59 சதவீதமானோர் தமது கருத்தைத் தெரிவித்தனர். 53 சதவீதத்தினரின் கருத்துப்படி, 03 நாடுகள் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளன. அவை அமெரிக்க, வடகொரியா, ஈரான் ஆகிய நாடுகளாகும். உலக சமாதானத்திற்குக் கடும் அச்சுறுத்தல் இஸ்ரேல் தான் என்ற தனது ஆய்வின் முடிவை வெளியிட்ட ஐரோப்பியச் சங்கமும் கூட பாரிய எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளது. இந்த ஆய்வின் முடிவையிட்டு இஸ்ரேல் கடும் சினமுற்றுள்ளது.

## எங்கள் தண்ணீரை விற்பனை செய்யாதே!

நம் நாட்டின் நீர் வளத்தை தனியார்மயப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் ஆத்திரமுற்ற மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். அண்மையில் கோட்டை புகையிர நிலையத்திற்கு முன்னால், அரசின் இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது. ஏராளமானோர் பங்கேற்ற இதில், தாய்மார்கள் கூட தங்களது குழந்தைகளோடு வந்து இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

'எங்கள் தண்ணீரை விற்பனை செய்யாதே' என்ற பதாதைகளை அவர்கள் ஏந்தி நின்றனர். சுத்திகரிக்கப்பட்ட நீர் என்ற பெயரில் ஏற்கனவே போத்தலில் அடைக்கப்பட்டு விற்கப்படும் நீரின் தூய்மை பற்றி கேள்விகள் எழுந்துள்ள நிலையிலேயே, அரசு இந் நடவடிக்கையை எடுத்துள்ளது.

நாட்டையே சர்வதேச முதலாளிகளிடம் அடகு வைத்திருக்கும் அரசுக்கு எதை விற்பதென்பதில், விவஸ்தை கிடையாது போயிருக்கிறது.


மனித வள ஆற்றல் தேவைப்படுகிறது!

மொழிபெயர்ப்பாளர்கள்
ஆங்கிலம் - சிங்களம்
செய்தி ஆசிரியர்கள்

வீடியோ
படப்பிடிப்பாளர்கள்

டிசம்பர் 15 ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

181/1, ஆனந்தமாவத்த,
கொழும்பு - 10.

தொ.பே.இல : 011 4734507

Advt.



நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

சந்தா விபரம்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) 250/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்)- 500/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 1000/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.





முஸ்லிம் சமூக அரசியல் பண்பாட்டுத் தளத்தை மையப்படுத்திய கருத்துக்கள், விவாதங்களை உள்ளடக்கிய மாத இதழ்
பெப்ரவரி 01ஆந் திகதியிலிருந்து...
Advt.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org